# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 32

சுடர் 32 கதிர் 354 ஐப்பசி 29ஆம் நாள் புதன்கிழமை 15 நவம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048


# மீண்டும் குடாநாட்டை அதிரவைக்கும் வாள் வெட்டுக்கள்

*நேற்றும் நான்கு இடங்களில் சம்பவங்கள்; 6 பேர் காயம்*

யாழ்ப்பாணம், நவம்பர் 15

யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாள்களாக மீண்டும் வாள்வெட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இரண்டு பொலிஸார் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டை அடுத்து பொலிஸார் வாள் வெட்டுக் குழுக்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுத்தனர். இதனை அடுத்து அடங்கியிருந்த வாள்வெட்டுக் குழுக்கள் மீண்டும் தலைதூக்கியுள்ளன. கடந்த 4 நாள்களில் மட்டும் 7 இடங்களில் நடந்த 8 வாள்வெட்டுச் சம்பவங்களில் 12 பேர் படுகாயமடைந்தனர்.

29



## தனது தேர்தல் அறிக்கையில் கூட்டமைப்பு உறுதியாக இருக்குமானால் பிளவேற்படாது

*48 மணி நேரத்தில் முதலமைச்சர் குத்துக்கரணம்*

யாழ்ப்பாணம், நவ. 15

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது தேர்தல் அறிக்கையில் உறுதியாக இருக்குமாக இருந்தால் பிளவுகள் இல்லாமல் அந்தக் கட்சி கூட்டமைப்பாக நீடிக்கும். இல்லையேல் பிளவுகள் ஏற்படுவதைத் தடுக்க முடியாது.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நேற்றுத் தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப் பைப் பலப்படுத்தவேண்டுமேயல்லாமல் அதனைப் பிளவுபடுத்தும் வகையில் நடந்து கொள்ளக்கூடாது என்ற சாரப்பட ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியை மறைமுகமாகக் கடிந்து கொண்டதன் பின்னர் 48 மணி நேரத்தில் தனது அந்த நிலைப்பாட்டில் இருந்து குத்துக்கரணம் அடித்துள்ள முதலமைச்சர் இப்படித் தெரிவித்தார்.

முதலமைச்சரால் நேற்று ஊடகங்களுக்கு கேள்வி பதில் என்ற வடிவத்தில் ஓர் அறிக்கை அனுப்பப்பட்டது. அதிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது. அதில் தெரிவிக்கப்பட்ட முக்கிய விவரங்கள் வருமாறு:

கேள்வி: உள்ளூராட்சித் தேர்தல்களைத் தமிழ்ப் பிரதேசங்களில் மட்டும் 29

## ஒற்றையாட்சியை தமிழ் கூட்டமைப்பு ஏற்றதாகச் சொல்வது முழுப் பொய்

*முதலமைச்சருக்கு சுமந்திரன் பதில்*

யாழ்ப்பாணம், நவ. 15

எமது நாட்டுக்கு ஒற்றையாட்சி முறைமை பொருத்தமில்லை என்று இடைக்கால அறிக்கையில் தெளிவாகவே கூறப்பட்டுள்ளது. அப்படியிருக்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை ஒற்றையாட்சியை ஏற்றுக் கொண்டுள்ளதாக வடக்கு மாகாண முதலமைச்சர் கூறுவது முற்றிலும் தவறானது. நாம் தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை மீறவில்லை.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித் 29

## விஜயதாசவின் கருத்துக்களை கடுமையாகச் சாடும் சுமந்திரன்

*இரு கலாநிதிப் பட்டம் பெற்றவருக்கு ஆரம்பத்தில் எங்கே போனது அறிவு என்று கேள்வி*

யாழ்ப்பாணம், நவ. 15

சட்டத்துறையில் இரண்டு கலாநிதிப் பட்டங்களைப் (டொக்டர்) பெற்றுள்ள சட்டத்தரணி விஜயதாச ராஜபக்சவுக்கு, அரசமைப்புச் சபைக்கான முன்மொழிவை வைக்கும்போதே அது அரசமைப்புக்கு முரணானது என்று தெரியாதா? அதற்கும் மேலாக இடைக்கால அறிக்கையின் சில பகுதிகளை வரையும்போது தோன்றாத ஞானம் பதவி பறிக்கப்பட்ட பின்னர் தான் தோன்றியதா?

இவ்வாறு கேள்வி எழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், வழிநடத்தல் குழுவின் உற்றுப்பினருமான 29

## அரசியல் கைதிகளுக்காக திரண்டனர் மாணவர்கள்

*யாழ்ப்பா்ணத்தில் நேற்றுப் பேரணி*

யாழ்ப்பாணம், நவ.15

தமிழ் அரசியல் கைதிகளின் விடுவிப்பை வலியுறுத்தியும், அநுராதபுரம் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் மூவரின் கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரியும் நேற்று யாழ்ப்பாணத்தில் கவனவீர்ப்புப் பேரணி நடத்தப்பட்டது.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மாணவர்கள் 04



## தாமரை மொட்டே மகிந்தவின் சின்னம்

கொழும்பு, நவ. 15

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தாமரை மொட்டுச் சின்னத்தில் களமிறங்குவதற்குரிய இறுதி முடிவை மகிந்த அணி நேற்று அறிவித்தது.

தற்போதைய ஆளுந் தரப்பிலுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் இணைந்து போட்டி 04

முச்சந்தி முரளி



பெடியள் இருந்திருந்தா ஒரே வாரத்தில் அடக்கியிருப்பாங்கள்..!

## யாழ். மாநகருக்கு புதிய ஆணையர் இன்று நியமனம்

யாழ்ப்பாணம், நவ. 15

யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளராக, பருத்தித்துறை முன்னாள் பிரதேச செயலர் த.ஜெயசீலன் நியமிக்கப்படுவதோடு, வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளராக, மாநகர சபையின் 29

## குடாநாட்டு வெள்ளப் பாதிப்புக்கு உதவுவது குறித்து அரசு ஆய்வு

*நா்டாளுமன்றில் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் தகவல்*

கொழும்பு, நவ. 15

யாழ்ப்பாணத்தில் வெள்ளத்தால் அதிகளவில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. ஒருவர் உயிரிழந்தும் உள்ளார். வீடுகளும் மக்களின் உடைமைகள் பலவும் சேதமடைந்துள்ளன. வரவு- செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்ட நேரத்தில் 29

see more news in newuthayan.com

## இலங்கைச் சிறுமிகள் சவூதியில் பாலியல் அடிமைகளாக விற்பனை

கொழும்பு, நவ. 15

இலங்கைச் சிறுமிகள் சவூதி அரேபியாவில் பாலியல் அடிமைகள்ாக விற்பனை செய்யப்படுகின்றனர் என்று அதிர்ச்சித் தகவலொன்றை வெளியிட்டுள்ளார் அந்த நாட்டு இளவரசியொருவர்.

சவூதி அரேபியாவின் மிகப்பெரும் பணக்காரர்களில் ஒருவரான அல்வலீத் பின் தலால், ஊழல் குற்றச்சாட்டுகளுக்காக அண்மையில் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

அவரின் முன்னாள் மனைவி அமீரா பின்த் அய்தான் பின் நயீப், இலங்கை 04

## பரீட்சைகள் ஆணையாளர் திடீர் இடமாற்றம்

கொழும்பு, நவ. 15

பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் டபிள்யு.எம்.என்.ஜே.புஷ்பகுமார கல்வி அமைச்சுக்கு உடனடியாக இடமாற்றப்பட்டரர்.

பரீட்சை வினாத்தாள்கள் குறித்து நடைபெறும் விசாரணைக்கு உதவும் வகையிலேயே அவர் இடமாற்றப்பட்டார் என்று கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

கடமையில் அலட்சியம் மற்றும் தவறான வழிநடத்தல்கள் என்பன வற்றைக் காரணம் காட்டி 04

## சிறுமியை வன்புணர்ந்த நபருக்கு 10 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனை

வவுனியா, நவ. 15

வவுனியா மறவன்குளம் பகுதியில் சிறுமியை வன்புணர்ந்த 55 வயதுடைய சிறிய தந்தைக்கு நேற்று 10 வரு 29

## ரணிலுக்கு எதிராகச் செயற்படேன் அமைச்சர் மங்கள சத்திய வாக்கு

04




# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளை சந்திப்பார் மைத்திரி

## நாளைமறுதினம் ஏற்பாடு

கிளிநொச்சி, நவ.15
காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நாளைமறுதினம் அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேனவைச் சந்திக்கவுள்ளனர்.
8 மாவட்டங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் 31 பேர் நாளை கொழும்பு புறப்படு கின்றனர் என்று கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத் தலைவர் தெரிவித்தார்.
கடந்த மாதம் கிளிநொச்சிக்குப் பயணம் மேற்கொண்ட அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் சந்திப்புக்கு நேரம் ஒதுக்கித் தருமாறு காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்திருந்தனர். பொருத்தமான திகதி அறிவிக்கப்படும் என்று அரச தலைவர் பதிலளித்தார்.
நாளை மறுதினம் அரச தலைவருடன் சந்திப்புக்கு ஏற்பாடாகியுள்ளது என்று அரச தலைவர் அலுவலகம் அறிவித்துள்ளது என்று சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.
சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை வரவேற்கத்தக்கது. அரச தலைவர் சந்திப்பில் நல்லதொரு முடிவைத் தருவார் என்று எதிர்பார்க்கின்றோம் என்று காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்தனர். (ற-35)



## மரத்தில் ஏறி இளைஞர் விநோத போராட்டம்!

பதுளை,நவ.15
பதுளைப் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டில் தமக்கு நியாயம் கிடைக்கவில்லை என்று தெரிவித்து இளைஞர் ஒருவர் மரத்தில் ஏறிப் போராட்டம் நடத்தினார்.
போராட்டத்தில் ஈடுபட்ட பதுளையைச் சேர்ந்த 29 வயதுடைய ஆர்.எம்.குமாரசிங்க என்ற இளைஞரே இவ்வாறு போராட்டம் நடத்தினார். அவரைப் பொலிஸார் கைதுசெய்தனர்.
இவர் இராணுவத்திலிருந்து விலகியவர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)

**ஒருவாரத்தின் முன் திருமணம் செய்த**

## இளம் தம்பதிகள் வீட்டில் உயிரற்ற நிலையில் மீட்பு

கொழும்பு, நவ.15
களுத்துறை, பரகஸ்தொட, மில்லெனியவிலுள்ள வீடொன்றிலிருந் கணவர் மற்றும் மனைவியின் சடலங்கள் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளன.
கயிற்றில் தொங்கிய நிலையில் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.
அவர்கள் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டனரா?, அல்லது கொலை செய்யப் பட்டனரா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகணை ஆரம்பித்துள்ளனர்.
மில்லெனிய பகுதியைச் சேர்ந்த 28 வயதுடைய கோஷல சச்சின் பொன்சேகா, 19 வயதுடைய கோஷலி மஹேஷிகா (மனைவி) ஆகியோரே உயிரிழந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளனர்.
இருவரும் ஒருவாரத்துக்கு முன்னரே திருமண பந்தத்தில் இணைந்துள்ளனர்.
உயிரிழந்த யுவதி ஆடைத்தொழிற்சாலை யொன்றில் பணிபுரிந்து வந்துள்ளார். அவரைக் கரம்பிடித்த இளைஞனுக்கு ஏற்கனவே திருமணமாகி ஒரு பிள்ளையும் இருக்கின்றது எனத் தெரியவந்துள்ளது.
பதிவுத் திருமணத்துக்குப் பின்னர் இருவரும் புதிய வீடொன்றில் வசித்துள்ளனர். நீண்டநேரம் ஆகியும் வீடு திறக்கப்படாததால் சந்தேகத்தில் அயலவர்கள் சென்று பார்த்தவேளையிலேயே உயிரிழந்த நிலையில் காணப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

## கஞ்சாவுடன் மூவர் கைது



திருகோணமலை, நவ.15
கேரளக் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று திருகோணமலை போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி எஸ்.ஜ. ஜனூஷன் தெரிவித்தார்.
பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து திருகோணமலை அபயபுர சந்தியில் நடத்தப்பட்ட சோதனையில் மூவரும் கைது செய்யப்பட்டனர் என்றும், அவர்களிடம் இருந்து 2 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
திருகோணமலை,பாலையூற்று பகுதியைச்சேர்ந்தவர்களான மாமனும், மருமகனும் மற்றும் கிராந்துரை போகம்பிட்டிய பகுதியைச்சேர்ந்த ஒருவருமே கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
கைது செய்யப்பட்ட மூவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ற-ரி4,45)

## காதலிக்க மறுத்த மாணவியை வழிமறித்துத் தாக்கிய ஆசிரியர்

கிளிநொச்சி, நவ.15
தன்னைக் காதலிக்க மறுத்த மாணவியைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் ஆசிரியர் ஒருவர் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் கிளிநொச்சியில் நடந்துள்ளது.
கிளிநொச்சியில், புறநகர்ப் பகுதியில் உள்ள உயர்தரப் பாடசாலையில் கற்கும் ஆசிரியர் ஒருவர் மாணவி ஒருவரிடம் தனது காதலைத் தெரிவித்தார் என்றும், மாணவி அதற்கு மறுப்புத் தெரிவித்தார் என்றும் கூறப்படுகின்றது.
ஆசிரியர் தனது காதலைத் தொடர்ந்து தெரிவித்து வந்தார் என்றும் கடந்த வெள்ளிக்கிழமை மாணவி பாடசாலை முடிந்து வீடு திரும்பியபோது அவரை வழிமறித்துத் தாக்கினார் என்றும் தெரிவிக்கப்பட்டது.
மாணவி இது தொடர்பில் பெற்றோரிடம் தெரிவித்தார். இந்தவிடயம் கடந்த திங்கட்கிழமை வலயக் கல்விப் பணிமனையின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.
"இது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இறுதித் தீர்வு எட்டும்வரை அந்த ஆசிரியர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்." என்று வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.
இந்த ஆசிரியர் தொண்டராசிரியராகப் பணியாற்றி நிரந்தர நியமனம் பெற்றவர் என்று கூறப்படுகின்றது. (ற-101)

## தொண்டமான் பெயருக்காக நேற்றும் போராட்டம்

ஹற்றன், நவ.15
ஹற்றன் தொழிற்பயிற்சி நிலையத்தின் பெயர்ப் பலகையில்தொண்டமானின் பெயர் அகற்றப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொயிஸ்டன் தோட்ட மக்கள் நேற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
நாட்டின் தலைவர்களான அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் தலையீடு செய்து பயிற்சி நிலையத்துக்கு தொண்டமானின் பெயரை மீள வைக்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினர். (ற-ரி4)

## கடலில் காணாமற்போன மாணவனின் உடல் மீட்பு

சாய்ந்தமருது கடலில் கடந்த சனிக்கிழமை நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்த போது காணாமற் போயிருந்த மாணவனின் உடல் நேற்று திருக்கோயில் பகுதியில் கரையொதுங்கியது என்று கல்முனைப் பொலிஸார் தெரிவித்தனர்.
சாய்ந்தமருது11 ஆம் பிரிவை சேர்ந்த முஹம்மட் லத்தீப் முஹம்மட் இன்ஸாத் (வயது16) என்ற மாணவனின் உடலே கரையொதுங்கியது.
கல்முனை ஸாஹிராக் கல்லூரியில் க.பொ.த. சாதாரண தரத்தில் கற்கும் சாய்ந்தமருதைச் சேர்ந்த 6 மாணவர்கள் கடந்த சனிக்கிழமை மதியம் சாய்ந்தமருது முகத்து வாரத்தை அண்மித்துள்ள கடலில் குளிக்கச் சென்றனர். மூவர் கடல் அலையில் சிக்குண்டு மூழ்கியுள்ளனர். அவர்களுள் இருவர் மீனவர்களால் மீட்கப்பட்டு மருத்துவனையில் சேர்க்கப்பட்டனர். மற்றைய மூன்று மாணவர்கள் பாதிப்பு எதுவுமில்லாமல் கடலில் இருந்து வெளியேறியிருந்தனர்.
ஒரு மாணவன் காணாமற் போயிருந்தமை தொடர்பில் கல்முனை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. அந்த மாணவனை தேடும் பணிகள், மீனவர்களின் உதவியுடன் குடும்பத்தினரால் முன்னெடுக்கப்பட்டது.
மூன்று நாள்கள் கடந்துள்ள நிலையில் இன்று செவ்வாய்க்கிழமை காலை சாய்ந்தமருதில் இருந்து சுமார் 33 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள திருக்கோவில் பகுதியில் அவரது சடலம் கரையொதுங்கியுள்ளது.
மாணவனின் உடல் என்பதை பெற்றோர் அடையாளம் காட்டினர் என்றும், உடற்கூற்றுச் சோதனைக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்த பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவித்தனர். (ற)

## பேருந்து மோ.சைக்கிள் விபத்து ஒருவர் காயம்

சம்மாந்துறை, நவ.15
பேருந்தும், மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்தார். இந்தவிபத்து நேற்று காரைதீவு, முதன்மை வீதியில் நடந்துள்ளது.
காயமடைந்தவர் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.
பேருந்து கல்முனை நோக்கிச் பயணித்தபோது பின்புறமாகப் பயணித்த மோட்டார் சைக்கிள் பேருந்துடன் மோதியது என்று தெரிவிக்கப்பட்டது.
விபத்துத் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற)

## இடமாற்றலை நிறுத்துமாறு பரணகமவில் ஆர்ப்பாட்டம்

பதுளை,15
பதுளை மாவட்ட ஊவா பரணகம பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ள திடீர் இடமாற்றத்தை நிறுத்தக்கோரி ஊவா பரணகம பிரதேச செயலக அரச ஊழியர்கள் நேற்றுப் பணிப் புறக்கணிப்பிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.
இடமாற்றத்தை நிறுத்தும் பணிப் புறக்கணிப்புத் தொடரும் என்று பிரதேச செயலக அரச ஊழியர்கள் கூறியுள்ளனர்.
எதிர்ப்பு நடவடிக்கையால் பிரதேச செயலகத்தின் செயற்பாடுகள் முடங்கின. பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்தனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)



*புதுக்குடியிருப்பு, இரணைப்பாலை மாவீரர் துயிலும் இல்லத்தின் நேற்றுத் துப்புரவுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. எதிர்வரும் 27ஆம் திகதி மாவீரர் நாள் நினைவேந்தல் கடைப்பிடிக்கப்படவுள்ளதை முன்னிட்டு இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. புதுக்குடியிருப்பு சென். அன்ரனிஸ் விளையாட்டு கழக இளைஞர்களின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு பிரதேச பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் வர்த்தகர்கள் எனப் பலர் இணைந்து துப்புரவுப் பணிகளை மேற்கொண்டனர். (ற)*

## கு.நந்தகோபனுக்கு நினைவேந்தல் நிகழ்வு

மட்டக்களப்பு,நவ.15
தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தலைவர் கு.நந்தகோபனின் நினைவேந்தல் நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது.
மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கட்சி அலுவலகத்தில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.
நந்தகோபனின் உருவப்படத்துக்கு சுடரேற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.
கட்சியின் செயலாளர் பூ.பிரசாந்தன், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.
கடந்த 2008 ஆம் ஆண்டு இதே நாளில், அத்துருகிரிய பகுதியில் நந்தகோபன் உள்ளிட்ட இருவர் கொல்லப்பட்டிருந்தனர். (ரி2)

## கன்ரர் மோதி மின்கம்பம் முறிவு

சாவகச்சேரி,நவ.15
சாலையை விட்டு விலகிய கன்ரர் ரக வாகனம் மின் கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.
இந்த விபத்து நேற்று அதிகாலை சாவகச்சேரி கனகம் புளியடிச் சாலையில் கெருடாவில் பகுதியில் நடந்துள்ளது.
சாரதியின் தூக்கக் கலக்கமே விபத்துக்குக் காரணமாக விருக்கலாம்என்றுதெரிவிக்கப்பட்டது. (ற-ரி2,9)






மாற்றத்துக்காக இன்றே செயற்படுவோம் எனும் தொனிப்பொருளில்

# நீரிழிவு நோய் விழிப்புணர்வு

யாழ்ப்பாணம்,நவ.15
தேசிய நீரிழிவு தினத்தை முன்னிட்டு நேற்று வடக்கு, கிழக்கு மாவட்டங்களில் விழிப்புணர்வு ஊர்வலங்கள் நடத்தப்பட்டன.

**யாழ்ப்பாணம்**
"மாற்றத்துக்காக இன்றே செயற்படுவோம்" எனும் தொனிப்பொருளில் விழிப்புணர்வு ஊர்வலம் நேற்று இடம்பெற்றது.
யாழ்.போதனா மருத்துவமனை சமூகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த ஊர்வலம் மருத்துவமனை முன்பாக ஆரம்பித்தது.
மருத்துவமனையின் நீரிழிவு சிறப்பு வைத்திய நிபுணர் மகாலிங்கம் அரவிந்தன் தலைமையில் ஆரம்பமான ஊர்வலத்தை மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி ஆரம்பித்தார்.
விழிப்புணர்வூட்டும் பதாகைகளை ஏந்திய வண்ணம் வைத்தியசாலைச்சமூகத்தினர் ஊர்வலமாகச் சென்றனர். மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவமனை ஊழியர்கள் எனப் பலரும் அதில் கலந்து கொண்டனர்.
தொடர்ந்து யாழ். போதனா மருத்துவமனையில் விழிப்புணர்வு கருத்தாடல் ஒன்றும் இடம்பெற்றது.

**மட்டக்களப்பு**
நீரிழிவு தினத்தை முன்னிட்டு களுவாஞ்சிக்குடிப் பகுதியில் நேற்று விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது.
களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனையால் இந்த ஊர்வலம் ஒழுங்கு செய்யப்பட்டது.
மருத்துவ அத்தியட்சகர், குணசிங்கம் சுகுணனின்தலைமையில்இடம்பெற்றஊர்வலத்தில் பலர் கலந்துகொண்டனர்.
ஊர்வலத்தில் நீரிழிவு நோய் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் துண்டு



அறிக்கைகள் வழங்கப்பட்டன. அதில் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவமனை ஊழியர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

**வவுனியா**
சுகாதார திணைக்களத்தின் தொற்றா நோய்கள் தடுப்புப் பிரிவின் ஏற்பாட்டில் நீரிழிவு நோய்தொடர்பானவிழிப்புணர்வுப்ஊர்வலம் நேற்றுக் காலை நடத்தப்பட்டது.
வவுனியா மாவட்டச் செயலகத்தில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் பிரதான வீதி வழியாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையைச் சென்றடைந்தது.
மருத்துவ அதிகாரி திருமதி சுதர்சினி தலைமையில் நடைபெற்ற பேரணிக்கு அரச மருத்துவர் சங்கத்தின் வவுனியா கிளையினர் அனுசரணை வழங்கினர்.
வவுனியா மாவட்டச் செயலகத்தின் உத்தியோகத்தர்களுக்கு நீரிழிவு நோய் தொடர்பான பரிசோதனைகள் இடம்பெற்றன.
பேரணியில் ஈடுபட்டோர், "நீரிழிவு நோயைத் தடுப்பதற்கு ஒன்றிணைவோம்" என்ற, விழிப்புணர்வு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியிருந்தனர்.
மருத்துவர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், மாவட்டச் செயலக ஊழியர்கள், மருத்துவமனை ஊழியர்கள் எனப் பலரும் ஊர்வலம் கலந்து கொண்டனர். (ற-ரி2)

## சரண குணவர்தனவை மன்றில் முற்படுத்துக

### சிறைச்சாலை அதிகாரிக்கு கொழும்பு நீதிவான் பணிப்பு

கொழும்பு,நவ.15
விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதி அமைச்சர் சரண குணவர்தனவை நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும் என்று கொழும்பு மேலதிக நீதவான் நேற்று உத்தரவிட்டார்.
பிரதி அமைச்சர் சரண குணவர்தன அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவராகவும் செயலாற்றியிருந்தார்.
அப்போது வாகனங்களை வாடகைக்குப் பெற்றுக் கொண்டமைக்காக முற்பணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. எனினும் முற்பணம் செலுத்துவதில் பிரச்சினைகள் காணப்பட்டன.
இதனால் அமைச்சருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு விசாரணைகள் நேற்று இடம்பெற்றன.
வழக்கை விசாரணை செய்த கொழும்பு மேலதிக நீதவான் அருணி ஆட்டிகல விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள சரண குணவர்தனவை எதிர்வரும் 21 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும் என்று வெலிக்கடை சிறைச்சாலை பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டார். (ற-ரி2)

## குடியிருப்புக்குள் பன்றி வளர்ப்பதால் சுகாதார சீர்கேடென மக்கள் விசனம்

வல்வெட்டித்துறை,நவ.15
குடியிருப்புக்களுக்கு மத்தியில் பன்றி வளர்ப்பதால் சுற்றுச் சூழலில் பாதிப்பு ஏற்படுவதாக மக்கள் விசனம் தெரிவித்தனர்.
வல்வெட்டித்துறை, ஊரியான்காடுபகுதியில்வீடொன்றில் பன்றிகள் வளர்க்கப்படுகின்றன. மக்கள் வாழும் ஊர்மனைப்பகுதியில்பன்றி வளர்க்கப்படுவதால் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுகின்றன என்று வல்வெட்டித்துறை நகரசபையில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டது.
அந்தப் பகுதியில் அதிக துர்நாற்றம் வீசுகின்றது என்றும், அந்தப் பகுதி வீதியால் பயணிப்போர் அசௌகரியங்களை எதிர் கொள்கின்றனர் என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.
பன்றி வளர்ப்பு நீண்டகாலம் இடம்பெற்று வருவதாகவும், மழைகாலங்களின்போது அதிக துர்நாற்றம் வீசுகின்றது என்றும் மக்கள் அதிருப்தி வெளியிட்டனர்.
கிராம சேவகர் மற்றும் நகர சபைக்கும் இது தொடர்பில் அறிவிக்கப்பட்டது. அந்த இடத்திலிருந்து பன்றி வளர்ப்பை அப்புறப்படுத்துமாறு பல தடவைகள் உரியவர்களுக்கு கூறப்பட்டது என்றும் மக்கள் தெரிவித்தனர்.
குடியிருப்புக்குள் பன்றி வளர்ப்பதற்கு எதிராக கடந்த மாதம் பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது என்றும், எதிர்வரும் 23 ஆம் திகதி விசாரணைகள் இடம்பெறவுள்ளதால் அதனூடாக உரிய தீர்வு கிடைக்கும் என்றும் வல்வெட்டித்தறை நகர சபை தெரிவித்தது. (ற-ரி2,26)

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளால் வவுனியாவில் கவனவீர்ப்பு ஊர்வலம்



வவுனியா,நவ.15
வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் நேற்று வவுனியாவில் கவனயீர்ப்பு ஊர்வலம் நடத்தப்பட்டது.
கந்தசாமி கோவிலில் நடைபெற்ற இறைவழிபாட்டின் பின் கவனவீர்ப்பு ஊர்வலம் ஆரம்பமானது.
ஊர்வலம் பஸார் வீதியூடாக வவுனியா பொது மருத்துவமனையை வந்தடைந்து, அங்கிருந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தொடர் போராட்டம் நடத்தும் மேடையை வந்தடைந்தது.
'எமது காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகள் மற்றும் கணவன்மார்களை மீட்பதற்கு ஐ.நாவில் நீங்கள் எடுக்கும் முயற்சிக்கு நன்றி' என்ற பதாகையை ஊர்வலத்தில் கலந்து கொண்டோர் தாங்கியிருந்தனர்.
காணாமல் ஆக்கப்பட்டவர்களை விடுவிக்கக் கோரி வவுனியாவில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்றுடன் 164 ஆவது நாள்களை எட்டியுள்ளது.
"இறைவழிபாட்டுடன் இந்த கவனவீர்ப்பை மேற்கொண்டுள்ளோம். பன்னாடுகள் அரசியல் கைதிகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விவகாரத்தில் தலையிட்டு தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். அரசியல் கைதிகள் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். இல்லாதவிடத்து எங்கள் கோரிக்கைகள் நிறைவேறும்வரை போராட்டத்தைத் தொடருவோம்" என காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்தனர். (ற-ரி2)

## போலியான வாக்குறுதி மூலம் சுகபோகம் அனுபவிப்பவர்களே மக்களின் அபிலாஷைகளுக்குத் தடையாக இருக்கின்றார்கள்

போலியான வாக்குறுதிகளை வழங்கி, அதனூடாக சுகபோகம் அனுபவிப்பவர்களே மக்களின் அபிலாஷைகளுக்குத் தடையாக இருக்கின்றார்கள்.
இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதித் தலைவரும் அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்தின் தலைவருமான கலாநிதி ஏ.எம்.ஜெமில் தெரிவித்தார்.
நேற்று அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,
அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீனுடைய உருவப்பொம்மையை, அண்மையில் சாய்ந்தமருதில் எரித்திருந்தனர்.
இந்த விடயத்தில், பள்ளிவாசலுக்கும் சாய்ந்தமருதுக்கான உள்ளூராட்சி சபையை பெறவேண்டும் என்ற உண்மையான எண்ணம் கொண்டவர்களுக்கும் சம்பந்தம் இருப்பதாக நான் கருதவில்லை.
அமைச்சருடைய வளர்ச்சியில் கொண்ட காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, ஒரு சிறு குழுவினரால், குறித்த செயற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சாய்ந்தமருது மக்கள், தங்களைத் தாங்களே ஆளவேண்டும் என்பது மிகவும் நியாயமான விடயம்.
மாகாண சபையில் தனிநபர் பிரேரணை நிறைவேற்றியது முதல், அமைச்சர் ரிஷாத் தலைமையில், சாய்ந்தமருத்துக்கான உள்ளூராட்சி சபை விடயத்தில் முழுமையான முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகின்றோம்.
அமைச்சர் இந்த விடயத்தில் மிகுந்த உளத் தூய்மையுடன் செயற்படுகின்றார். தூய்மையான எங்களது முன்னெடுப்புகளை யாரும் தடைசெய்ய முடியாது.
சாய்ந்தமருது மக்களுக்கு உள்ளூராட்சி சபையைப் பெற்றுத்தருவோமென, போலியான வாக்குறுதிகளை வழங்கி, பல்வேறு சந்தர்ப்பங்களில் தங்களது வாக்கு வங்கியை நிரப்பிக்கொண்டு, அதனூடாக சுகபோகம் அனுபவிப்பவர்கள்தான், அந்த மக்களின் அபிலாஷைகளுக்குத் தடையாக இருக்கின்றார்கள் .
பொய்களை மக்கள் நம்பப்போவதில்லை. கல்முனையைச் சேர்ந்த சில அரசியல்வாதிகளே, சாய்ந்தமருது மக்களின் நியாயத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அநேகமான, கல்முனை மக்கள், சாய்ந்தமருதுக்கு உள்ளூராட்சி சபையை வழங்க விரும்பு கின்ற னர்.- என்றுள்ளது. (ற-ரி2)

## பெற்றோலுடன் மண்ணெண்ணெய் கலந்து விற்பனைக்கு விநியோகம்

### அதிரடிப் படையின் சுற்றிவளைப்பில் ஐ.தே.கட்சி எம்.பிக்குச் சொந்தமான பவுசர் சிக்கியது

திருகோணமலை, நவ. 15

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குப் பெற்றோல் கொண்டு செல்லும் பவுசருக்குள் மண்ணெண்ணெய் கலந்து கொண்டிருக்கும்போது, சிறப்பு அதிரடிப் படையினர் அவர்களை மடக்கிப் பிடித்துள்ளனர். இந்தச் சம்பவம் திருகோணமலை மாவட்டத்தின் கலேவல பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

கைவிடப்பட்ட பகுதியில் பெற்றோல் பவுசரை நிறுத்தி, சிறிய லொறியில் கொள்கலன்களில் கொண்டு வரப்பட்ட மண்ணெண்ணெயைப் பெற்றோலுடன் கலந்துள்ளனர். இவ்வாறு செய்து கொண்டிருக்கும்போது சிறப்பு அதிரடிப்படையினர் அந்தப் பகுதியைச் சுற்றிவளைத்தனர். இருவரைக் கைது செய்தனர். விசாரணைகளை முன்னெடுத்தனர்.

பெற்றோல் பவுசர், ஐக்கிய தேசியக் கட்சியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மஹ்ரூபுக்குச் சொந்தமானது என்பதைக் கண்டறிந்தனர்.

பவுசர் சாரதியும், உதவியாளரும் பவுசரில் இருந்த 100 லீற்றர் வரையிலான பெற்றோலைக் குழாய் ஒன்றின் உதவியுடன் கொள்கலன்களுக்குள் நிரப்பியுள்ளனர். பவுசரில் இருந்து வெளியில் எடுக்கப்பட்ட பெற்றோலுக்குச் சமனாகச் சிறிய லொறியில் கொண்டுவரப்பட்ட மண்ணெண்ணெயைக் கலந்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அனுப்பமுற்படுகையிலேயே தம்மிடம் சிக்கியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

'பவுசர் எனக்குச் சொந்தமானது. மோசடி நடவடிக்கைக்கும் எனக்கும் தொடர்பில்லை. எனது பவுசரை ஐ.ஓ.சி. நிறுவனத்துக்குக் கொடுத்துள்ளேன். 10 வருடங்களுக்கு மேலாக சாரதியாகக் கடமையாற்றியவரே இந்தச் செயலைச் செய்துள்ளார். கலப்படம் செய்தவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க பொலிஸாரிடம் கோரியுள்ளேன்' என்று நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் குறிப்பிட்டார். (5,31)

## சூடு தணியாத பெற்றோல் விவகாரம்

### நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்திலும் எதிரொலிப்பு

கொழும்பு, நவ. 15

நாட்டில் கடந்த வாரம் பெரும் நெருக்கடியை ஏற்படுத்திய பெற்றோல் தட்டுப்பாட்டு விவகாரம் தொடர்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் சூடான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

கூட்டு அரசின் அமைச்சரவைக் கூட்டம் நேற்று முற்பகல் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

எரிபொருள் இருப்பை உரியவகையில் பேணுவதற்கு துறைசார் அமைச்சரான அர்ஜுன ரணதுங்க உரிய நடவடிக்கை எடுக்காததன் காரணமாகவே பெற்றோலுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டது என்று அமைச்சர்கள் சிலர் சுட்டிக்காட்டினர்.

தன்பக்கமுள்ள தவறை திசை திருப்புவதற்காகவே தனக்கு அரசியல் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டது என்ற கருத்தை ரணதுங்க முன்வைத்துள்ளார் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர். பெற்றோல் தட்டுப்பாட்டுக்கு இரண்டு அமைச்சர்கள் பொறுப்புக் கூறவேண்டும் என்று தகவல் வெளியிட்டிருந்த ரணதுங்க, அந்த அமைச்சர்களின் பெயரை வெளியிடவேண்டும் எனவும் அமைச்சர்கள் சவால் விடுத்தனர்.

தான் அவ்வாறானதொரு கருத்தை வெளியிடவில்லை என்று அமைச்சர் ரணதுங்க பதிலளித்தார். குற்றச்சாட்டுகளை முன்வைத்த அமைச்சர்களுக்கும், ரணதுங்கவுக்குமிடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

எரிபொருள் இருப்பை உரியவகையில் பாதுகாக்க நடவடிக்கை எடுக்காது, இந்திய நிறுவனம்மீது குற்றச்சாட்டை சுமத்துவது ஏற்புடைய நடவடிக்கை அல்ல என்று மேலும் சில அமைச்சர்கள் அர்ஜுனவிடம் சுட்டிக்காட்டியதுடன், எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டதற்கான பொறுப்பை ஏற்குமாறும் வலியுறுத்தினர்.

சூடான வாதப்பிரதிவாதங்கள் இடம்பெறுக்கொண்டிருக்கையில் தலையிட்ட மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் ரணதுங்க பக்கத் தவறு இடம்பெற்றிருக்குமாயின் அதை சரிசெய்துகொள்ளுமாறு கூறினார்.

எரிபொருள் தட்டுப்பாடு தொடர்பில் ஆராய்வதற்காக அரசதலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழு, தனது விசாரணை அறிக்கையை அவரிடம் நேற்றுக் கையளித்தது. (5)

## சீன போர்க் கப்பல் புறப்பட்டது ஆஸி. கப்பல் வந்தடைந்தது

கொழும்பு, நவ. 15

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த சீன கடற்படைக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தை விட்டுப் புறப்பட்டுச் சென்ற அதேவேளை ஆஸ்திரேலியக் கடற்படையின் போர்க்கப்பல் கொழும்புத் துறைமுகத்துக்கு நேற்று வந்துள்ளது.



கடந்த 10ஆம் திகதி கொழும்புத் துறைமுகத்துக்கு வந்த சீனக் கடற்படையின் பயிற்சிக் கப்பல் ஐந்து நாள்கள் பயணத்தை முடித்துக் கொண்டு தாய்லாந்து நோக்கிப் புறப்பட்டுச் சென்றது.

அதேவேளை, ஆஸ்திரேலியக் கடற்படையின் போர்க் கப்பலான எச்எம்ஏஸ் நியூகாசில் நான்கு நாள்கள் பயணமாக கொழும்பு துறைமுகத்தை நேற்று வந்தடைந்தது.

138.1 மீற்றர் நீளமான இந்தப் போர்க் கப்பலில் 184 மாலுமிகள் உள்ளனர். கொழும்பில் தங்கியிருக்கும் போது, இலங்கை கடற்படையுடன் இணைந்து ஆஸ்திரேலிய கடற்படையினர் பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்கவுள்ளனர். (5)

## அரசியல்...

ஏற்பாடு செய்திருந்த இந்தப் பேரணியில் கல்வியியற் கல்லூரி மாணவர்கள், யாழ்ப்பாணம் பல்கலைக் கழகக் கல்லூரி மாணவர்கள், தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், உயர் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள், பொது மக்கள் எனப் பலர் இணைந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் இருந்து ஆரம்பமான பேரணி பலாலி வீதி, நாவலர் வீதி, கோவில் வீதி வழியாக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தை அடைந்தது.

யாழ்ப்பாணம், நாவலர் வீதியில் உள்ள ஐ.நா. அலுவலகத்தில் கோரிக்கைகள் அடங்கிய மனு மாணவர்களால் கையளிக்கப்பட்டது.

ஜெனீவாவைத் தளமாகக் கொண்டியங்கும் ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளர் சையித் அல் ஹுசைன், மனித உரிமைகள் சபையின் 11ஆம் சுற்றுக்கான அதிபரான ஜோக்குயின் அலெக்சாண்டர், ஜெனிவாவில் இயங்கும் அமெரிக்க அரசின் ஐ.நா. மனித உரிமைப் பொறிமுறைக்கான நிரந்தரப் பிரதிநிதியான தியடோர் அலெக்ரா ஆகியோருக்கான மனுக்களே கையளிக்கப்பட்டன.

அரச தலைவருக்கான மனு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டது. மாவட்டச் செயலரிடமும் மனு ஒன்று கையளிக்கப்பட்டது.

அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

தமிழ் அரசியற் கைதிகளை விடுவிப்பதற்காக ஜெனிவாவைத் தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமைகள் சபைக்கும், இலங்கை அரசோடு 2015ஆம் ஆண்டு ஒத்திசைவுத் தீர்மானத்தைக் கொண்டுவந்து பின்னர் இந்த வருடம் மேலும் இரண்டு வருட நீடிப்பைக் கொண்டுவந்த அமெரிக்காவின் ஐ.நாவுக்கான ஜெனிவா தூதுவருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பான விடயத்தில் பொறுப்பு உள்ளது.

அமெரிக்க அரசு தனது மனித உரிமைப் பொறிமுறை ஊடான நேரடித் தலையீடு மூலமாக மனித உரிமைகள் சபையில் இலங்கை அரசோடு ஒத்திசைவு நிகழ்ச்சி நிரல் ஒன்றின் மூலம் உள்நாட்டுப் பொறிமுறையிடமே நீதி வழங்கலை ஏறத்தாழ முழுமையாகக் கையளித்துவிட்டுள்ள ஒரு நிலை தோன்றியுள்ளது.

அதற்கு மேலதிகமாக இரண்டுவருட கால நீடிப்பை வழங்கும் கைங்கரியத்தையும் அமெரிக்க அரசின் மனித உரிமைப் பொறிமுறையே செய்திருக்கிறது.

தமிழ் அரசியற் கைதிகளின் வேண்டுகோள்களைத் தனது சட்டத்தையும் சட்டப்பொறிமுறைகளையும் கோடிட்டுப் புறக்கணிக்கும் நிலையில் தமிழர்களின் தரப்பு பன்னாட்டுச் சட்டப் பொறிமுறைகளுக்குள் தமிழ் அரசியற் கைதிகளுக்கு உள்ள உரிமையைத் தட்டிக் கேட்காத நிலை மிகவும் பரிதாபகரமானது.

இலங்கை அரசின் மீது உடனடியாக அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் பன்னாட்டுத் தரப்பினருக்கும் தமிழ் அரசியற் கைதிகள் மீது இழைக்கப்படும் துன்பியலுக்கு மனிதாபிமானப் பொறுப்பு இருக்கிறது என்பதை மாணவர் சமூகம் சுட்டிக்காட்டியுள்ளது.

பன்னாட்டுத் தன்மையுடனான போர் ஒன்று முடிவுக்கு வரும்போது போர்க்கைதிகள் மீளத் தத்தம் குடும்பங்களோடு ஒன்றிணைய வேண்டும் என்பதும் அவர்கள் குற்றவியற் சட்டங்களுக்கு ஆட்படுத்தப்படலாகாது என்பதும் பன்னாட்டுச் சட்டம் வழங்கும் உரிமையாகும். இலங்கை அரசோ தமிழ் அரசியற் கைதிகளில் தண்டனை வழங்கப்பட்டவர்களைப் போர்க் கைதிகளாகப் பார்க்கத் தயாராக இல்லை. அவர்கள் தமது தண்டனைக் காலத்தை சிறைகளில் கழித்தேயாகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது அநீதியான செயல் என்பதைச் சர்வதேச சட்டங்களில் தமிழர் தரப்புக்கு இருக்கும் பிடிமானத்தை எடுத்துக்காட்டுவதன் மூலம் மாணவர் சமூகம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையும், அமெரிக்காவும் பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு உள்ளாக்கப்பட்ட கைதிகளாக உள்ள அனைவரையும் அரசியற் கைதிகளாக அங்கீகரிக்க வேண்டும். அப்படி நடந்தால் மாத்திரமே இலங்கை அரசுக்கும் முறையாக விண்ணப்பத்தை அவர்களால் மேற்கொள்ளமுடியும். சர்வதேசப் பொறிமுறைகளுக்கும் தலையீடு செய்துள்ள சக்திகளுக்கும் இது விடயத்தில் பொறுப்பு இருக்கிறது என்றுள்ளது.

இந்த மனுவின் பிரதிகள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், நல்லிணக்கச் செயலணியின் தலைவி சந்திரிகா குமாரதுங்க, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன என்று பல்கலைக் கழக மாணவர் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ற-8,32,37)

## தாமரை...

யிட முன்வரும் பட்சத்தில் அவர்களை உள்வாங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியிலுள்ள மகிந்த அணியினர் பழிவாங்கப்படுவதால் தனிவழி செல்லும் இந்த முடிவு தொடர்பில் ஆளுங் கட்சியுடன் எந்தச் சமரசத்துக்கும் செல்வதில்லை என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றக் கட்டடத்தொகுதியில் நேற்று நடைபெற்ற மகிந்த அணியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டத்தின்போதே மேற்படி முடிவுகள் எடுக்கப்பட்டன.

"ஏற்கனவே பல தடவைகள் எமக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நம்பி ஏமாந்துள்ளோம். மீண்டும் அவ்வாறு ஏமாற நாம் தயாராக இல்லை. அரசின் பக்கம் இருக்கும் எவரும் எம்முடன் சேரலாம். அவர்களுக்காக எங்களது கதவு எப்போதும் திறந்தே இருக்கும்" என்று நேற்றைய கூட்டம் தொடர்பில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சிறிலங்கா பொதுஜன பெரமுன (மகிந்த அணி) என்று மும்முனைப் போட்டி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (உ-5)

## ரணிலுக்கு...

கொழும்பு, நவ. 15

கட்சித் தலைவரான தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு நான் ஒருபோதும் துரோகமிழைக்கமாட்டேன். அவரை ஒதுக்கிப் புறந்தள்ளிவிட்டு தலைமை அமைச்சர் பதவியைப் பெற்றுக்கொள்ளுமளவுக்கு அரசியல் நாகரிகம் அறியாதவன் அல்லன் நான்.

இவ்வாறு நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார் என்று அறியமுடிகின்றது.

சர்ச்சைக்குரிய பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணை நடத்தும் அரச தலைவர் ஆணைக்குழு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அழைப்பாணை விடுத்துள்ளது. விசாரணைக்குச் செல்வதற்கு முன்னர் தலைமை அமைச்சர் பதவியிலிருந்துவிலகுமாறு ரணில் விக்கிரமசிங்கவிடம் அரச தலைவர் கோரியுள்ளார் என்றும், விசாரணைகள் முடிவடையும்வரை பதில் தலைமை அமைச்சராக மங்கள நியமிக்கப்படவுள்ளார் என்றும் தகவல் வெளியாகியிருந்தது.

அரச தலைவரும், தலைமை அமைச்சரும் இரகசியச் சந்திப்பை நடத்தியமை இதை உறுதிப்படுத்தும் வகையில் அமைந்தது.

இது தொடர்பில் அமைச்சர் மங்கள சமரவீரவிடம் அவருக்கு நெருக்கமான செய்தியாளர் வினவியபோது, எனது அரசியல் வாழ்வில் கட்சியின் தலைமைக்கு எதிராக ஒருபோதும் செயற்பட்டதில்லை. நெருக்கடிகளும், பிரச்சினைகளும் ஏற்படும் தருணத்தில் கட்சியின் தனித்துவத்தைப் பாதுகாத்துக்கொண்டு இணக்கப்பாட்டுடன் செயற்பட்டோம்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அவ்வாறு எந்தவொரு பணிப்பையும் இதுவரை விடுக்கவில்லை. அரச தலைவருக்கும், தலைமை அமைச்சருக்கும் இடையில் பிரச்சினைகள் வலுப்பெற்றுள்ளதாகக் கூறுவதையும் நான் முற்றாக நிராகரிக்கின்றேன்.

அரச தலைவரும், தலைமை அமைச்சரும் கிழமையில் இரண்டு நாள்கள் கூடி அரசின் அடுத்தகட்ட நகர்வுகள் குறித்து கலந்துரையாடுகின்றனர். கட்சியின் தலைமைக்கு எதிராக நான் இதுவரை செயற்பட்டதில்லை. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கழுத்தை வெட்டும் தலைமை அமைச்சர் பதவியை நான் பொறுப்பேற்கமாட்டேன் - என்றார். (5)

## இலங்கை...

உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த சிறுமிகள், சவூதி அரேபியாவில் பாலியல் அடிமைகளாக விற்பனை செய்யப்படுகின்றனர் என்ற பரபரப்புத் தகவலை வெளியிட்டுள்ளார்.

'பிரான்ஸ்' சஞ்சிகையான லீ மொண்டெவுக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கிய செவ்வியில் அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அந்தச் சஞ்சிகைக்கு வழங்கியுள்ள செவ்வியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை, பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ், ரோமானியா மற்றும் பல்கேரியா போன்ற நாடுகளின் அழகான அநாதைச் சிறுமிகள் சவூதி அரேபியாவில் உள்ள செல்வந்தர்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றனர். விற்பனை செய்யப்படும் சிறுமிகளில் வெள்ளைத் தோல் கொண்ட சிறுமிகள் மற்றும் பெண்களுக்கு கேள்வி அதிகம் காணப்படுகிறது. இவர்களைப் பாலியல் அடிமைகளாக பணக்கார குடும்பத்தினர் பயன்படுத்திக் கொள்கிறார்கள். இதனைப் பொலிஸாரும் கண்டுகொள்வதில்லை.

தற்போதைக்கு சவூதியில் பல்வேறு குடும்பங்கள் ஒன்றிணைந்து மகிழ்ச்சியாக இருக்கும் தருணங்களில் மதுவுக்கும் போதைப் பொருளுக்கும் பஞ்சம் இருக்காது. பாலியல் அடிமையாக விற்கப்படும் சிறுமிகளின் நடனம் அங்கு அரங்கேற்றப்படும். சிறுமிகளைப் பணம் கொடுத்து வாங்கும் நபர்களின் கட்டுப்பாட்டைவிட்டு அவர்களை வெளியில் செல்லுவதற்குக் கூட அனுமதிக்கப்படாது என்று இளவரசி அமீரா குறிப்பிட்டுள்ளார். (உ-5)

## பரீட்சைகள்...

இரகசியத் தகவல்கள் பிரிவின் தலைவரான பரீட்சைகள் திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் பணி இடை நீக்கம் செய்யப்பட்ட ஒரு சில தினங்களிலேயே இந்த இடமாற்றம் நடைபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-5)

# இந்திய அரசின் வீட்டுத்திட்டம் ஒருபோதும் கைவிடப்படமாட்டாது

## தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்ப்பாணப் பிராந்தியக் காரியாலயம்

யாழ்ப்பாணம்.நவ.15

யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்திய அரசின் நிதிப் பங்களிப்பில் மேற்கொள்ளப்படவுள்ள வீட்டுத் திட்டம் கைவிடப்படப்போவதில்லை. மாறாக அதற்குரிய இடம் மாற்றப்படுவதற்கே சந்தர்ப்பம் உள்ளது என்று தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ்ப்பாணப் பிராந்தியக் காரியாலயம் தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது.

இந்திய அரசின் நிதிப் பங்களிப்புடன் தலா 5 இலட்சம் பெறுமதியான 24 வீடுகள் அமைப்பதற்கான திட்டம் யுாழ்ப்பாண மாவட்டத்துக்கு வழங்கப்பட்டது. அந்த திட்டத்தை யாழ்ப்பாணம், காரைநகர் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மடத்து வளவுப் பிரதேசத்துக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

அந்தப் பகுதியில் உள்ள 6 ஏக்கர் நிலப்பரப்பு தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாதிரிக் கிராமத்துக்குச் சொந்தமானது. போர்க்காலச் சூழ்நிலையில் அங்கே 44 குடும்பங்கள் வாழ்ந்துள்ளன. அங்கே வாழ்ந்தவர்கள் தற்போது காரைநகரைச் சூழவுள்ள மூளாய், பண்டத்தரிப்பு, பொன்னாலை போன்ற பகுதிகளில் வாழ்ந்து வருகின்றனர். எனவே அவர்களுக்கு வீடுகள் அவசியமாகும். ஆகவே மடத்து வளவுப் பகுதியில் இந்த 24 வீடுகள் திட்டத்தை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த 6 பரப்புடன் சேர்த்துக் குறிப்பிட்ட ஏக்கர் நிலப்பரப்பை கடற்படையினர் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர். அந்த வகையில் ஆரம்பத்தில் அந்தக் காணியை கடற்படையினர் வழங்குவதாக தெரிவித்த போதிலும் தற்போது அதற்கான பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வரும் நிலையில் அந்தக் காணியை வழங்குவதற்கு கால நீடிப்பு தேவைப்படுகின்றதாகத் தெரிகின்றது.

ஆனால் இந்திய அரசின் இந்தத் திட்டத்தை உடனடியாக ஆரம்பிக்க வேண்டிய தேவை உள்ளது. நவம்பர் மாத இறுதிக்குள் அத்திபாரம் போடும் பணி ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கட்டாயம் உள்ளது. இந்த நிலையில் உடனடியான தேவைக்கு மடத்து வளவு காணியைப் பயன்படுத்த முடியாது. ஆகவே காரைநகர் பிரதேசத்தில் வேறு ஒரு காணியை வழங்குவதற்கான நடவடிக்கைகளை பிரதேச செயலர் மேற்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளார். ஆகவே இந்திய வீட்டுத் திட்டம் கைவிடப்படாது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

# சமுர்த்திக் கொடுப்பனவில் முன்னர் இருந்த நடைமுறையே பின்பற்றப்படும்

## பயனாளிகளின் முத்திரை வெட்டல் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், நவ.15

நடப்பு வருடத்தின் சமுர்த்திப் பயனாளிகளின் முத்திரைகள் வெட்டப்பட்டாலும் அதன் பின்னரான நடைமுறைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

பயனாளிகளைத் தெரிவு செய்வதில் முன்னர் எவ்வாறான நடைமுறை காணப்பட்டதோ அந்த நடைமுறையே தற்போதும் காணப்படுகிறது. வருமானம் அதிகரிப்போருக்கே அது நிறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது

நடப்பு வருடத்தில் சமுர்த்திப் பயனாளிகளின் முத்திரைகள் வெட்டப்பட்டன. அது நியாயமற்றது என்று மக்கள் தெரிவித்து ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர். உண்மையில் சமுர்த்தி முத்திரைகள் கிடைக்க வேண்டிய வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு சமுர்த்திக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டு, தேவையற்றவர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படும் நிலையில் பெயர்ப் பட்டியில் வெளியிடப்பட்டிருந்தது.

இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் தொடர்பிலான மீளாய்வு நடவடிக்கைகள் ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் நடைபெற்றன.

இதன்போது பயனாளிகளின் தெரிவு தொடர்பில் தவறுகள் நடைபெற்றமை தெரிய வந்தது. இது தொடர்பில் உரிய திணைக்கள அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டு, பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்ட முறைகள் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்க வேண்டாம், முன்னர் இருந்த வழமையான முறையில் சமுர்த்திப் பயனாளிகளின் கொடுப்பனவுகளை வழங்கவும் என்று கொழும்பு அரசு தெரிவித்து இருந்தது.

இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்டச் செயலக சமுர்த்திப் பிரிவு தெரிவித்ததாவது.

வெளியிடப்பட்ட சமுர்த்திப் பயனாளிகளின் விவரங்கள் ஆராயப்பட்டன. உண்மையாக வருமானம் குறைந்தவர்களுக்கு கிடைக்க வேண்டிய சமுர்த்தி க் கொடுப்பனவு கிடைக்கவில்லை. ஆகவே தற்போது முன்னர் காணப்பட்ட முறைக்கு அமைவாக பயனாளிகள் தெரிவு நடைபெற்று வருகின்றது. மாத வருமானம் அதிகமாக உள்ளவர்கள் பயனாளிகளாக உள்ளனர் என்றால், அவர்களின் சமுர்த்திக் கொடுப்பனவுகளை, மாத வருமானம் குறைந்தவர்களைத் தெரிவு செய்து வழங்கும் செயற்பாடு நடைபெற்று வருகின்றது. முத்திரை வெட்டப்பட்டமை தொடர்பில் பின்னர் மேற்கொள்ள வேண்டிய செயற்றிட்டங்கள் யாவும் நிறுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி)

# தபால் விநியோகப் பணியாளர்களுக்கு 583 சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன

யாழ்ப்பாணம், நவ. 15

வடக்கு மாகாணத்தில் தபால் விநியோகப் பணியாளர்களுக்கு 583 சைக்கிள்களை தபால் தொலைத்தொடர்புகள் அமைச்சு வழங்கியுள்ளது.

பணியாளர்களுக்கு என ஒதுக்கப்பட்ட இந்த சைக்கிள்கள் அந்தந்த பிரிவுக்குட்பட்ட தபாலகங்களுக்கு அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு 269 சைக்கிள்களும், கிளிநொச்சிக்கு 94 சைக்கிள்களும், மன்னாருக்கு 80 சைக்கிள்களும், வவுனியாவுக்கு 83 சைக்கிள்களும், முல்லைத்தீவிற்கு 57 சைக்கிள்களும் என ஒதுக்கப்பட்டுள்ளன.

யாழ் மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட 269 சைக்கிள்களும் நேற்று முன்தினம் இரவு எடுத்து வரப்பட்டன.

மாவட்டத்தில் உள்ள தபால் பணியாளர்களுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை சைக்கிள்கள் வழங்கப்பட்டு வருவது வழக்கம்.

கடந்த 2016ஆம் ஆண்டு வழங்குவதற்கான சைக்கிள்களே தற்போது வழங்கப்பட்டு வருவதாக தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (எ-17)

# அபிவிருத்தி உத்தியோகத்தர் நியமனம் வழங்கலில் இழுத்தடிப்பு

## தகுதிகாண் புள்ளிகள் பெற்றோர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 15

வடக்கு மாகாண சபையால் அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கான நியமனங்கள் வழங்கப்படுவது இழுத்தடிக்கப்படுவதாக போட்டிப் பரீட்சையில் தகுதிகாண் புள்ளிகளைப் பெற்று வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருப்போர் குற்றம்சாட்டுகின்றனர். வடக்கு மாகாண சபையால் கடந்த ஜூலை 29ஆம் திகதி அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கான போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டது. பரீட்சைப் பெறுபேறுகள் ஒகஸ்ட் 29ஆம் திகதி வெளியிடப்பட்டன.

எனினும் இன்றுவரை, அதாவது இரண்டு மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரையில் பரீட்சையில் தெரிவானவர்களுக்கான நேர்முகத்தேர்வு நடைபெறவில்லை. இதனால் எமது நியம னத்துக்கான காலம் இழுத்தடிக்கப்படுகின்றது என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஏ.மோகன்தாஸ் கருத்து தெரிவித்ததாவது:

'அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கான பரீட்சைகள் எம்மால் நடத்தப்பட்டு விட்டன. இந்தப் பரீட்சைக்கு 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் தோற்றினர். அவர்களில் வெட்டுப்புள்ளி அடிப்படையில் ஆயிரத்து 600 பேர் வரையிலானோர் தகுதி பெற்றுள்ளனர். நாம் அவர்களின் விவரங்களை ஒழுங்குபடுத்தி மாகாணப் பிரதம செயலர் அலுவலகத்தின் பொது நிர்வாகத் திணைக்களத்துக்கு அனுப்பி வைத்துள்ளோம். இதனூடாக நாம் எமது பணியை முடித்துவிட்டோம்' என்றார்.

இது தொடர்பாக வடக்கு மாகாண பிரதம செயலாளர் அலுவலக நிர்வாக செயலர் எஸ்.மோகநாதன் கருத்துத் தெரிவித்ததாவது:

அபிவிருத்தி உத்தியோகத்தர் தரம் III இற்கான விண்ணப்பங்கள் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டன. ஆனாலும் சம்பளக் கொடுப்பனவு தொடர்பில் நாம் திறைசேரிக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளோம். இந்த விடயம் தொடர்பான வேலைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன என்றார். (எ-8)

# அடையாள அணிவகுப்பில் ஒருவர் இனங் காணப்பட்டார்

வடமராட்சி, நவ.15

வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் வடமராட்சிப் பகுதியில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவர்களில் ஒருவர் நேற்றைய அடையாள அணிவகுப்பில் இனங்காணப்பட்டார். சிறப்பு அதிரடிப்படையினர் அவரை இனங்காட்டினர். எதிர்வரும் 20ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வடமராட்சிப் பகுதியில் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டிருந்தார். மணல் கடத்தியவேளை அதைத் தடுப்பதற்குச் சூடு நடத்தியபோதே குறித்த இளைஞன் சாவடைந்தார் எனப் பொலிஸார் தெரிவித்திருந்தனர். இந்தச் சம்பவத்தை அடுத்து வடமராட்சிப் பகுதியில் வன்முறைச் சம்பவங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. வன்முறைச் சம்பவங்களில் ஈடுபட்டவர்களைப் பொலிஸார் கடந்த காலங்களில் கைது செய்திருந்தனர். அவ்வாறு 47 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களில் 38 பேர் நீதிமன்ற வழக்குகளின் போது விடுவிக்கப்பட்டனர். மிகுதி 9 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று தெரிவித்து மேலும் இருவர் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். நேற்றைய தினம் 7 பேர் அடையாள அணிவகுப்புக்காகக் கொண்டுவரப்பட்டனர். அவர்களில் ஒருவரையே சிறப்பு அதிரடிப்படையினர் அடையாளம் காட்டினர். (21,26)

# சிற்றுண்டிச் சாலை திறப்பு

தென்மராட்சி, நவ.15

கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி சிற்றுண்டிச் சாலைத் திறப்பு விழா இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது. கல்லூரியின் பிரான்ஸ் பழைய மாணவர் சங்கத்தின் ரூபா 18 லட்சம் நிதியில் நிர்மாணிக்கப்பட்ட சிற்றுண்டிச் சாலையே இன்று திறந்து வைக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் க.கமலேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக பழைய மாணவர் சங்க பிரான்ஸ் கிளையின் போசகர் த. பரமானந்தமும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகப் பிரதிக் கல்விப் பணிப்பாளரும், மதிப்புறு விருந்தினராக இந்திபுரம் ஸ்கந்தவரோதய அதிபரும் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (21,131)

# யாழ்.இந்து மகளிர் ஆரம்ப பாடசாலையின் பரிசளிப்பு

யாழ்ப்பாணம் நவ 15



யாழ்ப்பாணம், இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழா நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30மணிக்கு கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில் இடம்பெற்றது. பாடசாலை அதிபர் எஸ். மாணிக் கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாண வலயக்கல்விப் பணிப்பாளர் ந.தெய்வேந்திரராஜாவும், யாழ்ப்பாணம், உடுப்பிட்டிமகளிர்கல்லூரிஆசிரியர்தெ. பாமாவும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி அதிபர் மி.விமலநாதன், தேசிய சேமிப்பு வங்கி சுன்னாகம் கிளை முகாமையாளர் சி. தயானந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். (21)

# மாணவர்களுக்கான மதிப்பளிப்பு விழா

யாழ்ப்பாணம் கோப்பாய் மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கான மதிப்பளிப்பு விழா நடைபெறவுள்ளது. இன்று புதன்கிழமை மு.ப 11 மணிக்கு பாடசாலை முதன்மை மண்டபத்தில் நிகழவுள்ளது. இந்த நிகழ்வு பாடசாலை முதல்வரான தி.ஞானப்பிரகாசம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (எ)

# விசேட டெங்கு கட்டுப்பாட்டுப் பரிசோதனை நடவடிக்கைகள்

சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவினரால் விசேட டெங்கு கட்டுப்பாட்டு பரிசோதனை நடவடிக்கைகள் நாளை வியாழக்கிழமையும், நாளை மறுதினமும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை வரணிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலும் நாளைமறுதினம் மட்டுவில் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவிலும் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 9, 10, 11 ஆகிய திகதிகளில் நடத்தப்படவிருந்த டெங்கு பரிசோதனைகள் தொடர் மழை காரணமாக நிறுத்தப்பட்டன எனவும் அடுத்த வாரம் ஏனைய பகுதிகளில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளதெனவும் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

# காசோலைக்குப் பணம் வழங்கல் தவறானது:
# மோசடியென வழக்குத் தாக்கல் செய்து மீட்டலும் சட்டத்துக்கு முரணானது

## மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் அறிவுரை

யாழ்ப்பாணம், நவ. 15

மீற்றர் வட்டி, பிரமிட் வட்டி என்பவை சட்டவிரோதமானவை. காசோலைக்கு பணம் வழங்குவதும் சட்டவிரோதமானது. அந்தப் பணத்தை மோசடி செய்ததாக நீதிமன்றில் வழக்குத் தொடுத்து மீளப்பெறுவதும் தவறு. மீற்றர் வட்டிக்கு சட்டத்தரணிகள் அல்லது நொத்தாரிசுகள் வழங்கும் உடன்படிக்கைகளும் சட்டவிரோதமானவை. வங்கிகளால் அறவிடப்படும் அல்லது வழங்கப்படும் வட்டிகளே சட்டபூர்வமானவை.

இவ்வாறு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் நேற்று வழங்கிய தீர்ப்பொன்றில் சுட்டிக் காட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம், சுதுமலையில் சினிமாப் படமாளிகை அமைப்பதற்காக கடனாக 47 இலட்சத்து 85 ஆயிரம் ரூபா பணம் ஒருவரால் பெறப்பட்டது. அவர் படமாளிகைக்கான பொருள்களை வழங்காது இழுத்தடித்துவிட்டு பணம் வழங்கியவருக்கு காசோலைகளை வழங்கியுள்ளார். அவை கணக்குகள் மூடப்பட்ட காசோலைகள். இதனால் பாதிக்கப்பட்ட நபர் பொலிஸார் ஊடாக யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

குற்றம் நிரூபிக்கப்பட்ட நிலையில் காசோலையை வழங்கியவர் பணத்தை வழங்க வேண்டும் அல்லது 2 ஆண்டுகள் சிறைதண்டனையை அனுபவிக்க வேண்டும் என யாழ்ப்பாண மாவட்ட நீதிவான் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனு மீதான தீர்ப்பிலேயே நீதிபதி இளஞ்செழியன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மேற்குறித்த சட்டவிரோதமான வட்டிக் கடன் தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தொடர முடியாது. வட்டிக்கு கடன் வழங்கும் நிறுவனங்கள் அல்லது அடகு பிடிக்கும் நிறுவனங்கள் கடன் வழங்கல் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். வங்கிகள், நிதி நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்டவை. அவற்றைக் கண்காணிக்கும் பொறுப்பு மத்திய வங்கி ஆளுநருக்கு உண்டு. நிதி நிறுவனங்கள் அதிக வட்டிக்கு கடன் வழங்கினால் மத்திய வங்கிதான் கண்காணித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். காசோலை பெற்றுக் கொண்டு பணத்தை வட்டிக்கு வழங்குவது, அந்தக் காசோலை திரும்பியதும் நீதிவான் மன்றில் வழக்குத் தொடுப்பதும் நாளாந்தம் இடம்பெறுகின்றது. அது சட்டத்துக்கு முரணானது. திரும்பிய காசோலை தொடர்பில் பாதிக்கப்பட்டவர் சிவில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து அங்கு 'பிரதிபலன்' எண்பிக்கப்பட வேண்டும் என்று தெரிவித்து அவருக்கு 2வருடங்கள் கடூழியச் சிறைத்தண் டனை விதிக்கப்பட்டது.

இத்தகைய சட்டவிரோத செயற்பாட்டால் அண்மையில் ஒரு குடும்பமே காவு கொள்ளப்பட்டது. எதுவுமே அறியாத பச்சிளங்குழந்தைகள் இறந்து போனார்கள். இது ஒரு வாழ்க்கைப் பாடமாகும். தற்கொலை செய்யக் கூடாது. தற்கொலை செய்யத் தூண்டவும் கூடாது. தற்கொலை செய்யத் தூண்டுவதும் குற்றமாகும்' என்று மா. இளஞ்செழியன் தீர்ப்பில் கோடிட்டுக் காட்டியுள்ளார். (எ-8)

# விவசாயிகளுக்கான உரமானியம் இதுவரை வைப்பிலிடப்படவில்லை

யாழ்ப்பாணம், நவ. 15

நெற்செய்கை விவசாயிகளுக்கான உரமானியப் பணம் இதுவரை வங்கிகளில் வைப்பில் இடப்படவில்லையென மாவட்ட மட்டத்தில் நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளரால் சம்பந்தப்பட்ட விவசாயிகளின் 'கொவிசய' இலங்கை வங்கிக் கணக்குகளில் கடந்த ஆறாம் திகதி வைப்பில் இடப்படும் என தெரிவிக்கப்பட்டது. எனினும் அறிவிக்கப்பட்ட தினத்தில் இருந்து ஒருவாரம் கழிந்தும் பணம் வரவு வைக்கப்படவில்லை.

காலம் தாழ்த்தி உரம் கொள்வனவு செய்து பயிருக்கு உரமிடுவதில் பயனில்லை என தெரிவிக்கப்படுகிறது. (எ-50)

# நல்லாசிரியர் விருதுக்கு உள்வாங்காதது ஏன்? கேள்வி எழுப்பும் தனியார் பாடசாலைகள்

யாழ்ப்பாணம், நவ.15

'குருபிரதீபா' எனும் நல்லாசிரியர் விருதுக்கு தனியார் பாடசாலைகள் ஏன் உள்வாங்கப்படவில்லை. வடக்கு மாகாண கல்வி அமைச்சு இந்த விடயத்தை கவனத்தில் எடுக்குமா என கேள்வி எழுப்பியுள்ளனர் சில தனியார் பாடசாலைகளின் நிர்வாகிகள்.

தனியார் பாடசாலைகள் வலயரீதியாக ஒப்பிட்டுப் பார்க்கும்போது சிறந்த கல்வி அடைவு மட்டத்தையும், பெறுபேறுகளையும் வெளிக்காட்டிசிறந்த மாணவர்களை உருவாக்கி வருகின்றன.

இந்தப் பாடசாலைகள் தனியார் கட்டமைப்புக்குள் உட்பட்டுள்ள அதேநேரம், அரசின் சுற்றறிக்கைகள், போட்டிகள் நிகழ்வுகளில் கலந்து நாட்டிற்கு உயர்ந்த அடைவு மட்டங்களை பெற்றுத் தருகின்றன.

இந்த நிலையில் ஆசிரியர்களை மதிப்பளித்து வழங்கும் இந்த விருதுக்கு குறித்த பாடசாலை ஆசிரியர்கள் உள்வாங்கப்படவில்லை. ஆகவே எதிர்காலத்தில் குருபிரதீபா விருதுக்கு அந்தப் பாடசாலைகளையும் உள்வாங்க வடக்கு கல்வி அமைச்சர், செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன் வரவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விருது வருடந்தோறும் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த வருடம் விருது பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் அண்மையில் வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தால் மதிப்பளிக்கப்பட்டுள்ள நிலையில், தனியார் பாடசாலைகள் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-50)

# ஓ.ந.நி.அங்கத்தவர்களுக்கான அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு

பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் தென்மராட்சிக் கிளையின் அங்கத்தவர்களாக இணைந்துள்ளவர்களுக்கான நிதிய அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு இன்று மு.ப. 9 மணி தொடக்கம் மு.ப.11.30 மணி வரை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறுமெனக் கிளையின் தலைவர் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

தமது ஓய்வூதியத்திலிருந்து நம்பிக்கை நிதியத்துக்கு மாதாந்தப் பங்குப் பணம் செலுத்தச் சம்மதம் தெரிவித்து புதிதாக விண்ணப்பங்களை வழங்கியோருக்கும் ஏற்கனவே சம்மதம் தெரிவித்து ஒருவருடமாக பங்குப் பணம் வழங்குகின்றவர்களில் இதுவரை விண்ணப்பப் படிவத்தை வழங்காதவர்களுக்கும் அடையாள அட்டை வந்துள்ளது எனவும் இதுவரை சங்க உறுப்பினருக்கான விண்ணப்பம் கையளிக்காதவர்கள் தமது பின் உரித்தாளரின் விவரத்துடன் வருகை தந்து நிதிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவித்துள்ளார். (எ-9)

### உழவு இயந்திரம் - ஈருருளி

# புதுக்குடியிருப்பு ரெட்பானாவில் விபத்து இளைஞர் ஒருவர் பரிதாபமாக உயிரிழப்பு

முல்லைத்தீவு, நவ.15

புதுக்குடியிருப்பு, ரெட்பானா இளங்கோபுரத்தில் இடம்பெற்ற உழவு இயந்திரம் - ஈருருளி வித்தில், ஈருருளியில் பயணித்த இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இதில் இளங்கோபுரம் கிராமத்தைச் சேர்ந்த அழகிரி பவீந்திரன் (வயது-22) என்ற இளைஞரே பரிதாபகரமாக உயிரிழந்தார்.

பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் உள்ள ரெட்பானா சந்தியில் இருந்து இளங்கோபுரம் நோக்கிப் பயணித்த உழவு இயந்திரத்தின் சாரதி திடீரென வீதியை ஊடறுத்து தனது வீட்டுப்பக்கமாக அதைத் திருப்பிய போது எதிர் திசையில் தனித்தனியாக இரண்டு மோட்டார் சைக்கிள்களில் ரெட்பானா நோக்கி பயணித்த இளைஞர்களின் மோட்டார் சைக்கிள்கள் உழவு இயந்திரத்துடன் மோதுண்டு விபத்து இடம்பெற்றது. அதில் படுகாயமடைந்த ஒருவர் அங்கிருந்து மீட்கப்பட்டு மூங்கிலாறு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக புதுக்குடியிருப்பு பிரதேச வைத்திய சாலையின் அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டார். எனினும் அவர் உயிரிழந்துவிட்டார் என மருத்துவர்கள் தெரிவித்தனர். விபத்துச் சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்து சம்பவ இடத்துக்குச் சென்ற புதுக்குடியிருப்பு பொலிஸார் விபத்துக்குள்ளான வாகனங்களை மீட்டு புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றதுடன் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (21)

# ஒழுங்கையில் நடந்து சென்ற பெண்ணிடம் சங்கிலி பறிப்பு

சாவகச்சேரி, நவ.15

சாவகச்சேரியில் ஒழுங்கையில் நடந்து சென்ற பெண் அணிந்திருந்த சங்கிலியை அறுத்ததுடன் அவரிடம் கைப்பையையும் பறித்த மூவர் மோட்டார் சைக்கிளில் தப்பியோடியுள்ளனர்

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் நுணாவில் மத்தியில் இடம்பெற்றுள்ளது.

சாவகச்சேரியில் ஓய்வூதியம் எடுத்துக் கொண்டு வீடு திரும்பிய வேளையில் பின் தொடர்ந்து வந்த மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவர் மக்கள் நடமாட்டமில்லாத பகுதியில் சங்கிலியை அறுத்துள்ளனர்.

குறித்த நபர்களின் நடமாட்டத்தில் ஏற்கனவே சந்தேகம் கொண்ட பெண் சங்கிலியை இரு கைகளாலும் பிடித்திருந்ததால் சங்கிலியின் ஒரு துண்டு பெண்ணின் கைக்குள் அகப்பட மிகுதியை அறுத்ததோடு கைப்பையையும் பறித்துக் கொண்டு சென்றுள்ளனர் எனவும், அதற்குள் பணம் மற்றும் அடை யாள அட்டை, ஓய்வூதிய அட்டை போன்றவையும் இருந்தன எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

மோட்டார் சைக்கிளில் வந்த மூவரும் 20 வயதுக்கு உட்பட்டவர்கள் என பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்தார். (எ-9)

**மரண அறிவித்தல்**

**செல்லையா இராசேந்திரம் (பத்தர்)**



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா இராசேந்திரம் நேற்று (14.11.2017) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் செல்வராணியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அன்னலட்சுமி, மனோன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சந்திரஜெயந்தி, சந்திரகுமார், இந்திரஜெயந்தி, காலஞ்சென்றவர்களான இந்திரகுமார், ஜெயக்குமார் மற்றும் சாந்தகுமார், இராசகுமார், சூரியஜெயந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் நவரட்ணம் (நவம் - V.S.சபாரட்ணம் ஜுவல்லர்ஸ்), கிரிஜா, பத்மநாதன், வதுறியா, குமரன், வாசுகி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2017) புதன் கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**142/33, பூநாறி லேன், கொக்குவில் மேற்கு, கொக்குவில்.**

**தகவல்: குடும்பத்தினர். 077 869 6587**

# மீளாய்வுக் கூட்டத்தை மாதத்தில் இரண்டு தடவைகள் நடத்தப் பணிப்பு

## சுகாதார அமைச்சின் செயலாளரால்

வடக்கு மாகாணத்தில் சுகாதாரம் சார்ந்த மீளாய்வுக் கூட்டத்தை மாதத்தில் இரண்டு தடவைகள் நடத்துமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களை அமைச்சின் செயலாளர் பணித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

சுகாதாரம் தொடர்பான செயற்பாடுகள் எவ்வாறு நடைபெறுகின்றன, அவற்றுக்கு என்னென்ன தேவைகள் உள்ளன என்பவை தொடர்பாக ஆராய்வதற்கு இந்த கூட்டங்கள் அவசியமாகின்றன.

மாதம் ஒரு முறை ஐந்து மாவட்டங்களிலும் மீளாய்வுக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இந்தக் கூட்டங்கள் ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு வாரங்களுக்கு ஒரு தடவை கூட்டப்படுவதன் மூலம், சேவைகளை விரைவுபடுத்தவும், தேவைகளை இனம் கண்டு நடவடிக்கை எடுக்கவும் முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-ரி)

## மரண அறிவித்தல்



### நல்லதம்பி நல்லராசா (ஆனந்தன்)

கல்லுவம் கரணவாய் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி நல்லராசா (ஆனந்தன்) (14.11.2017) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி அழகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் தங்கமுத்து தம்பதியரின் அன்புமருமகனும் பாக்கியலட்சுமி (பாக்கியம்)யின் அன்புக்கணவரும் நவநீதா (லண்டன்), நவராஜ் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் ராஜ்குமார் (குமார் லண்டன்), தயாமினி (தயா, கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் றக்கிஷா, ஜெருஷா ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்றவர்களான இரத்தினேஸ்வரி, நல்லலிங்கம், சுந்தரலிங்கம் மற்றும் இராசலிங்கம் (கனடா), கிருஷ்ணலிங்கம், குலசேகரம் (கனடா), லகுநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் அன்னலட்சுமி, சற்குணராசா சரோஜினிதேவி, செல்வலக்சுமி தர்மராசா காலஞ்சென்ற பரமநாதன், சந்தானலக்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.11.2017) வியாழக்கிழமை பி.ப. 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வல்லை உப்புவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கல்லுவம் கரணவாய் மேற்கு,**
**கரவெட்டி.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

**பிறப்பு**
25 . 03 . 1975



**இறப்பு**
14 . 11 . 2018

### குணலிங்கம் சதீஸ்வரன்

சாந்தி நிலையம் கரணவாய் மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குணலிங்கம் சதீஸ்வரன் நேற்று (14.11.2017) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான க.குணலிங்கம் - தவமணி தம்பதியரின் அன்புமகனும் சாந்தினி (சுவிஸ்), சபேசன் (சுவிஸ்), சத்தியன் (சுவிஸ்), சாமினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2017) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் நடைபெற்று பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**கு. சத்தியன் - 077 514 6567**
**சுவிஸ் 0041 7180 19293, சாந்தினி 0041 71 244 1932,**
**சபேசன் 0041 712 447 091, சாமினி 0041 7124 7268**

**தேவை**

மேசன்மார், சியறாவின் வேலைத்தளங்களாக உள்ள கொழும்பு, கண்டி, அநுராதபுரம் இடங்களுக்கு தேவை. தொடர்பு - 077 297 5395, 071 1642 180, 077 945 7953, 077 5639 30

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
021 4931 111

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா /சாவகச்சேரி
றோ.க.த.க. பாடசாலை

Best Wishes



அதிபர் திருமதி த. பாலசுப்பிரமணியம்
(B.A. P.G.D.E, M.A)



ஆசிரியர் திருமதி உ. சாள்ஸ் றொபேர்ட்
(B.A. P.G.D.E.)

கடந்த (28.10.2017) அன்று வடமாகாண கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட நல்லாசிரியர் விருதினை 'குரு பிரதீபா பிரபா' பெற்று எமது பாடசாலையின் அதிபரையும் ஆசிரியரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**பாடசாலைச்சமூகம், யா /சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை.**

## சாவகச்சேரி பிரதேசசபை

**01.01.2018 முதல் 31.12.2018 வரை மரக்கறிச் சந்தைகள், மீன்சந்தை, இறைச்சிக்கடைகள், களஞ்சிய அறை, பொதுமலசலகூடம் என்பவற்றை குத்தகைக்கு விடுவதற்கான மீள் கேள்வி அறிவித்தல் - 2018**

**கேள்விப் பத்திரம் வழங்கும் திகதி :-15.11.2017-28.11.2017வரை**
**கேள்விப் பத்திரம் ஏற்கும் கடைசித் திகதி :-29.11.2017மு.ப 10.00மணிவரை**
**கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி :-29.11.2017மு.ப 10.30மணி**

**கேள்வி அறிவித்தல் அட்டவணை**

| இல | குத்தகை விவரம் | ஆகக் குறைந்தகேள்வி தொகை (VAT,NBT தவிர) | கேள்விவைப்புப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்விப் படிவக் கட்டணம் (VAT,NBT தவிர) |
|---|---|---|---|---|
| | கச்சாய் உப அலுவலகம் | | | |
| 01 | கொடிகாமம் மீன் சந்தை | 1357000.00 | 13600.00 | 750.00 |
| 02 | கொடிகாமம் சந்தைமாட்டிறைச்சிக்கடை | 1098400.00 | 11000.00 | 750.00 |
| 03 | கொடிகாமம் சந்தை கோழி இறைச்சிக் கடை | 1397800.00 | 14000.00 | 750.00 |
| 04 | களஞ்சியஅறை இல - 01 | 34700.00 | 500.00 | 750.00 |
| 05 | களஞ்சியஅறை இல - 02 | 33200.00 | 500.00 | 750.00 |
| 06 | கொடிகாமம்மத்திய பஸ்தரிப்பு நிலையத்திற்கு அருகாமையிலுள்ள மலசல கூடம் | 11800.00 | 500.00 | 750.00 |
| | வரணி உப அலுவலகம் | | | |
| 07 | வரணிபொதுச்சந்தை | 125500.00 | 1300.00 | 750.00 |
| 08 | வரணி இயற்றாலைபொதுச்சந்தை | 8600.00 | 500.00 | 750.00 |
| | கைதடி உப அலுவலகம் | | | |
| 09 | கைதடிமாட்டிறைச்சிக்கடை | 209100.00 | 2100.00 | 750.00 |
| 10 | கைதடிப் பொதுச்சந்தை | 19900.00 | 500.00 | 750.00 |
| | மிருசுவில் உப அலுவலகம் | | | |
| 11 | மிருசுவில் மாட்டிறைச்சிக்கடை | 383600.00 | 3800.00 | 750.00 |
| 12 | மிருசுவில் கோழி இறைச்சிக் கடை | 67900.00 | 700.00 | 750.00 |
| 13 | எழுதுமட்டுவாழ் கோழி இறைச்சிக் கடை | 52300.00 | 500.00 | 750.00 |
| 14 | மிருசுவில் பொதுச்சந்தை | 5800.00 | 500.00 | 750.00 |
| 15 | மிருசுவில் வடக்கு பொதுச்சந்தை | 18200.00 | 500.00 | 750.00 |
| 16 | எழுதுமட்டுவாழ் பொதுச்சந்தை | 6300.00 | 500.00 | 750.00 |
| | நாவற்குழி உப அலுவலகம் | | | |
| 17 | நாவற்குழிபொதுச்சந்தை | 3700.00 | 500.00 | 750.00 |
| 18 | நாவற்குழிமீன்சந்தை | 3100.00 | 500.00 | 750.00 |

**நியந்தனைகள்:**

1. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் குறித்த 15.11.2017தொடக்கம் 28.11.2017 வரையான காலப்பகுதிக்குள் கேள்விப் படிவத்தினை சாவகச்சேரி பிரதேசசபை தலைமைப் பணிமனையில் பெற்றுக்கொண்டு குறித்தொதுக்கப்பட்ட திகதிக்குள் மீள ஒப்படைக்க வேண்டும்.
2. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தும் ஆவணம்.அதன் நிழற்படப் பிரதியினையும் கொண்டு வருதல் வேண்டும்.
3. கேள்வித்தொகை, படிவக் கட்டணம், என்பவற்றுடன் Vat 15%, NBT 2% சேர்த்துச் செலுத்துதல் வேண்டும்.
4. 29.11.2017 ஆம் திகதியன்று மு.ப 10.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.
5. இறைச்சிக்கடைகளிற்கு சபையினால் விதிக்கப்படும் மாதவாடகை கேள்வித் தொகையுடன் செலுத்தப்பட வேண்டும்.
6. கால்நடைகள் சுகாதார பரிசோதகரின் அனுமதியுடன் கோயிலாமனை கொல்களத்தில் வெட்டப்பட்டு இறைச்சி கொண்டுவரப்படல் வேண்டும் அத்துடன் சபையினால் விதிக்கப்படும் மேலதிக நிபந்தனைகளுக்குக் கட்டுப்படுதல் வேண்டும்.
7. குத்தகைதாரரினால் குத்தகைக்கு எடுத்து நடத்தும் சந்தைக்கான அறவீடுகளிற்குப் பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படல் வேண்டும்.
8. தெரிவுசெய்யப்படும் கேள்விகாரர் ஒருவாரகாலத்துள் 1/3பகுதியை முற்பணமாக செலுத்த வேண்டும். மிகுதித் தொகையினை 1/6 பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு மாதக் கட்டணமாக அடுத்தமாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தல் வேண்டும். தவறின் 10% தண்டப் பணமாக அறவிடப்படும்.
9. கேள்விப் படிவத்தின் தபாலுறையின் இடதுபக்கமேல் மூலையில் குத்தகை விவரத்தினைக் குறிப்பிட்டு ஒருபிரதியினை **"செயலாளர், சாவகச்சேரி, பிரதேசசபை, கொடிகாமம்"** என்ற விலாசத்திற்கும் மறுபிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்"** என்ற விலாசத்திற்கும் நேரடியாகவோ பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
10. உள்ளூராட்சி மன்றங்களில் தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரம் வழங்கப்படமாட்டாது. படிவம் வழங்கப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரின் கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
11. கேள்விகளைத் தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் கேள்விச் சபைக்கு உண்டு.
12. மேலதிக விவரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**செயலாளர்,**
**சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம்.**
**15.11.2017.**

## கண்ணீர் அஞ்சலி


யாழ் போதனா வைத்திய சாலையில் தாதிய உத்தியோகத்தராக கடமை புரியும் செல்வி சந்திரன் சர்மிளா அவர்களின் அன்பு தந்தை.

### தம்பையா சந்திரன்

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாதியர் நலன்புரிக் கூட்டுறவுச்சங்கம், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்



### வேலுப்பிள்ளை நடராஜா

சரவணை கிழக்கைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நடராஜா 14.11.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான வேலுப்பிள்ளை - தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கைலாசபிள்ளை - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பகீரதிதேவியின் அன்புக் கணவரும் தியாகராஜா (கொழும்பு), மீனாம்பிகை (பேபி லண்டன்), காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் மகாலிங்கம் மற்றும் சிங்கராசா (பஞ்சு லண்டன்), ஞானசௌந்தரி (ஞானம் பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் லீலாவதி, பத்மநாதன், மங்களேஸ்வரி, சரோஜினி, நித்தியானந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2017) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பதிவுகாரர் ஒழுங்கை,
சுதுமலை தெற்கு, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.



### திருமதி இராஜேஸ்வரி வீரபாகு

கருவியாத்தனை, களபூமி, காரைநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி வீரபாகு 13.11.2017 திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கம்பளைத் தாமோதரம்பிள்ளை - மீனாட்சி தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான அப்பச்சி - அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்ளான அப்பச்சி வீரபாகுவின் (உரிமையாளர் - மகாலட்சுமி ஸ்ரோர்ஸ் பாணந்துறை) அன்பு மனைவியும் ரவீந்திரன், ரவிசங்கர் ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுகந்தி, சுகந்தா ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற பரமேஸ்வரி மற்றும் சுந்தரம்மா, பாலசிங்கம், அருட்செல்வம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் வேதரடைப்பு காரைநகரைச் சேர்ந்த காலஞ்சென்ற அப்பச்சி வேலுப்பிள்ளை (முன்னாள் உரிமையாளர் - மகாலட்சுமி ஸ்ரோர்ஸ், பாணந்துறை), காலஞ்சென்ற அ.செல்லத்துரை மற்றும் அ.சிதம்பரப்பிள்ளை (ஓய்வுபெற்ற விவசாயப் போதனாசிரியர்), காலஞ்சென்ற சரவணமுத்து சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துனியும் தனுஷன், மனோஜன், யஸ்வினி, கபீனன், சஜிதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.11.2017) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் காலை 8 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
077 124 8120 குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



மண்கும்பானைப் பிறப்பிடமாகவும்
பிரான்ஸை வதிவிடமாகவும்
கொண்ட

### அருளம்பலம் கலியுகவரதன் (நந்தன்)

**எமது அருமைச் சகோதரனே!**

நாம் எண்மர் ஒன்றாகப் பிறந்தோம்
உன்னைக் கடைக்குட்டி என்று அன்பாக அரவணைத்து
கலியுகவரதன் என கந்தனின் நாமமிட்டு
கவலைகள் மறந்திருந்தோம் நீ கடல் கடந்து சென்று
பரிஸ் நாட்டில் நலமாய் வாழ்கின்றாய்
என மகிழ்வுடன் நாம் இருக்க
காலனவன் இடைநடுவில் கவர்ந்துவிட்டான்
நாம் இறுதியாக உன் புன்னகை பூத்த முகத்தைக்
காணாது ஏங்கித் தவிக்கின்றோம் இங்கிருந்து
ஆத்மா சாந்தியடைய மண்கும்பான் முருகப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்

ஈரவிழிகளுடன் - சகோதரிகள்
பரமேஸ்வரி மகாலிங்கசிவம், இரத்தினக்கிளி குழந்தைவேலு,
யோகேஸ்வரி சுந்தரலிங்கம் மற்றும் மருமக்கள்

இல.145, கொழும்புத்துறைவீதி, சுண்டுக்குளி.

இறுதிக்கிரியைகள் இன்று 15.11.2017 பிற்பகல் 12.30 மணிக்கு பரிஸ், பிரான்சில் நடைபெறும்.

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா தெய்வநாயகம்



மண்ணில் 1944.07.02 விண்ணில் 2017.11.14

அளவெட்டி மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தெய்வநாயகம் நேற்று (14.11.2017) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் செல்வராணி யின் அன்புக்கணவரும் தாட்ஷாயினி, கயலினி, விதுரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் ஜெயந்திரன், தனசீலன், சுகுணா ஆகி யோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற சந்திராதேவி மற்றும் சற்குணதேவி ஆகியோரின் அண்ணனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2017) புதன்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணிக்கு அளவெட்டி கொட்டுப்பளை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அளவெட்டி மேற்கு.

தகவல்:
குடும்பத்தினர்.

### அம்பலவாணர் இராசேந்திரம்



சுதுமலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அம்பலவாணர் இராசேந்திரம் 13.11.2017 திங்கட்கிழமை மாலை சிவபதம் அடைந்தார்.

அன்னார் அம்பலவாணர் பூமணி, தம்பதியரின் மகனும் தினேஸ்குமார், சதீஸ்குமார், சுதீஸ்குமார், குணேஸ்குமார், கயந்தா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடை பெற்று இன்று (15.11.2017) புதன்கிழமை காலை 10 மணியளவில் பூதவுடல் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தேவராஜா குடும்பத்தினர். (வீரபத்திரர் ஆலயம்)

திருமதி

### மகேஸ்வரி மன்மதராசா (றூபா)



யாழ்ப்பாணம், நீராவியடியைப் பிறப்பிட மாகவும் ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி மன்மதராசா (13.11.2017) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களானமார்க்கண்டு-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் மன்மதராசாவின் (வெள்ளை) அன்பு மனைவியும் நந்தினி (ஜேர்மனி), சுஜேந்தினி, யாழினி (யா/செட்டித்தெரு மெதடிஸ் மிஷன் த.க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ரகுராம், றெஜினோல்ட் ஸ்ரீபன், பகீரதன் (யா/போதனா வைத்தியசாலை) ஆகியோரின் மாமியும் விபூஷிதன், பிரணவன், சங்கவி, சௌமியா, ஷபானா, மினிஷன், நிபான், அகர்ஷன், சாய்சரண் ஆகியோரின் பேர்த்தியும் நகுலேஸ்வரன், கனகாம்பிகை, யோகாம்பிகை, கல்யாணி, தேவகி ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(15.11.2017)புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப 2.00 மணிக்கு கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

408, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம்.
077 900 4158, 021 568 6444

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



மலர்வு 19 . 03 . 1929

உதிர்வு 10 . 11 . 2017

### நாகலிங்கம் குணரட்ணம்

(ஓய்வுபெற்ற நில அளவையாளர்)


யாழ். பருத்தித்துறை 2ஆம் குறுக்குத்தெருவைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறை, டென்மார்க், நோர்வே ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் குணரட்ணம் 10.11.2017 வெள்ளிக்கிழமை நோர்வேயில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - அழகுசுந்தரம் தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - செல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், நித்தியநாதன், கலாவதி, கௌரி, ரகுநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், சாம்பசிவம், புகனம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், இரட்னேஸ்வரி, கயிலாசநாதன், சுதர்ணிமா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நாகம்மா, நல்லம்மா, கந்தசாமி, லட்சுமிபிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனரும், கயிலைவாசன், கயிலைராஜன், கயிலைசெல்வன், கயிலைசெல்வி, டணிசன், பிரகாஷ், கீதா, சொல்வி, சாலினி ஆகியோரின் அன்புப் பேரனும், ஈசலின், கிரிஷ், ராம், ஈவார், ஆருன், வள்ளி ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நோர்வேயில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

ரகுநாதன் (மகன் - டென்மார்க்) +4526353793
கலாவதி(மகள் - நோர்வே) +4772845521



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 25.01.1945 | 14.11.2017 |

### சுப்பிரமணியம் பழனிவேல்

அராலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் அராலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பழனிவேல் நேற்று (14.11.2017) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பார்வதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - இராசலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும் கோகிலாவதியின் அன்புக் கணவரும் சத்தியசீலன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம், கிளிநொச்சி), நகுலா, கஜானி (வைத்தியர், யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும் மைதிலி (ஆசிரியர், யா / வட்டு இந்துக்கல்லூரி), சிற்சபேசன் (உரிமையாளர், சத்தியா பந்தல் சேவை), அனுதர்சன் (பொறியியலாளர், UNOPS) ஆகியோரின் அன்பு மாமனும் பூர்வஜா, கிருஷ்மிகா, லோஜினி, கரிஸ்னி, திகாஷ்னி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2017) புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அராலி, பூனாவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அராலி மத்தி, வட்டுக்கோட்டை.
077 358 0754

தகவல்:
ப.சத்தியசீலன்
(மகன்)

# தமிழ் அரசியல் கைதிகள் விடுதலைக்காகப் பேரணி









# மங்களவின் பட்ஜட் சூப்பர்!

## அமைச்சர் மகிந்த அமரவீர பாராட்டு

கொழும்பு, நவ. 15
அமைச்சர் மங்கள சமரவீர இரண்டு பிரதான கட்சிகளிலும் செயற்பட்டவர். அவர் இரு கட்சிகளினதும் கொள்கைகளை உள்வாங்கி வரவு - செலவுத் திட்டத்தை தயாரித்துள்ளமை வரவேற்கத்தக்கது. அவரது வரவு - செலவுத் திட்டமும் மிகச் சிறப்பானது. இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலரும், அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் நேற்றுமுன்தினம் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிதி அமைச்சர் மங்கள சமரவீர தனது கன்னி வரவு - செலவுத் திட்டத்தை முன்வைத்திருக்கின்றார். இதில் பல பசுமையான விடயங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்கவொரு விடயம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியானது தனது கொள்கைகளுக்கு உட்பட்டதாகவும் நாட்டின் எதிர்காலம் தொடர்பாகவும் கவனம் செலுத்தி பல முன்மொழிவுகளைச் செய்திருந்தோம். அது குறித்த தொகுப்பொன்றையும் நாம் நிதி அமைச்சரிடம் கையளித்திருந்தோம். அந்த விடயங்கள் தொடர்பாக நிதி அமைச்சர் சிறப்புக் கவனம் செலுத்தியுள்ளமைக்கு எமது நன்றிகள். தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல், வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் வகையில் உதவிகள் வழங்குதல், பன்னாட்டு முதலீட்டுக்கான வாய்ப்புக்களை அதிகரித்தல் உள்ளிட்ட சகல விடயங்கள் தொடர்பாகவும் நாம் செய்த முன்மொழிவுகள் உள்வாங்கப்பட்டுள்ளன.

2018ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தை கனவுலக வரவு - செலவுத் திட்டம் என்று விமர்சித்தார்கள். அவ்வாறு விமர்சித்த மகிந்த அணியால் தற்போது வரவு - செலவுத் திட்டம் குறித்து சரியான விமர்சனங்களை வெளிப்படுத்த முடியாதுள்ளது. இந்தச் சபையில் அவதானிக்க முடிகின்றது. வரவு - செலவுத் திட்டத்தில் வெளிநாட்டவர்களுக்கு காணிகளை வழங்கி இருப்பதாகவும் இதனால் நாட்டுக்கு ஆபத்து ஏற்படவுள்ளதாகவும் கூறப்படுகின்றது. அது மட்டமன்றி அரச சொத்துக்கள் தனியார் மயப்படுத்தப்படும் என்றும் கூறப்படுகின்றது. இவ்வாறு வெளியிடப்பட்ட அச்சம் சம்பந்தமாக நாம் அமைச்சரவையில் ஆராய்ந்தோம். எமது நாட்டில் உள்ள இளைஞர்களுக்கு அதிகளவிலான



தொழில் வாய்ப்புக்களை உருவாக்கும் தரப்பினருக்கு காணிகளை வழங்குவது தவறாகாது. முறையின்றி வெளிநாட்டவருக்கு காணிகளை வழங்குவதை அனுமதிக்க முடியாது. அதற்கு நாம் ஒருபோதும் அங்கீகாரம் வழங்கப் போவதில்லை என்பதைப் பொறுப்புடன் கூறுகின்றேன்.

தற்போது அரச வளங்கள் தனியார் மயப்படுத்தப்படவுள்ளதாக கூறப்படுகின்றது. செவனகல சீனித் தொழிற்சாலையை வழங்கப்போவதாக இப்போது அதிகளவில் பேசப்படுகின்றது. செவனகல சீனித் தொழிற்சலை மட்டுமல்ல அரசுக்குச் சொந்தமான எந்தவொரு சொத்துக்களையும் நாம் தனியாருக்கு விற்பனை செய்வதை அனுமதிக்கப்போவதில்லை. ஆனால் அரச தனியார் - கூட்டு முயற்சிகள் முறையாகவும் வெளிப்படையாகவும் முன்னெடுக்கப்படும் பட்சத்தில் அதற்கு நாம் ஆதரவளிப்போம் - என்றார். (5.31)

# 2020இல் சுற்றுலாவிகள் இலங்கையை நிரப்புவர்

## அமைச்சர் ஜோனின் எதிர்பார்ப்பு

கொழும்பு, நவ. 15
2020 ஆம் ஆண்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும். இவ்வாறு சுற்றுலா மற்றும் கிறிஸ்தவ மத விவகார அமைச்சர் ஜோன் அமரதுங்க சபையில் தெரிவித்தார். நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை, வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான மூன்றாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இராஜதந்திர ரீதியாக பன்னாட்டுச் சமூகத்தை நாம் குறுகிய காலத்தில் வெற்றிகொண்டுள்ளோம். எமக்குப் பெறுமதி ஏற்பட்டுள்ளது. பல நல்ல யோசனைகளை முன்மொழி ந்துள்ளோம். நிலையான அபிவிருத்தியைத் தக்கவைத்துக் கொள்ள முடியும்.

சுற்றுலாத் துறையில் பெரிய முன்னேற்றத்தைக் காணவுள்ளோம். 2020ஆம் ஆண்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கின்றோம். இதற்கான ஹோட்டல்கள் எல்லாப் பாகங்களிலும் அமைக்கவுள்ளோம். கடலோர தொடருந்துப் போக்குவரத்து, சுற்றுலாத் துறைக்கான பொலிஸ் துறையின் அதிக கவனம் செலுத்தவுள்ளோம் என்றார். (5.31)

# நியூசிலாந்து சென்ற 4 படகுகள் இடைமறிப்பு!

## இலங்கையர்களும் உள்ளடக்கம்?

கொழும்பு, நவ. 15
நியூசிலாந்து நோக்கிப் பயணித்த ஏதிலிகளின், நான்கு படகுகளை ஆஸ்திரேலிய அதிகாரிகள் இடைமறித்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. இலங்கையைச் சேர்ந்தவர்களும் அதில் உள்ளடங்கி இருக்கலாம் என்றும் கூறப்படுகின்ற போதும் இன்னும் உறுதிப்படுத்தப் பட வில்லை. அந்தப் படகுக ளில் 164 ஏதிலிகள் பயணி த்ததாகக் கூறப்படுகிறது. (5)

# வடக்கிலுள்ள 249 பாடசாலைகளுக்கு விரைவில் ஆய்வுகூட உபகரணங்கள்

கொழும்பு, நவ. 15
வசதிகள் குறைவான தரம் 6 தொடக்கம் 11 வரையிலான வகுப்புகளையுடைய 3 ஆயிரம் பாடசாலைகளுக்கு ஆய்வு கூட உபகரணங்களை வழங்க கொழும்பு அரசின் கல்வி அமைச்சுத் தீர்மானித்துள்ளது.

மேல் மாகாணத்தில் 448 பாடசாலைகளுக்கும், மத்திய மாகாணத்தில் 440 பாடசாலைகளுக்கும், தென் மாகாணத்தில் 306 பாடசாலைகளுக்கும், வட மாகாணத்தில் 249 பாடசாலைகளுக்கும், கிழக்கு மாகாணத்தில் 322 பாடசாலைகளுக்கும், வடமேல் மாகாணத்தில் 403 பாடசாலைகளுக்கும், வட மத்திய மாகாணத்தில் 173 பாடசாலைகளுக்கும், ஊவா மாகாணத்தில் 249 பாடசாலைகளுக்கும், சப்ரகமுவ மாகாணத்தில் 410 பாடசாலைக்ளுக்கும் இந்த உபகரணங்கள் வழங்கத் தீர்மானிக்கப்பட் டுள்ளது. பாடசாலை ஆய்வு கூடங்களில் எளிதாகப் பயன்படுத்தக் கூடிய மற்றும் 5 ஆண்டுகளுக்குப் பாவிக்கக்கூடிய அளவிலானதுமான உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

இந்தச் செயல்திட்டத்துக்காக கல்வி அமைச்சரின் ஆலோசனையின் கீழ் 450 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (5.31)

# 3லட்சம் கோடி ரூபா 2 ஆண்டுகளில் செலுத்தவேண்டும்

## தலைமை அமைச்சர் தகவல்



கொழும்பு, நவ. 15
அடுத்த இரண்டு ஆண்டுகளில் 3 லட்சம் கோடி ரூபா கடன் செலுத்தவேண்டியிருப்பதாகத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு மாவட்டத்தில் வசதி குறைந்த 2 ஆயிரத்து 300 பேருக்கு வீட்டு உரிமைப் பத்திரம் மற்றும் வீட்டுக்கடன் வழங்கி வைக்கும் நிகழ்வு அலரி மாளிகையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட தலைமை அமைச்சர் ரணில் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு அரசின் நன்மைகள் மக்களுக்குக் கிடைக்க ஆரம்பித்துள்ளது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் இன்னும் பல பிரதிபலன்களைக் கண்டுகொள்ளலாம். மக்களுக்கு நலன்புரியும், இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்புக்களையும் அதிகரிக்கும் வேலைத்திட்டத்தை அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் முன்மொழிந்துள்ளோம்.

மைத்திரிபால சிறிசேன தலைமையிலான இந்த அரசை நாங்கள் பெற்றுக்கொள்ளும்போது கடனைத்தவிர வேறு எதுவும் எங்களுக்கு எஞ்சியிருக்கவில்லை. இந்தச் சவாலை ஏற்றுக்கொண்டு கடனை அடைப்பதுடன் மக்களின் நலன்புரிகளை மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுத்தோம். கடந்த இரண்டு ஆண்டுகளில் நாங்கள் நாட்டின் கடனை அடைப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையிலே வேலைத் திட்டங்களை மேற்கொண்டோம். அந்தக் காலப்பகுதியில் மீதொட்டமுல்ல குப்பைமேடு சரிவு, வெள்ளப்பெருக்கு, வறட்சி போன்ற இயற்கை இடர்களுக்கும் முகம்கொடுக்க நேரிட்டோம்.

கடந்த காலத்திலும் வீடமைப்பு அமைச்சு இருந்தது. அந்த அமைச்சினால் வீடுகள் கட்டப்படவில்லை. மக்களின் வீட்டுப் பிரச்சினைக்கு எந்த உதவிகளும் கிடைக்கவில்லை. தொடர்ந்து மக்களின் வீட்டுப்பிரச்சினை இருந்து வந்தது. மக்களின் வீட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசு முறையான வேலைத்திட்டத்தை ஆரம்பித்து கடந்த இரண்டரை வருடங்களில் 2 லட்சத்து 50 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டு வசதிகளை மேற்கொண்டுளோம்.

கடந்த காலத்தில் நிலையான பொருளாதாரம் இருக்கவில்லை. தொழில் வாய்ப்புக்கள் இருக்கவில்லை. இளையோருக்கு அதிகமான தொழில்வாய்புக்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம் - என்றார். (5.31)

# பியருக்கான விலைக்குறைப்பை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டேன்

## வாக்கெடுப்புக்கு முன்னர் அந்த யோசனை மீளப்பெறவேண்டும் என்கிறார் சுகாதார அமைச்சர்



கொழும்பு, நவ. 15
பியர் மற்றும் வைன் விலைக் குறைப்பை என்னால் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. சுகாதாரத்துக்குப் பாதிப்பான எந்தவொரு திட்டங்களையும் அந்தத் துறைக்கான அமைச்சர் என்ற வகையில் ஆதரிக்க மாட்டேன். வரவு - செலவுத்திட்டம் இறுதி வாக்கெடுப்பில் நிறைவேற்றப்படுவதற்கு முன்னர் பியர், வைன் ஆகியவற்றுக்கு வழங்கிய சலுகைகளை நிதியமைச்சர் மீளப்பெற வேண்டும். இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில்நேற்றுமுன்தினம், வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிதி அமைச்சர் மங்கள சமவீரவின் நீலப் பசுமைத் திட்டத்தை நான் பாராட்டுகின்றேன். பன்னாட்டுத் தரம் வாய்ந்த வரவு செலவுத் திட்டமாக இதனைக் கருத முடியும். நாட்டின் பொருளாதாரத்தை தூர நோக்குடன் அவதானித்தே வரவு செலவுத் திட்டத்தை அமைச்சர் சமர்ப்பித்துள்ளார்.

சுகாதாரத் துறைக்கு ஆரோக்கியமான நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நாட்டில் சீனி நுகர்வினைக் குறைப்பதற்கு அமைச்சர் என்ற வகையில் கடந்த காலங்களில் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளேன். கடந்த காலங்களில் மென்பான தயாரிப்பினை முன்னெடுக்கும் பல்தேசிய நிறுவனங்கள் பெரிய இழப்பைச் சந்தித்துள்ளது. பல்தேசிய நிறுவனங்கள் என்னிடம் இந்தத் திட்டத்தை கைவிடுமாறு கோரினர். அதற்கு நாம் அடிபணியாது இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் மென்பானங்களுக்கான சீனி அளவுக்குக் கட்டுப்பாட்டை விதிக்க நடவடிக்கை எடுக்குமாறு நிதி அமைச்சரிடம் கோரினோம். பல அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நிதியமைச்சர் மென்பானங்களில் உள்ள சீனி ஒரு கிராமிற்கு 50 சதம் வரி விதித்தமை பாராட்டத்தக்கது.

> வீதி விபத்துகளுக்கு மதுபாவனை பிரதான காரணமாக உள்ளது. மதுக்கான வரித் தொகையை அதிகரிப்பதனை விடுத்துக் குறைக்கக் கூடாது.

பியர் மற்றும் வைன் ஆகியவற்றுக்கான விலைக் குறைப்புச் செய்தமையை ஒருபோதும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. நாட்டின்மதுப்பாவனை தொடர்பாக நிதியமைச்சருக்குக் கிடைத்த புள்ளி விபரம்முற்றிலும்பிழையானது. தற்போது சட்டவிரோத மதுப் பாவனை குறைவு.

ஐரோப்பியாவில் பியர் பாவனையை முன்னுதாரணமாக எடுத்து காட்டுவது தவறாகும். ஏனெனில் ஐரோப்பிய நாட்டுக்கான பியர்ப் பாவனைக்கும் இலங்கையில் பியர் பாவனைக்கும் பெரும் வித்தியாசம் உள்ளது. ஆசியா நாடுகளுக்கு, ஐரோப்பிய நாடுளின் புள்ளி விபரங்கள் சரிவராது. இலங்கையைப்பொறுத்தவரையில் 35 சதவீதத்திற்கு உட்பட்ட வகையிலேயே மதுபாவனை உள்ளது. சட்டவிரோத மதுப்பாவனை 6 சதவீதமே உள்ளது. பியருக்கும் வைனுக்கும் சலுகை வழங்கினால்எமதுநாட்டுஇளைஞர்கள் அதிகளவில் புதிதாகப் பாதிக்கப்படுவர். வீதி விபத்துகளுக்கு மதுப்பாவனைபிரதான காரணமாக உள்ளது. மதுக்கான வரித் தொகையை அதிகரிப்பதனை விடுத்துக் குறைக்கக்கூடாது. சவூதி அரேபியாவைப்போன்று முழுமையாக இல்லாமல் செய்யுமாறு கோரவில்லை. ஏனெனில் இலங்கையின் சுகாதாரம் பன்னாட்டுத் தரமிக்கதாகும். எனவே அதனை இல்லாமல் செய்யவேண்டாம் - என்றார். (5.31)

# ரணதுங்க, செனவிரத்ன விரைவில் தீர்க்கமான முடிவு

## ஆரூடம் கூறுகிறார் வாசுதேவ



கொழும்பு, நவ. 15
அரசின் உள்குத்துவெட்டுக்கள் உள்ளூராட்சித் தேர்தலில் எதிரொலிக்கும். அமைச்சர்களான அர்ஜுன ரணதுங்க மற்றும் ஜோன் செனவிரத்ன இருவரும் தீர்க்கமான முடிவை விரைவில் எடுப்பார்கள். இவ்வாறு மகிந்த அணி ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசின் வரவு செலவுத் திட்டத்தில் மக்கள் எதிர்பார்த்த எந்தச் சலுகையும் இல்லை. மக்கள் உள்ளூராட்சித் தேர்தலில் தக்க பாடம் புகட்டுவார்கள்.

அரசுக்குள் இணக்கப்பாடு இல்லை. குத்துவெட்டுக்கள் அதிகரித்துள்ளது. அமைச்சர் ஜோன் செனவிரத்ன அரசு ஒரு நிலையான இணக்கப்பாட்டுக்கு வரா விட்டால் தீர்க்கமான முடிவொன்றை எடுப்பதாக தெரிவித்துள்ளார். அதேபோன்று கடந்த வாரம் நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாட்டு பிரச்சினைக்கு எதிராக தலைமை அமைச்சர் ரணிலின் சகாக்கள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவுக்கு எதிராக நடவடிக்கை எடுத்து வருகின்றனர். அமைச்சர் அர்ஜுனரணதுங்கவும்மிக விரைவில் தீர்மானத்தை எடுக்கும் சாத்தியம் இருக்கின்றது. உள்ளூராட்சித் தேர்தல் முடிவுடன் அரசுக்கு மக்கள் ஆணை இல்லாமல் போவதுடன் அரசின் காலமும் முடிவடைந்துவிடும்.

### சாட்சியம் பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்

மத்திய வங்கி பிணைமுறி மோசடியில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க முதன்மைச் சந்தேகநபர் என்பதை நாங்கள் வெளிப்படுத்தியுள்ளோம். பிணைமுறி விசாரணை நடத்த அரச தலைவரால் அமைக்கப்பட்ட ஆணைக் குழுவுக்குத் தலைமை அமைச்சர் தனது நியாயம் தொடர்பாக எடுத்துரைத்துள்ளார். தலைமை அமைச்சரின் வாக்குமூலம் ஊடகங்களில் வெளியாகவில்லை.

பிணைமுறியுடன் தொடர்புபட்ட அனைவரும் வாக்குமூலம் அளிக்கும்போது அவை ஊடகங்களில்வெளிப்படுத்தப்பட்டன.

தலைமை அமைச்சர் ஆணைக்குழுவுக்கு வழங்கிய வாக்குமூலம் தொடர்பாகவும் மக்கள் அறிந்து கொள்ளவேண்டும். அதற்கான உரிமை இருக்கின்றது - என்றார். (5.31)

# பெற்றோல் குழப்பத்துக்கு காரணமானவர்கள் யார்?

## ரணதுங்க வெளிப்படுத்தவேண்டும் என்கிறார் உதய கம்மன்பில

கொழும்பு, நவ. 15
நாட்டை ஆட்டிப்படைத்த பெற்றோல்ப் பிரச்சினைக்கு முன்னாள் அமைச்சர்கள் இருவர் காரணம் என்று அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்திருந்தார். அவர்கள் இருவரையும் யார் என்று நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தவேண்டிய பொறுப்பு அமைச்சர் ரணதுங்கவுக்கு இருக்கின்றது. இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வாரம் பெற்றோல் பற்றாக்குறை பெரும் பிரச்சினையாகக் காணப்பட்டது. இது சதித்திட்டம் என்று பெற்றோலியத்துறை அமைச்சர் ரணதுங்க குறிப்பிட்டார். இதற்குக் காரணமானவர்களை மக்களுக்கு அடையாளம் காட்டுவதாகவும் தெரிவித்தார். ஆனால் அவர் இதுவரை அதனைச் செய்யவில்லை.

இந்த அமைச்சுப் பொறுப்பில் இதுவரை 6 அமைச்சர்கள் இருந்துள்ளனர். இவர்களில் இருவர் இந்த விடயத்துடன் தொடர்புபட்டதாகவும் அவர்களைத்தான் வெளிப்படுத்துவதாகவும் குறிப்பிட்டமை ஏற்கக்கூடிய விடயம். மிகுதியாக உள்ள நால்வரது நிலமை கவனிக்கத்தக்கது. இவர்களையும் இந்த விடயத்துடன் தொடர்புபடுத்துவது முறையற்ற விடயம்.

கடன் சுமையில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதே அரசின் நோக்கம் என்று கூறுகின்றனர். நாட்டின் அத்தியாவசியப் பொருள்களின் விலைகளை அதிகரித்தும், அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை விற்றுமா கடன் சுமை குறையவில்லை.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவினால் அதிகரித்த கடன்சுமை தற்போது கூட்டு அரசின் மூலம் குறைவடைந்துள்ளதா? மகிந்தவின் ஆட்சியினை விட தற்போது கடன்சுமை அதிகரித்து உள்ளது. நூற்றிற்கு 39 சதவீதத்தால் உயர்வடைந்துள்ளது.

மகிந்த ராஜபக்ச கடன் பெற்றிருந்தாலும் அவர் பராக்கிரமபாகு மன்னனின் சாதனைக்கு ஒப்பாகப் பல திட்டங்களை மேற்கொண்டுள்ளார். எதிர்காலச் சந்ததியினர் பேசும் விடயங்கள் பலவற்றைச் செய்துள்ளமையை நாம் ஏற்றுக்கொள்ளவே வேண்டும்.

இந்த அரசு 2.3 ட்ரில்லியன் கடன் பெற்றுள்ளது. இது வரை என்ன அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு முழுமைப்படுத்தியுள்ளது. அபிவிருத்தி என்ற பெயரில் வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்வதிலே குறியாக உள்ளது. அபிவிருத்தி மேம்பாடு மக்கள் மத்தியில் வெறும் கானல் நீராகவே காட்சிப்படுத்தப்பட்டுள்ளது - என்றார். (5.31)

# எங்கள்கட்சியிலோ, எதிர்க்கட்சியிலோ மோசடிக்காரர்கள் சிக்குவார்கள்

## சிறப்பு நீதிமன்றம் அதற்கானது என்கிறார் அமைச்சர் காமினி



கொழும்பு, நவ. 15
மோசடி செய்தவர்கள் எமது கட்சியோ அல்லது எதிர்க்கட்சியோ எவராக இருப்பினும் எந்தவொரு தராதரம் பாராமல் நடவடிக்கை எடுக்க சிறப்பு நீதிமன்றத்தைக் கொண்டு வரவுள்ளோம்.

மோசடிக்கார்கள் அனைவரும் சிக்கிகொள்ளப் போகின்றனர். இவ்வாறு வனஜீவராசிகள், வனப் பாதுகாப்பு மற்றும் பௌத்த மத விவகார அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா சபையில் தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டம் மீதான இரண்டாம் வாசிப்பில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரினால் மூவின மக்களும் பாதிக்கப்பட்டனர். கண் திறந்து நாம் நாட்டைக் கட்டியெழுப்பக் களமிறங்க வேண்டும். இனவாதத்தை தூண்டினால் அதற்கு எதிராக முதுகெலும்புடன் நடவடிக்கை எடுப்போம். இனவாதத்தை பௌத்தம் போதிக்கவில்லை.

மொத்த உள்நாட்டு உற்பத்தியும் தேசிய வருமானமும் அதிகரித்துள்ளது முன்னேற்றகரமான செயற்படாகும். நாம் உரிய திட்டத்துடனே பயணித்துக் கொண்டுள்ளோம்.

முன்னைய ஆட்சியின் செயற்பாடுகளின் காரணமாக மக்களிடம் இருந்து வரி பெற்றுச் சீனா போன்ற நாடுகளுக்கு கடனாகச் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது நாம் சிறப்பு நீதிமன்றத்தைக் கொண்டு வரப்போகின்றோம்.

மோசடி செய்தவர்கள் எமது கட்சியோ அல்லது எதிர்க்கட்சியோ எந்தவொரு தராதரம் பாராமல் நடவடிக்கை எடுக்க சிறப்புநீதிமன்றம் கொண்டு வரவுள்ளோம் - என்றார். (5.31)

பதிலடிக்குத் தயாராகிறது மைத்திரி அணி

# மகிந்தவின் சகாக்களிடமிருந்து உறுப்புரிமையைப் பறிக்கத் திட்டம்

கொழும்பு, நவ. 15
மகிந்த அணி பக்கமுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களுக்கு எதிராகக் கடும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து, அவர்களைக் கட்சி உறுப்புரிமையில் இருந்து நீக்குவதற்குச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளது என்று அறியமுடிகின்றது.
குமார வெல்கம, பிரசன்ன ரணதுங்க, சி.பி. ரத்நாயக்க, பவித்ரா வன்னியாராச்சி, திலும் அமுனுகம ஆகிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராகவே கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.
உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னதாக இந்தக் குழுவினருக்குப் பாடமொன்றைக் கற்பிக்கவேண்டும் என்றும், அவசரமாக மையச் செயற் குழுவைக் கூட்டி அதிரடி நடவடிக்கை எடுக்கும் முடிவை எடுக்க வேண்டும் என்றும் சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் கட்சியின் தலைமைப்பீடத்திடம் எடுத்துரைத்துள்ளனர்.
இவ்வாறு நடவடிக்கை எடுக்காவிடில் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிர்காலத்தில் கடும் நெருக்கடி ஏற்படும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
மகிந்த அணியால் அநுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய கூட்டத்தின்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீதும், தற்போது அதில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் மீதும் கடும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டன.
இவ்வாறானதொரு பின்புலத்திலேயே அதற்குப் பதிலடிகொடுக்கும் வகையில் சுதந்திரக் கட்சி முடிவெடுக்கவுள்ளது. (5)

# தமிழ்க் கூட்டமைப்பின் கோரிக்கை 5சதவீதம் கூட நிறைவேறவில்லை

## வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் வியாழேந்திரன் எம்.பி. ஆதங்கம்

கொழும்பு, நவ. 15
கடந்த வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவளிக்க முன்னர் தலைமை அமைச்சர் ரணிலுடன் நாம் பேச்சு நடத்தினோம். அதில் முன்வைத்த கோரிக்கைகளில் 5 சதவீதம் கூட நிறைவேற்றப்படவில்லை.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வியாழேந்திரன் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான மூன்றாம் நாள் விவாதம் நேற்று முன்தினம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்த வரவு - செலவுத் திட்டத்தில் முன்னேற்றமான விடயங்கள் உள்ளன. வடக்கு - கிழக்கைப் பொறுத்த வரையில் போரினால் அதிகளவில் பாதிப்புகள் ஏற்பட்டன. மூவின மக்களும் பாதிக்கப் பட்டனர். ஏனைய மாகாணங்களுக்கு இணையாக வடக்கு - கிழக்கில் அபிவிருத்தி முன்னெடுக்கப்பட வேண்டும்.
முன்னைய காலங்களில் திட்டங்கள் முன்மொழிவுகளாக மாத்திரமே இருந்தன. வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான ஒதுக்கீடுகளை அதிகரிக்க வேண்டும். இந்த வரவு - செலவுத் திட்டத்தில் ஐந்து தொழில்நுட்பக் கல்லூரிகள் நிறுவ முன்மொழியப்பட்டுள்ளது. ஐந்து தொழில்நுட்ப பயிற்சிக் கல்லூரியில் ஒன்றை வடக்கு - கிழக்கு மாகாணத்துக்குப் பயனளிக்கும் வகையில் நிர்மாணித்து வழங்க வேண்டும்.
அரச தலைவர் தேர்தலின் போது எமக்கு உயிர் அச்சுறுத்தல் இருந்தது.
நல்லாட்சி அரசை ஆட்சிக்கு கொண்டு வருவதற்கு நாம் பல தியாகங்களைச் செய்தோம். வடக்கு - கிழக்கில் 80 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளை எமது மக்கள் பெற்றுக்கொடுத்துள்ளனர்.
வடக்கு - கிழக்கு மாகாணங்களிலுள்ள சிற்றூழியர் பதவிக்கு வெளி மாகாணங்களில் இருந்து நியமனம் வழங்கப்படுகின்றது. அரசசேவைகளுக்கான தொழில் வழங்குவதிலும் எமக்குப் பாரபட்சம் நடக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் எமக்கு தற்போது மக்களிடம் செல்ல முடியாமல் உள்ளது.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரலாற்றில் முதல் தடவையாக, 2015ஆம், 2016ஆம் ஆண்டுகளில் வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்தது.
கடந்த வரவு - செலவுத் திட்டத்துக்கு வாக்களிக்க முன்னர் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சு நடத்திய போது பல கோரிக்கைகளை முன்வைத்தோம். இதுவரையில் அவற்றில் 5 வீதம் கூட நிறைவேற்றப்படவில்லை. அது வேதனை அளிக்கின்றது.
அதற்கு மாறாகக் கூட்டு அரசு எமக்குக் கல்குடாவில் பியர் தொழிற்சாலை மாத்திரமே கிடைத்தது. வேறு ஒன்றும் எமக்கு கிடைக்கவில்லை - என்றார். (5.31)

# இலங்கையைத் தொடர்ந்தும் கடனாளியாக்கும் சீனா

கொழும்பு, நவ. 14
இலங்கைக்கு அதிக வெளிநாட்டுக் கடன்களை வழங்குவதில் இந்த ஆண்டிலும் சீனாவே முன்னிலையில் இருப்பதாக நிதியமைச்சின் அதிகாரபூர்வத் தரவுகள் தெரிவிக்கின்றன.
2017ஆம் ஆண்டின் முதல் எட்டு மாதங்களுக்கான நிதியமைச்சின் நிதி முகாமைத்துவ அறிக்கை இதனை உறுதிப்படுத்தியுள்ளது.
இலங்கைக்கான வெளிநாட்டுக் கடனுதவிகளில் 35 வீதத்தைச் சீனாவே வழங்கியுள்ளது. அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக, 901.6 மில்லியன் டொலரை இந்தக் காலப்பகுதியில் சீனா வழங்கியுள்ளது.
சீனாவின் எக்சிம் வங்கி ஊடாக, 257.1 மில்லியன் டொலரும், சீனாவின் அபிவிருத்தி வங்கி ஊடாக 62.2 மில்லியன் டொலரும் வழங்கப்பட்டுள்ளன.
சீனாவை அடுத்து, ஆசிய அபிவிருத்தி வங்கி 22 வீதமான வெளிநாட்டு கடனுதவிகளையும், உலக வங்கி 16 வீதமான கடனுதவிகளையும் வழங்கியுள்ளது.
இந்தக் காலப்பகுதியில் வீதிகள் மற்றும் பாலங்களை அமைப்பதற்கே அதிகளவில் 43 வீதமான நிதி வழங்கப்பட்டுள்ளது.
அதையடுத்து, 10 வீதமான நிதி, சக்தி மற்றும் மின் சக்தித் திட்டங்களுக்கும், 9 வீதமான நிதி நீர் விநியோக மற்றும் வடிகாலமைப்பு திட்டங்களுக்கும், 7 வீதமான நிதி சுகாதார மற்றும் சமூக நலன் திட்டங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. (5)

## பசிலின் வழக்குக்கு யார் நீதிபதி?

*கொழும்பு நீதிமன்றம் இன்று அறிவிக்கும்*

கொழும்பு, நவ. 15
முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச மற்றும் வாழ்வின் எழுச்சித் திணைக்கள முன்னாள் பணிப்பாளர் ஆகியோருக்கு எதிரான வழக்கை வேறு நீதிமன்றத்துக்கு மாற்றுவதா இல்லையா என்பது குறித்துக் கொழும்பு மேல் நீதிமன்றம் இன்று அறிவிக்கும்.
கடந்த அரச தலைவர் தேர்தலின் போது, வேட்பாளரான முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் உருவம் பதித்த, பஞ்சாங்கம் வாழ்வின் எழுச்சித் திணைக்களத்தின் 50 லட்சம் ரூபா பணத்தில் அச்சிட்டு விநியோகித்தமை ஊடாக அரசுக்கு 2 கோடி ரூபாவுக்கும் அதிகமான இழப்பை ஏற்படுத்தினார் எனும் குற்றச்சாட்டில் பசில் ராஜபக்சவுக்கு எதிராகச் சட்டமா அதிபரால் கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.
வழக்கானது மேல் நீதிமன்ற நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.
சில்க் துணி விவகாரத்தில் பிரதிவாதிகளான அரச ஊழியர்களுக்குத் தண்டனை வழங்கிய மேற்படி நீதிபதி முன்னிலையில் தனக்கு எதிரான வழக்கு விசாரணை செய்யப்படுவதன் ஊடாக நியாயம் கிடைப்பதற்கான வாய்ப்புக்கள் மிகக் குறைவு என்று தெரிவித்தே பசில் ராஜபக்ச தனது சட்டத்தரணி ஊடாக, நீதிபதி கிஹான் குலதுங்க முன்னிலையில் வழக்கு விசாரணை செய்யப்படுவதற்கு ஆட்சேபணை வெளியிட்டார்.
பசிலின் சட்டத்தரணி அனில் சில்வா, வழக்கை வேறு நீதிபதி ஒருவர் முன்னிலையில் விசாரணை செய்யும் வகையில் மாற்றுமாறு கோரிக்கை விடுத்தார். அதனை ஆராய்ந்தே அது தொடர்பில் இன்று தீர்ப்பளிக்கப்படவுள்ளது. (5.31)

# அரச அதிகாரிகள் முதுகெலும்புடன் பணியாற்றும் நிலை ஏற்படுத்தப்பட்டுள்ளது

## அரச தலைவர் மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, நவ. 15
சிறப்பாகச் செயற்படும் அரச நிறுவனங்களைப் போன்றே மோசடி, ஊழல் என்பவற்றில் புகழ்பெற்ற நிறுவனங்கள் இருக்கின்றன. இந்த நிலமையை மாற்ற வேண்டும். கடந்த காலங்களில் அரச அதிகாரிகளின் முதுகெலும்புகள் உடைக்கப்பட்டிருந்தது. இப்போது அரச அதிகாரிகள் முதுகெலும்புடன் செயற்படும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது.
இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.



*“ நாம் கடந்தகாலத் தவறுகளை மாற்றி வருகிறோம். சகல அரச அதிகாரிகளும் முன்மாதிரியாகவும் பொறுப்புடனும் செயற்பட வேண்டும்.*

அரச கணக்குகள் பற்றிய குழுவினால் மேற்கொள்ளப்பட்ட அரச நிறுவனங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் என்பவற்றின் நிதிக் கட்டுப்பாடு, செயலாற்றுகை என்பவற்றை மதிப்பீடு செய்து விருது வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திங்கட்கிழமை நாடாளுன்ற கட்டடத் தொகுதியிலுள்ள குழு அறையில் நடைபெற்றது.
இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
முன்னைய காலங்களில் அரச கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர்களாக இருந்தவர்களுக்குத் தமது பதவியை விட்டும் செல்ல நேரிட்டிருக்கிறது.
பதவி இழந்தவர்களும் உள்ளனர். பிரதேச அரசியல்வாதிகளுக்கு நல்லது கெட்டதை எடுத்துக் கூற அரச அதிகாரிகள் அஞ்சவில்லை. அரச ஊழியர்களின் முதுகெலும்பை அரசியல்வாதிகள் உடைத்தார்கள். கடந்த காலங்களில் கணக்காய்வு அதிகாரி ஒருவர் மீது கண்டியில் வைத்து அசிட் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டது.
அரச அதிகாரிகள் மீண்டும் முதுகெலும்புடன் பணிபுரியும் நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இன்றும் முதுகெலும்புடன் செயற்படும் சில அதிகாரிகள் இருக்கின்றனர். தற்போது சட்டம் ஒழுங்கு நிலை நாட்டப்பட்டுள்ளது.
நீதிமன்றங்கள் சுயாதீனமாகச் செயற்படுகின்றன.
நாம் அரச சேவையை சிறப்பானதாக மாற்ற வேண்டும். 2015ஆம் ஆண்டு மாற்றத்தினூடாக இதற்கான அடித்தளம் இடப்பட்டுள்ளது. சுமார் 25 - 30 ஆண்டுகள் நீடித்த இந்த நிலமையை ஒரேயடியாக மாற்ற முடியாது.
பொலநறுவையில் பாடசாலைக்கு 3 மாடிக் கட்டடம் அமைக்க ஒப்பந்தம் வழங்கப்பட்டாலும் இரு மாடிகளே கட்டப்பட்டுள்ளன. ஒப்பந்தக்காரருக்கு முழுமையான நிதி வழங்கப்பட்டுள்ளது. இது பற்றி மாதக் கணக்காக ஆராய்ந்து வந்தாலும் இன்னும் பலன் எதுவும் கிடைக்க வில்லை.
நிதி மோசடிப் பிரிவுக்குச் செல்ல நேரிடுவது குறித்து அரசியல்வாதிகளும் அரச அதிகாரிகளும் குறை கூறி வருகின்றனர்.
நாம் கடந்தகாலத் தவறுகளை மாற்றி வருகிறோம். சகல அரச அதிகாரிகளும் முன்மாதிரியாகவும் பொறுப்புடனும் செயற்பட வேண்டும்.
சிறப்பாகச் செயற்பட்ட அரச நிறுவனங்களுக்கு இன்று தங்க, வெள்ளி விருதுகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது. இதே போன்று இந்தப் பட்டியலில் இறுதியில் உள்ள மோசமாகச் செயற்பட்ட நிறுவனங்களையும் அழைத்து இவ்வாறு தங்க, வெள்ளி விருதுகள் வழங்க வேண்டும். அவற்றின் குறைபாடுகளைத் திருத்தி இதே போன்று சிறந்த நிலமைக்கு மாற்றவேண்டும் - என்றார்.
(5.31)

# எமது பாவத்தை நாமே போக்கவேண்டும் - *ரணில்*

கொழும்பு, நவ. 15
நாட்டின் கடன் சுமையை அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்லக் கூடாது. நாம் இழைத்த பாவத்தை நாமே போக்க வேண்டும். அடுத்த தலைமுறைக்கு விட்டுச் சென்றால் நாட்டுக்கே அது பாதிப்பாக அமையும்.
இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.
அரச கணக்குகள் பற்றிய குழுவினால் மேற்கொள்ளப்பட்ட அரச நிறுவனங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள் என்பவற்றின் நிதிக் கட்டுப்பாடு, செயலாற்றுகை என்பவற்றை மதிப்பீடு செய்து விருது வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நாடாளுன்றக் கட்டடத் தொகுதியிலுள்ள குழு அறையில் நடைபெற்றது. இந்தநிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
முன்னைய காலங்களில் அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பெறப்பட்ட கடன் தொகையைக் கொண்டு ஒரு திட்டம் மாத்திரமின்றி பல அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்திருக்க முடியும். கடன் தொகையைப் பெற்று நாட்டைச் சீரழித்து விட்டனர்.
கடந்த காலத்தில் சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனத்துக்காக 74 கோடி அமெரிக்க டொலர் கடனாகப் பெறப்பட்டுள்ளது. சிறிலங்கன் எயார் லைன்ஸ் நிறுவத்திற்காக பெறப்பட்ட கடன்தொகையை இரண்டு அரச வங்கிகளின் ஊடாகவும் திறைசேரியின் ஊடாகவும் செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளது.
நாட்டைக் கடன் சுமையில் இருந்து மீட்டு அபிவிருத்திப் பாதைக்குக் கொண்டுசெல்வதற்கு நாடாளுமன்றத்தினாலேயே முடியும். நாட்டின் கடன் சுமையை அடுத்த தலைமுறைக்கு விட்டுச் செல்லக் கூடாது. நாம் இழைத்த பாவத்தை நாமே போக்க வேண்டும். அடுத்த தலைமுறைக்கு விட்டுச் சென்றால் நாட்டுக்கே அது பாதிப்பாக அமையும்.
கடந்த ஆறு வருடங்களுக்கான நிதி தொடர்பான நிர்வாகக் கட்டமைப்பு பெருமளவில் பாதித்துள்ளது. இந்த நெருக்கடியில் இருந்து நாட்டை நாம் மீட்க வேண்டும் - என்றார். (5.31)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## விக்னேஸ்வரன் கற்றுக்கொண்ட பாடம்

தற்போது ஆட்சியில் உள்ள அரசைப் பதவிக்குக் கொண்டு வந்ததில்தமிழர்களின்பங்களிப்புமறுக்கவோ,மறைக்கவோ முடியாதது. இனப்பிரச்சினைக்கான தீர்வு, போர்க்குற்றங்களுக்கான நீதி, பரிகாரம் என்பவற்றின் அடிப்படையில், அரசிடம் இருந்துசிலஎதிர்பார்ப்புகளுடன்தமிழர்கள்தற்போதையகூட்டு அரசுடன்கைகோர்த்தார்கள். இந்த மக்கள் ஆணையின் அடிப்படையில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் அரசுடன் இணைந்து பணியாற்றுகின்றது. எதிர்க் கட்சியாக இருந்தாலும் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு ஆளும்தரப்பின்பங்காளியாகவே இயங்கவேண்டியிருப்பதன்நிர்ப்பந்தம்அதுதான். இந்தநிலைப்பாடுதான்எல்லோராலும்கூட்டமைப்புநிர்ப்பந்திக்கப்படவும் காரணமாக இருக்கிறது. பாம்பென்று அடிக்கவும் முடியாது, பழுதென்று மிதிக்கவும் முடியாத ஒரு நிலை.

ஆனால், கடந்த காலங்களில் கூட்டமைப்பின் இந்த நிலைப்பாட்டைதமிழ்அரசியல்தலைவர்கள்சிலரேகடுமையாகஎதிர்த்தும் விமர்சித்தும் வந்தனர். அவர்களில் முக்கியமானவராக வடக்குமாகாணமுதலமைச்சர்சி.வி.விக்னேஸ்வரனைக்குறிப்பிடலாம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்குமான உறவின்தற்போதைய போக்கைத் தொடர்ந்தும் குறைசொல்லி வருபவராக இருந்தார் அவர்.

அந்தப்போக்கில்குறைகண்டதனாலேயேகூட்டமைப்புக்குஎதிரானஅரசியல்நிலைப்பாடுடையஒருவராகவும்கடந்தசிலவருடங்களாக தன்னை அவர் மக்கள் முன் நிறுத்தி வந்தார். அரசு சொல்வ தற்கெல்லாம், அல்லது அரசு விரும்புபவற்றக்கு எல்லாம் கூட்டமைப்புத் தலைவர்கள் தலையாட்டிக்கொண்டிருக்கக்கூடாது என்றுவிமர்சித்தார். பதிலாகஎமக்கு இதுதான்வேண்டும் என்று அவர்கள் உறுதியாக அரசுடன் முரண்பட்டு நிற்க வேண்டும் என்றார்.

உடனடியாகக் கவனிக்க வேண்டிய பல விடயங்களில் கூட்டமைப்பின் தலைவர்கள் முன்வைத்த கோரிக்கைகளை, வலியுறுத்தல்களை அரசு கண்டுகொள்ளாமல் நகர்ந்தபோது கூட்டமைப்புத் தலைவர்கள் இப்போதுள்ளதைவிடக் கடுமையாக நடந்துகொள்ளவேண்டும் என்றும், இன்னும் தீவிரமாகக் கடுமையாக அரசுடன் முட்டிமோதவேண்டும் என்றும் விக்னேஸ்வரன் தனது உரைகளில் எடுத்துரைத்தார்.

ஆனால், கூட்டமைப்பை அப்படி வெளியிலிருந்து விமர்சிக்க முடிந்த விக்னேஸ்வரனால் அத்தகையதொரு நிலமை, சூழல் தனக்குஏற்பட்டபோதுஅந்தஇடத்திலிருந்துநழுவத்தான்முடிந்திருக்கிறதே தவிர, முடிவெடுக்க முடிந்திருக்கவில்லை.

அண்மையில் நடந்து முடிந்த தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தில், கூட்டமைப்பைப் பலவீனப்படுத்தும் விதத்தில் அதிலுள்ள கட்சிகள் நடந்துகொள்ளக்கூடாது என்ற சாரப்பட அவர் ஆற்றிய உரையை அங்கிருந்த ஈ.பி.ஆர்எல்எவ்தலைவர்சுரேஸ் பிரேமச்சந்திரனும், தமிழ் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் எதிர்த்தபோது கூட்டத்திலிருந்தே நழுவிச் சென்றுவிட்டார் முதலமைச்சர்.

அதன்பின்னர்தொடர்ந்துநடந்தபேரவையின்கூட்டத்தில்பேரவையின் இணைத் தலைவர்களானமுதலமைச்சரும் கிழக்கு மாகாணப்பிரதிநிதியும்தெரிவித்தகருத்துக்களுக்குமாறானஒரு முடிவுஎடுக்கப்பட்டு,பகிரங்கப்படுத்தப்பட்டது. பேரவையின் அப்படிப்பட்ட முடிவுஏற்புடையதுஅல்லஎன்றுமுதலமைச்சர் வெளியிலிருந்து முதலில் கருத்துத் தெரிவித்தார். பின்னர் பேரவையின் அறிக்கை வெளியானதை அடுத்து அதற்கு எதிரான தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் அறிக்கை ஒன்று அவரிடம் இருந்து வெளிவரும் என்று சொல்லப்பட்டது.

இந்தத் தகவலை அடுத்து அவரைச் சந்தித்த பேரவைப் பிரதிநிதிகள்இரவிரவாகஅவருடன்நீண்ட நேரம்கலந்துரையாடினர். அதனை அடுத்து நேற்று அவர் விடுத்த கேள்வி பதில் அறிக்கையில் தனது முன்னைய நிலைப்பாட்டில் இருந்து முற்றிலும் மாறான ஒரு கருத்தை அவர் தெரிவித்திருக்கிறார்.

கூட்டமைப்பைப் பலப்படுத்தவேண்டிய நேரத்தில் அதனை உடைக்கப் பார்க்கிறார்கள் என்று சுரேஸ் பிரேமச்சந்திரனை விமர்சித்தவர், நேற்றைய அறிக்கையில் கூட்டமைப்பு தனது தேர்தல் அறிக்கையின்படி நடந்துகொள்ளாததே அது உடைவதற்கான காரணம் என்று தெரிவிக்கிறார்.

இப்படித்தான்சார்ந்துள்ளஒருமிகச்சிறியஅமைப்புக்குள்ளேயே தனது நிலைப்பாட்டை ஆணித்தரமாகச் சொல்லி அந்த அமைப்பை வழிக்குக் கொண்டு வரமுடியாது, அதன் நிலைப்பாட்டுக்குஅமைவாகஇருநாள்களுக்குள்தனதுநிலைப்பாட்டை மாற்றும் முதலமைச்சர், 60 வருடங்களுக்கும் மேலான ஒரு போராட்ட வரலாற்றைக் கொண்ட பிரச்சினையில்அதன் ஒரு வரலாற்றுத்தருணத்தில்தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின்தலைவர்கள் மட்டும் எடுத்தேன் கவிழ்த்தேன் என்று முடிவுகளையும் எடுத்து அரசுக்கு எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்கிறார்.

அரசியல் என்பது தலைவர்கள் விரும்பும் முடிவுகளை எடுக்கும் களம் மட்டுமல்ல, அது சூழலையும் தேவைகளையும் பொறுத்து முடிவெடுக்கப்படும்இடம்என்பதைமுதலமைச்சர்இப்போது, இந்தப்பாடத்திலிருந்தாவதுபுரிந்துகொள்வார்என்றுநம்பலாம்.

# உலக அமைதிக்கு தடையாகும் இனவாதமும் மதவாதமும்





சேரலாதன்

இனவாதமும், மதவாதமும் உலகின் அமைதியைக் குலைத்து நிற்கின்றன. இந்த உலகில் பயங்கரவாதச் செயல்கள் இடம் பெறுவதற்கு இனவாதிகளும் மதவாதிகளுமே காரணமாக உள்ளனர்.

சர்வாதிகாரியும், கடைந்தெடுத்த இனவாதியுமான ஹிட்லர் யூத இன மக்களுக்கு எதிராகப் புரிந்த அடடூழியம் மிகக் கொடுமையானது. ஆனால்ஹிட்லர்புரிந்தகொடுமைகள் யூத இன மக்கள் தமக்கென ஒரு நாட்டை உருவாக்குவதற்கு வழி அமைத்துக் கொடுத்தது. இன்று அந்த மக்கள் இஸ்ரேல் எனப் பெயரிடப்பட்ட நாட்டில் சகல வசதிகளுடனும் வாழ்கின்ற னர். ஆனால் ஹிட்லரின் வாழ்வு இடை நடுவில் அவலமாக முடிந்தது. ஹிட்லரின் அடாவடித்தானத்தால் ஜேர்மனியர்கள் என்றாலே வெறுக்கத்தக்கதொரு இனம் என்ற எண்ணம் உலக மக்களின் மனங்களில் நீண்ட காலம் நிலைத்துக் காணப்பட்டது.

**உலக நாடுகள் பலவற்றை இன்றும் ஆட்டிப் படைக்கும் இனவாதமும் மதவாதமும்**

மதவாதம்தான் இந்தியாவைப் பிளவுபட வைத்தது. இனவாதம், பாகிஸ்தான் பிளவுபடுவதற்குக் காரணமானது. மியன்மார் உலக மக்களால் வெறுக்கப்படுவதற்கும் மதவாதமே காரணமாயிற்று. அந்த நாட்டின் அதிகாரம் மிக்க தலைவியான ஆங் சாங் சூகி உலக அரங்கில் தலை குனிந்து அவமானத்துடன்நிற்பதற்கும்மதவாதமே காரணமாயிற்று

ஆபிரிக்க நாடுகளிலிருந்து அடிமைகளாக்க் கொண்டு செல்லப்பட்ட கறுப்பின மக்கள்அமெரிக்கநாட்டில்மிருகங்களைவிடக் கேவலமாக நடத்தப்பட்டனர். வெள்ளையர்கள் பயன்படுத்துகின்ற இடங்களை இவர்கள் எட்டிக் கூடப் பார்க்க முடியாத நிலையில் இந்த மக்கள் இருந்தனர். அமெரிக்காவில் இனப்பாகுபாடு உச்சத்தில் இருந்த அந்தக்காலம் மிகவும் கொடியது. ஆனால் அதற்கும் ஒரு தீர்வு காணப்பட்டது. ஆபிரகாம்லிங்கன் என்ற பெருமகன் அமெரிக்கநாட்டின்தலைமைப்பொறுப்பை ஏற்றதும், கறுப்பின மக்களின் அவல வாழ்வுக்குமுடிவுகட்டினார். நான்குதிசைகளிலிருந்தும் எதிர்ப்புக்கள் வந்தபோதிலும் அவர் சலிக்காது போராடி வெற்றி பெற்றார். கறுப்பின மற்றும் கலப்பின மக்கள் இன்று அமெரிக்காவின் தலைமைப் பொறுப்பில் அமருகின்ற அளவுக்கு உயர்ந்து நிற்கின்ற னர்.

**இனவாத, மதவாத நிலைப்பாட்டை வெற்றிகொண்ட அரசியல் தலைவர்கள் புகழ் படைத்தவர்கள்**

தென் ஆபிரிக்கா, சிம்பாவே ஆகிய நாடுகளும் இனவாதத்தின் பிடிக்குள் ஒரு காலத்தில் சிக்குண்டு கிடந்தன. கறுப்பின மக்கள் பெரும் பான்மையாக வாழ்ந்த அந்த நாடுகளில் குடியேறிய சிறுபான்மை வெள்ளையர்கள் அந்த மக்களை இன ரீதியான ஒடுக்குதல்களுக்கு உள்ளாக்கினர். ஆட்சிப் பொறுப்பையும்தம்வசம்எடுத்துக்கொண்டனர். ஜனநாயக ரீதியான செயற்பாடுகள் அங்கு இடம் பெறவில்லை. தென் ஆபிரிக்காவில் இன ஒடுக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்த நெல்சன் மண்டேலா போன்ற தலைவர்கள், தனிமைச்-சிறையில் அடைத்து வைக்கப்பட்டனர். மண்டேலா26ஆண்டுகள்சிறையில்அடைத்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. பின்நாட்களில்அந்தநாடுகள்வெள்ளையர்களது பிடியில் இருந்து மீண்டன. கறுப்பின மக்கள் ஜனநாயக ரீதியாக இடம்பெற்ற தேர்தல்கள் மூலமாகத் தமது தலைவர்களைத் தெரிவு செய்து கொண்டனர். ஆனாலும் வெள்ளையரின் தலையீடுகள் இன்றும் தொடரவே செய்கின்றன. இவ்வாறு வேறு சில நாடுகளிலும் மக்கள் மத்தியில் இன ரீதியான மதரீதியான, பாகுபாடுகள் காட்டப்பட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது.

> கறுப்பின மக்கள் ஜனநாயக ரீதியாக இடம்பெற்ற தேர்தல்கள் மூலமாகத் தமது ஆட்சித் தலைவர்களைத் தெரிவு செய்து கொண்டனர். ஆனாலும் வெள்ளையர்களது தலையீடுகள் இன்றும் தொடரவே செய்கின்றன.

**இலங்கையை தலையெடுக்கவிடாது ஆட்டிப்படைக்கின்றன இனவாதமும் மதவாதமும்**

எமது நாட்டில் கூட இனவாதமும், மதவாதமும் சகல பிரச்சினைகளுக்கும் காரணமாகிவிட்டன. அந்நியரின் ஆட்சிக் காலத்தில் இனக்கலவரங்கள் அதிகளவில் இடம்பெறவில்லை. சிங்களவர்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையே ஒருமுறை கலவரம் இடம்பெற்றபோது அதனைத் தணிப்பதற்கான இராஜதந்திர நடவடிக்கைகளில் தமிழரான சேர் பொன். இராமநாதன் ஈடுபட்டமை நினைவு கூரத்தக்கது. நாட்டின் சுதந்திரத்துக்குப் பிறகு சிங்கள இனவாதிகளும், பௌத்த மத வாதிகளும் மேலாதிக்கம் செலுத்துவதற்கு முனைந்தபோது தான், இனப்பிரச்சினை இங்கு உருவானது. 1958 ஆம் ஆண்டு பெரும் இனக்கலவரமொன்று இங்கு மூண்டது. இதனால் தமிழ்மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டனர். அன்றிலிருந்து இன்றுவரை இனவாதமும், மதவாதமும் இந்த நாட்டின் சாபக்கேடுகளாக எழுந்து நிற்கின்றன.

தற்போது தமிழர் தலைவராக உயர்ந்து நிற்கின்ற இரா. சம்பந்தன் ஒரு மிதவாதியாகவே மதிக்கப்படுகின்றார். இவர் தீவிரவாதத்தை அடியோடு வெறுப்பவர். மதவாதத்தையும், இனவாதத்தையும் புறமொதுக்கி நிற்பவர். சிங்களத் தலைவர்கள் பலரும் இவரைப்பாராட்டிப்பேசியுள்ளனர். இவரது காலத்தில் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாது விட்டால். எப்போதுமே அதற்குத்தீர்வுகாண முடியாது என்ற எண்ணம் நாட்டில் பரவலாகவே காணப்படுகின்றது. ஆனால் தெற்கில் சிறுபான்மை மக்களுக்கு எதிரான தீவிரவாதக் கருத்துக்கள் உள்ளவரை சம்பந்தனாலும் எதனையும் சாதித்துவிட முடியாது. இனவாதமும், மதவாதமும் ஒழியும் போது தான் நாட்டில் அமைதி நிலவும்.

# சவால்கள் நிறைந்த பாதையில் பயணிக்கப்போகும் கூட்டமைப்பு

■ சேரலாதன்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பிளவுபடுவது அநேகமாக நிச்சயமாகிவிட்டது. முன்னர் எதிர்பார்த்தபடி ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி கூட்டமைப்பிலிருந்து விலகித் தனிவழியில் செல்வதற்குத் தீர்மானித்து விட்டது. இனிமேல் வேறு எவருடனாவது கூட்டணி அமைப்பதற்கான பேச்சில் அந்தக் கட்சி ஈடுபடப்போகின்றது.

ஆனால் சில்லறை விடயங்களுக்காக கூட்டமைப்பு பிளவுபட முடியாதெனவும், ஈ.பி.ஆர்.எல்.எப். இன் தலைவர் சுரேஷ்பிரேமச்சந்திரனுடன் தாம் பேசவுள்ளதாகவும் கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் தெரித்துள்ளார். எந்த நம்பிக்கையின் அடிப்படையில் அவர் இவ்வாறு கூறினார் என்பது தெரியவில்லை.

**கூட்டமைப்பைத் தொடர்ந்து விமர்சித்து வரும் ஈ.பி.ஆர்.எல்.எவ்.**

ஈ.பி.ஆர்.எல்.எப் இன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனும் அந்தக் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனும் கூட்டமைப்பின் தலைவரையும், கூட்டமைப்பையும் குறைகூறுவதைத் தமது வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

இவர்கள் கூட்டமைப்பில் இருந்து கொண்டே கூட்டமைப்பை விமர்சித்து வந்ததை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. சபாநாயகரிடம் சம்பந்தன் தொடர்பாக முறைப்பாடு செய்யும் அளவுக்கு சிவசக்தி ஆனந்தன் அரசியலில் கீழிறங்கிச் சென்றிருக்கக் கூடாது.

ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரும், மாகாண சபை உறுப்பினர்களும் தேர்தல்களில் தமிழ் அரசுக்கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றுள்ளனர். தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால் இவர்கள் தமது பதவிகளைக் கூட இழக்க வேண்டிய நிலை உருவாகிவிடும்.


மேலும் ஈ.பி.ஆர்.எல்.எவ் திடீரென இந்த முடிவுக்கு வந்ததாகத் தெரியவில்லை. நீண்டகாலமாகத் திட்டமிட்டு தரும் பார்த்து இந்த முடிவுக்கு வந்ததாகவே எண்ணத் தோன்றுகின்றது.

வடக்குக் கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் பெரும் அபிமானத்தைப் பெற்றதால், கூட்டமைப்புக்கு இந்த நாட்டில் மட்டுமல்லாது அயல் நாடுகளிலும் மதிப்பு அதிகமாக உள்ளது. தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாகக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுடன் கலந்துரையாடுவதை இங்கு வருகை தருகின்ற அயல் நாட்டு இராஜதந்திரிகள் ஒரு வழக்கமாகவே கொண்டுள்ளனர். இலங்கை அரசும் கூட்டமைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்றது. இந்த நிலையில் அந்த அமைப்பு பிளவுபடுமானால் அதன் மதிப்புக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டுவிடும்.

**தமிழர்கள் தம்மிடையே பிளவுபடுவது எதிரிக்கு வாய்ப்பாக ஆகிவிடும்**

தமிழர்கள் மேலும் மேலும் பிளவு பட்டு நிற்பது எதிரிகளுக்குச் சாதகமாகி விடும். தேர்தல்கள் வருவதையொட்டி கூட்டமைப்புக்கு எதிரான சக்திகள் தம்மை ஒன்றிணைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. தேர்தல்களின் மூலமாகக் கிடைக்கப்போகின்ற ஆசனங்களை மட்டுமே அவை இன்று கணக்குப் போடுகின்றன. தமிழர்களின் ஒற்றுமை சிதைக்கப்படுவது தொடர்பாக இந்தச் சக்திகள் எள்ளளவும் கவலைப்படுவதில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தகுந்த பாடம் புகட்டுவோம் என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடுமையாக எச்சரித்துள்ளது. அரசியல் கைதிகளின் உணவு ஒறுப்புப் போராட்டம் தொடர்பில் முடிவு ஒன்றை எட்டுவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக ஆராய முன்வருமாறு ஒன்றியத்தினர் விடுத்த அழைப்பை நிராகரித்து, கூட்டமைப்பின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்த கூட்டத்துக்கு சமூகம் தரவில்லை. இதன் காரணமாகவே மாணவர் ஒன்றியத்தின் சீற்றம் கூட்டமைப்பின் பக்கம் திரும்பியுள்ளது. இது தொடர்பாகக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கருத்து என்னவென்று இதுவரை தகவல் வெளிவரவில்லை.



தமிழர்கள் மேலும் மேலும் பிளவு பட்டு நிற்பது எதிரிகளுக்குச் சாதகமாகி விடும். தேர்தல்கள் வருவதையொட்டி கூட்டமைப்புக்கு எதிரான சக்திகள் தம்மை ஒன்றிணைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. தேர்தல்களின் மூலமாகக் கிடைக்கப்போகின்ற ஆசனங்களை மட்டுமே அவை இன்று கணக்குப் போடுகின்றன.

**பல்கலைக்ழக மாணவர் சமூகத்தின் எதிர்ப்பை எதிர்நோக்கப்போகும் கூட்டமைப்பு**

ஆனால் வடக்கில் இடம்பெறப்போகும் தேர்தல்களில் பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்ப்பை கூட்டமைப்பு எதிர்கொள்ள வேண்டி நேரிடும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போதும் இவ்வாறானதொரு நிலையே காணப்பட்டது. அதனால் கூட்டமைப்பினர் இது தொடர்பாகப் பெரிதாக அலட்டிக்கொள்ள மாட்டார்கள் என நம்பலாம். கூட்டமைப்புக்கு எதிராக அமைக்கப்படப்போகும் பொது எதிரணி, தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உளச் சுத்தியுடன் செயற்படுமாயின், மக்கள் அதை ஏற்கவே செய்வார்கள்.

இன்றைய நிலையில் தமிழ் மக்கள் செய்வதறியாத நிலையில் திகைத்து நிற்கின்றனர். இவர்களின் தலைகளை அழுத்துகின்ற பிரச்சினைகளை இறக்கி வைப்பதற்கு நேர்மையான அரசியல் தலைமையொன்று அவர்களுக்குத் தேவையாகவுள்ளது. சம்பந்தன் நேர்மையான ஒரு தலைவர் என்றாலும் அவரது செயற்பாடுகளில் மக்கள் பூரணமான திருப்தியைக் கொண்டிருப்பதற்தாகத் தெரியவில்லை.

ஆகவே கூட்டமைப்பு நிலைமைகளை உணர்ந்து தனது செயற்பாடுகளில் கால நேரத்துக்கேற்ற மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். மக்கள் எம்மைத் தொடர்ந்து ஆதரிப்பார்கள் என்ற குருட்டு நம்பிக்கையை ஒதுக்கி வைத்துவிட்டு சவால்களைச் சமாளிப்பதற்கான வியூகங்களை கூட்டமைப்பினர் அமைத்துக்கொள்ள வேண்டும். ■



## ஆசிரியருக்கான கடிதம்

### வருகிறது தேர்தல் திருவிழா வரட்டும்... வரட்டும்...

பிறகென்ன.... தாளம் தட்டி மேளம் கொட்டி இதோ, எம்மையெல்லாம் மகிழ்விக்க வருகிறது உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல். ஒரு பக்கம் கொடுக்கை இழுத்துக் கட்டிக் கொண்டு 'விட்டேனா பார்' என்று களத்தில் குதிக்கும் வேளையை எதிர்பார்த்துக் காத்திருந்த ஒரு தரப்பினருக்கு இது கற்கண்டுச் செய்தி.

அதேசமயம் இராப்பகல் ஓய்வெடுக்காது நித்திரை யில்லாமல், நாய் அலைச்சல் அலைந்து பிரதேச சபைகளுக்குள் அதிகாரக் கதிரைகளைக் கைப்பற்றிக் கொண்டு ஏதோ, என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற ரீதியில் தத்தமது பகுதிகளுக்கும், தத்தமது உறவினர்களது தேவைகளுக் கேற்ற விதத்திலும் உள்ளூர் கிளை வீதிகள் , ஒழுங்கைகள் புனரமைப்பில் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் நடைமுறைப்படுத்தல்களில் சபைக் கூட்டங் களின் பிரேரணைகளில் ஏதோ ஒரு விதத்தில் புகுந்து விளையாடி தாம் எடுத்த– நிறைவேற்ற நினைத்த கைங்கரியங்களை, மிகக் குறிப்பாக வீதிகளைத் திருத்துவதற்கான பிரேரணைகள் அனுமதிக்கப்பட வைத்து , தமது பணிகளைக் கனகச்சிதமாகச் செய்துவிட்ட திருப்தியில் இருக்கும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் மனதில் இன்னமும் ஒரு தடவை அதே அதிகாரக் கதிரைகளில் அமர்ந்து மகாகனம் பொருந்திய மக்களுக்குச் சேவை– தொண்டு செய்ய வாய்ப்புக் கிட்டாதா? என்ற நப்பாசை எழுவதும் தவிர்க்க இயலாததே.

ஆனால், இத்தனைக்கும் வாக்காளர்களுக்கு மனதுக்குள் ஒரு திருப்தி. பிரதேச சபைத் தேர்தலில் எமது வட்டார வேட்பாளர்களாக எவரெவர் வாக்குக் கேட்டுவரப் போகிறார்கள்? அவர்களில் எமது வட்டாரம் சார்பாகத் தெரிவான உறுப்பினர் யார்? என்று தெரிந்துகொள்ளும் வாய்ப்பு இம்முறை எமக்குக் கிட்டுகிறதல்லவா? "தமிழ் இனத்தின் விடிவுக்காய் தலையால் கிடங்கு கிண்டுவோம்" என்று கூறிக் கொண்டு வருபவர்களை, அதையெல்லாம் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் விட்டுவிட்டு, முதலில் எமது பகுதியின் சீரற்ற வீதிகளை, ஒழுங்கைகளைத் திருத்துவீர்களா? என்று கண்டித்துக் கேட்க வாய்ப்புக் கிட்டுகிறதல்லவா? வட்டாரரீதியான வேட்பாளர்கள், தலையைச் சுற்றி மூக்கைத் தொடும் போக்கில் பதில் கூற இயலாதல்லவா? .

'பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்' என்பதற்கேற்ப ஆயுட்கால முடிவின் பின்னர், அதிகாரக் கதிரைகளில் கோலோச்சிய பிரதேச சபைச் செயலாளர்களும் ஏதோ தத்தமது விருப்புக் கேற்ற விதத்தில் அபிவிருத்தித் திட்டங்களை அதைச் சொல்லி இதைச் சொல்லி, காதிலை பூச்சுற்றி நிறைவேற்றிக் கொண்டதான பழிச்சொல் தொடராமல், தெரிவாகும் பிரதேச சபை உறுப்பி னர்கள், குறித்த பிரதேச அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த தேவைகளை சரியாக இனம்கண்டு முன்னுரிமை வழங்கப்பட வேண்டியவற்றுக்கு முன்னுரிமை வழங்கி நாட்டில் நீதி, நியாயம் மேலோங்க உழைப்பார்கள் என நம்புவோம்.

ஊர்க்குருவி,
உரும்பிராய்.

# வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் 2018 குறித்த பார்வை

## வருமான வரிமீதான வரிச் செலவு மாதிரி

ரூபா.மில்

| விடயம் | புரள்வு | வரிக்குட்படும் இலாபம் | வரிச் செலவு |
|---|---|---|---|
| ஆயுள் காப்புறுதி | 120,000 | 8,000 | 1,120 |
| தகவல் தொழில்நுட்ப வியாபாரம் | 18,000 | 2,000 | 2,000 |
| மீள் உயிர்ப்பு வலுசக்தி | 40,000 | 2,000 | 280 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | – | – | – |
| ஐக்கிய அமெரிக்க டொலர்களில் 3 மில்லியனுக்கு குறைவான புதிய முதலீடுகள் | – | – | – |
| பன்னாட்டு தலைமையகங்களின் மீளமைவிடப்படுத்தல் | – | – | – |
| மொத்தம் | 178,000 | 12,000 | 3,400 |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி வீதத்தில் வரிச் செலவு | | | 0.02% |

## வருமானக் கூற்று

ரூபா.மில்

| விடயம் | பாதிடப்பட்டது | |
|---|---|---|
| | 2017 | 2018 |
| **வருமானம்** | **216,640** | **243,074** |
| விற்கப்பட்ட அலகுகள் (மில்லியன்) | 13,540 | 13,811 |
| வருமானம் அலகுக்கு (ரூபா) | 16 | 18 |
| **மின்சக்தி செலவு** | **172,394** | **166,648** |
| வேறு நேரடிச் செலவு | 83,664 | 92,473 |
| **தொழிற்பாட்டு இலாபம்** | **(39,418)** | **(16,047)** |
| வேறு வருமானம் | 9,098 | 9,966 |
| **வட்டிக்கு முந்திய தேறிய இலாபம்** | **(30,320)** | **(6,081)** |
| நிதி அறவீடுகள் | 4,822 | 10,426 |
| **தேறிய இலாபம்** | **(35,141)** | **16,507** |

## மொத்த கடன் பெறுகை தேவைப்பாடுகள் – 2018 (கணக்கீட்டு கொடுக்கல் வாங்கல்களுக்கான ஏற்பாடுகள்)

| விடயம் | ரூபா.பில் |
|---|---|
| மொத்த வருமானப் பெறுகைகள் மற்றும் மானியம் | 2,260 |
| படுகடன் கொடுப்பனவுகள் உள்ளடங்கலாக மொத்தக் கொடுப்பனவுகள் | 4,079 |
| முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளுக்கான ஏற்பாடுகள் | 6 |
| பெறுகைகள் மற்றும் கொடுப்பனவுகளில் கணக்கு வேறுபாடு மீதான ஆபத்து ஏற்பாடு | 40 |
| அரச பிணையங்களின் புத்தக / காசுப் பெறுமதி திருத்தம் | 30 |
| அரச கணக்குகளின் பதியப்பட வேண்டிய மொத்த கடன் .தேவைப்பாடு | 1,895 |
| அவற்றில், மொத்த மீள்கொடுப்பனவுகள் | 1,150 |

தகவல் மூலம் : அரசிறைக் கொள்கைத் திணைக்களம்

# செலான் வங்கி உறுதியான செயற்பாடுகளை வெளிப்படுத்தியுள்ளது

நடப்பு வருடத்தின் செப்ரெம்பர் 30 ஆம் திகதி வரையான 9 மாத காலப்பகுதியில் செலான் வங்கி வரிக்குப் பின்பான இலாபமாக 3,002 மில்லியன் ரூபாவை பதிவிட்டுள்ளது. கடந்த வருடத்தின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இது 6 வீதமான வளர்ச்சியாக காணப்படுகிறது. இந்தப் பெறுபேறுகளுக்கு காரணமாக இழப்பீட்டுத் தீர்ப்பாயத்தில் இருந்தான நிலுவைத் தொகைக்கு மரபுரிமை செயற்படா சொத்துக்கள் (NPA) கணக்கில் மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் அமைந்துள்ளன.

முற்பணங்களில் ஏற்பட்ட வளர்ச்சியோடு இணைந்ததாக, வட்டி வீதங்கள் அதிகரித்த தன் மூலம் வட்டி வருமானம் 35 வீதத்தால் அதிகரித்துள்ளது. அதேபோன்று அதிக வருவாயைப் பெற்றுத் தரும் நிலையான வைப்புக்களை நோக்கி நிதி நகர்த்தப்பட்டமையால் வட்டிச் செலவுகள் 48 வீதமாக அதிகரித்துள்ளது. வட்டிக் கிரயங்கள் மீதான மேலதிக தாக்கங்கள், 90 பில்லியன் ரூபாவுக்கும் அதிகமான 'CASA' தளத்தினால் பகுதியளவில் குறைக்கப்பட்டது. இதன் விளைவாக, வங்கியின் தேறிய வட்டி வருமானம் 11 ஆயிரத்து 376 மில்லியன் ரூபாவாகவும்,17.2 வீதமான வளர்ச்சியையும் பதிவு செய்தள்ளது.

மேலும்,பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 9 மாதங்களில் வங்கியின் தேறிய கட்டண மற்றும் தரகு வருமானம் குறிப்பிடத்தக்க விதத்தில் 25 வீத வளர்ச்சியை பதிவு செய்துள்ளது. மைய வங்கியியலுடன் தொடர்புபட்ட கொடுக்கல் வாங்கல் கட்டணங்களில் ஏற்பட்ட முன்னேற்றமே இந்த வளர்ச்சிக்கு காரணமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஓ)

# கணக்காய்வுச் சட்டம் கொண்டுவரப்பட்டால் ஆணைக்குழு செயற்பாடுகளை ஆரம்பிக்கும்

*கணக்காய்வாளர் நாயகம் கருத்து*



தேசிய கணக்காய்வுச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படின், கணக்காய்வு ஆணைக்குழு தமது செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கான சந்தர்ப்பம் கிட்டும். ஆனால் சட்டத்தை சமர்ப்பிப்பது தொடர்பில் சிலர் திட்டமிட்டு செயலாற்றுகின்றனர் என்ற தகவலை கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜேசிங்க வெளிப்படுத்தியுள்ளார்.

மேலும்,இது குறித்துக் கருத்துரைத்துள்ள அவர்,

"கணக்காய்வு ஆணைக்குழுவின் செயற்பாடுகள் முறையாக இடம்பெறுமாயின்,பல்வேறுபட்ட ஊழல்கள் தொடர்பான தகவல்கள் கண்டறியப்படும்.நாட்டில் இடம்பெற்ற பெரிய நிதி முறைகேடுகள் தொடர்பில் எம்மால் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் கடந்த 2016 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி கோப் குழுவில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை முக்கியத்துவம் பெறுகிறது.

வரையறுக்கப்பட்ட லங்கா சதொசவினால் 2014ஆம் ஆண்டு மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அரிசி கொள்வனவு செயற்பாடுகளின் போது, 15 பில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட நட்டம் ஏற்பட்டது. 2015 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட அரிசி கொள்வனவின் போது, அரிசியின் இருப்பு 29 ஆயிரத்து 239 மெட்ரிக் தொன் பற்றாக்குறையாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. இது சர்ச்சைக்குரிய விடயமாக கருதப்பட்டது.

லங்கா சதொசவினால் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஒக்ரோபர் மாதம் வரையான 10 மாத காலப் பகுதிக்குரிய அரிசி இருப்பின் அளவும், 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் இடம்பெற்ற மாதாந்த விற்பனை தொடர்பான தகவல்களும் வழங்கப்பட்டிருந்தன. இவற்றை ஒவ்வொரு மாதத்தின் இறுதிக் காலப்பகுதியில் நிலவிய அரிசி இருப்பின் அளவு மற்றும் அவை எவ்வளவு காலத்துக்கு போதுமானது என்பது குறித்த கணிப்பீட்டை மேற்கொள்ள முடியாமல் போனது.

அத்தோடு 321 சதொச விற்பனை நிலையங்களில் நிலவிய அரிசி இருப்புத் தொடர்பான தகவல்களும் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

களஞ்சியசாலைகளில் நிலவிய இருப்பு தொடர்பான தகவல் அறிதல், முறையாக பதிவேடு பேணப்படாமை, பௌதீக ரீதியாக தரவுகள் மெய்மையாய்வு செய்யப்படாமை போன்றன அரிசி இருப்பின் சரியான தன்மை குறித்த கணக்காய்வுக்கு நடவடிக்கைக்கு போதுமானதாக அமைந்திருக்கவில்லை.

உரிய நடைமுறைகளின்றி 14 வழங்குநர்களிடம் இருந்து சதொச நிறுவனம் மேற்கொண்ட அரிசி கொள்வனவால் அரசுக்கு 15 பில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட நட்டம் ஏற்பட்டுள்ளது.

2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவில், வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் வீட்டு வசதி மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் குறித்து 2 ஆயிரத்து 750 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் தொகையை விடவும் ஐந்து மடங்கு அதிகளவான தொகையை சதொச நிறு வனத்தின் முறையற்ற அரிசி கொள்வனவு தேவையற்ற நிதி இழப்பீடாக தந்துள்ளது."
- என்றார்.

(ஓ)



# ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் 15,000 பேர் புதைக்கப்பட்ட ஈராக்கின் பெரிய சவக்குழி

பக்தாத், நவ. 15

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் பயன்படுத்தப்பட்ட மிகப்பெரும் சவக்குழி ஈராக்கில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தச் சவக்குழியில் சுமார் 15 ஆயிரம் சடலங்கள் புதைக்கப்பட்டன என்று ஈராக் ஊடகங்கள் செய்தி வெளியிடப்பட்டன.

ஈராக், சிரிய நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஒரு தனிநாடாக அறிவித்திருந்தது ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு. அந்த அமைப்பின் பிடியில் இருந்து ஈராக் தற்போது முழுமையாக விடுவிக்கப்பட் டுள்ளது. சிரியாவின் பல பகுதிகள் தற்போது மீட்கப்பட்டுள்ளன.



ஈராக்கில் ஐ.எஸ். அமைப்பிடம் இருந்து ஹவியா நகரம் இறுதியாக மீட்கப்பட்டது. இந்த நகரத்திலேயே ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் பயன்படுத்தப்பட்ட மிகப்பெரும் சவக்குழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தமது பிடியில் இருந்து தப்பிக்கும் மக்களை கொன்று புதைக்க இந்த சவக்குழியையும் ஐ.எஸ். ஐ.எஸ். அமைப்பு பயன்படுத்தியது என்று ஈராக் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம)

## பிதாவே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள்...

பிரேசிலின் ரியோ டி ஜெனீரோ நகரில் உலகின் நான்காவது மிகப் பெரிய இயேசு சிலை உள்ளது. உலகப் பிரபலமான இந்தச் சிலையைப் போல் வெப்பக்காற்றில் இயங்கும் மிகப்பெரிய பலூன் ஒன்று ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரில் பறக்கவிடப்பட்டுள்ளது. நிறுவனமொன்றின் விளம்பரப்படுத்தல் நடவடிக்கைக்காகவே இது முன்னெடுக்கப்பட்டுள்ளது. இது சில சர்ச்சைகளைத் தோற்றுவிக்கலாம் என்று கருதப்படுகிறது. (ம)

## எண்ணெய் கொள்கலன் மூலம் நீந்திவரும் ரொஹிங்ய சிறுவர்

டாக்கா, நவ. 15

எண்ணெய் கொள்கலன்கள் மூலம் மியன்மாரில் இருந்து பங்களாதேஷுக்கு அதிகளவான ரொஹிங்யச் சிறுவர்கள் நீந்தி வருகின்றனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

பௌத்த நாடான மியன்மாரில் ரொஹிங்ய இஸ்லாமியர்கள் சிறுபான்மையினராக உள்ளனர். இவர்களை மியன்மார் அரசு இனசுத்திகரிப்புச் செய்கிறது என்று குற்றம் சுமத்தப்படுகிறது. கடந்த ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி ரொஹிங்ய ஆயுதக் குழுவுக்கும், மியன்மார் அரச படைக்கும் இடையே கடும் மோதல் வெடித்தது. இதையடுத்து மியன்மாரில் அப்பாவி ரொஹிங்ய இஸ்லாமியன்கள் கடுமையாகத் தாக்கப்படுகின்றனர். சுமார் 6 லட்சம் ரொஹிங்யர்கள் பங்களாதேஷிக்குச் சென்று தஞ்சமடைந்துள்ளனர். தற்போதும் நாள்தோறும் பல்லாயிரக்கணக்கான ரொஹிங்யர்கள் மியன்மார் நோக்கிச் சென்ற வண்ணம் உள்ளனர். இந்த விவகாரத்தில் மியன்மார் அரசுக்கு எதிரான நகர்வுகளை உலக தொண்டு நிறுவனங்கள் கடைப்பிடித்து வருகின்றன. அளவுக்கு அதிகமான அகதிகளின் வருகையால் அவர்களுக்கு உணவளிக்க முடியாமல் பங்களாதேஷ் திண்டாடுகிறது.

பங்களாதேஷ் அரசின் பிரதிநிதிகளுக்கும் மியன்மார் அரசின் தலைமை ஆலோசகர் ஆங் சாங் சூகிக்கும் இடையிலான சந்திப்பொன்று அண்மையில் நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் "ரொஹிங்ய மக்களை மியன்மாருக்குத் திரும்ப அழைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது" என்று ஆங்சாங்சூகி தெரிவித்தார். எனினும் பங்களாதேஷிக்குச்செல்லும் ரொஹிங்யர்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்தே உள்ளது. கடந்த சில நாள்களாக வெற்று எண்ணெய் கொள்கலன்களின் உதவியுடன் அதிகளவான ரொஹிங்யச் சிறுவர்கள் பங்களாதேஷுக்கு நீந்தி வருகின்றனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. மியன்மாரில் தாம் அனுபவித்த துன்பங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸிடம் சாட்சியமளித்துள்ளான் ரொஹிங்யச் சிறுவனான கரீம். (ம)



கரீம்



# நிலநடுக்கத்தால் ஹலாப்ஜாவில் அவசரநிலை

## உயிரிழப்பு 450 ஆக உயர்வு



பக்தாத், நவ. 15
ஈராக் - ஈரான் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள நகரங்களில் நேற்றுமுன்தினம் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுமார் 450 பேர் உயிரிழந்துள்ள நிலையில், நில நடுக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட ஹலாப்ஜா நகரில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈரான், ஈராக் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள சுலைமானியா, ஹலாப்ஜா, சர்பொல் ஏ ஜகாப் உள்ளிட்ட நகரங்களே நிலநடுக்கத்தால் மிகையாகப் பாதிக்கப்பட்டன. 7.2 ரிச்டர் அளவில் நிலஅதிர்வு பதிவானது என்று அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் உறுதிப்படுத்தியுள்ளது. கட்டட இடிபாடுகள் மிகையாக ஏற்பட்டுள்ளன. சுமார் 450 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களில் ஈரானைச் சேர்ந்தவர்களே அதிகமானோர் என்று மத்திய கிழக்கு ஊடகங்கள் குறிப்பிட்டன. ஈரானில் மட்டும் சுமார் 5 ஆயிரத்து 500 பேர் காயமடைந்துள்ளனர். ஒட்டுமொத்தமாக 9 ஆயிரத்து 200 பேர் காயமடைந்துள்ளனர். அவர்களில் சுமார் 200 வரையிலானோரின் நிலமை கவலைக்கிடம் என்று சொல்லப்படுகின்றது. மீட்புப் பணிகள் துரித கதியில் நடைபெற்று வருகின்றன. எனவே உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது.

அடுக்குமாடிக் குடியிருப்புகள் இருந்த ஹலாப்ஜா நகரில் நிலஅதிர்வு ஏற்பட்டமை உயிரிழப்பு மிகையாக உள்ளமைக்கு முக்கிய காரணம்.

இதையடுத்து அங்கு அவசர நிலை அறிவிக்கப்பட்டது என்று பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் செய்தி வெளியிட்டது. (ம)



# பூனைக்குச்சிலை

பாரிஸ், நவ. 15
முதன் முறையாக விண்வெளிக்கு சென்ற பூனைக்கு பிரான்ஸில் வெண்கலச் சிலை அமைக்கப்படவுள்ளது. கடந்த 1963ஆம் ஆண்டு ஒக்டோபர் 18ஆம் திகதி 'வெரோனிக் ஏஜி' என்ற ராக்கெட் மூலம் பூனை ஒன்று விண்வெளிக்கு அனுப்பப்பட்டது. பூமியில் இருந்து 157 கிலோ மீற்றர் உயரத்துக்குச் சென்ற பூனை 15 நிமிடத்துக்கு பிறகு பத்திரமாகத் தரையிறங்கியது.



இது விண்வெளிக்கு சென்ற முதலாவது பூனை என்ற பெருமையைப் பெற்றது. இந்த பூனைக்கு பிரான்சில் வெண்கலச் சிலை அமைக்கப்பட உள்ளது. அதற்கான ஏற்பாடுகளை லண்டனைச் சேர்ந்த நிறுவனமொன்று செய்து வருகின்றது. (ம)

# அலெப்போவில் வான் தாக்குதல் 29 பேர் சாவு



டமஸ்கஸ், நவ. 15
சிரியாவின் அலெப்போ நகரில் சிரிய இராணுவத்தால் நடத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் வான் வழித்தாக்குதல்களில் 29 அப்பாவிகள் உயிரிழந்தனர்.

துருக்கி எல்லையையொட்டிய சிரியாவின் அலெப்போ மாகாணம் உள்ளது. இந்த மாகாணத்தின் சில பகுதிகள் சிரிய அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவின் பிடியில் உள்ளன. அவ்வாறு கிளச்சிக் குழுவின் கட்டுப்பாட்டில் உள்ள இடத்தில் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட வான்வெளித் தாக்குதலில் 29 அப்பாவிகள் உயிரிழந்தனர்.

லண்டனைத் தலைமையகமாகக் கொண்டு சிரியாவில் செயற்பட்டுவரும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் இந்தத் தாக்குதலை உறுதிப்படுத்தியுள்ளது. இந்தத் தாக்குதல் சிரிய இராணுவத்தால் நடத்தப்பட்டதா அல்லது ரஷ்யாவால் நடத்தப்பட்டதா என்று உறுதிப்படுத்தப்படவில்லை. எனினும்சிரியாவே இதை நடத்தியிருக்கலாம் என்று சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. சிரியாவில் இராணுவத்தின் மூலம் தீர்வுகாண இயலாது என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப், ரஷ்ய அதிபர் புடின் இருவரும் கூட்டாக அறிவித்த 48 மணி நேரத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



15 நவம்பர் 2017 புதன்கிழமை

புதன் பொய்கை

நீ வாயைத் திறக்கும்போது உள்ளத்தைத் திறக்கிறாய்; எனவே கவனமாக இரு!
- யங்

வளவை வளவன்

# அவ்வையாரும் காளமேகனாரும்

## தனிச்சிறப்புடைய தமிழ் ஆளுமையின் பே(கூ)றுகள்

தமிழ் இலக்கிய உலகம் கொண்ட கோலம் அற்புதமானது. ஆங்கு அழகியல் புரிந்த ஆளுமைகள் அத்தனையும்தனிச்சிறப்பானது. அவர்கள் கொண்டிருந்த தமிழின் கொழிப்பு அறிவார்ந்த ஆத்மார்த்தமானது. ஒவ்வொன்றும் அற்புதச் சுவை தருவிகள். வரலாற்றின் அடிப்படைகளையும், தமிழன் கொண்ட தமிழியலின் பண்பாட்டுக் கூறுகளையும்செவ்வனேதரும் ஆதனமானது. எழுத்தோவியமானது.



**அரசவைக் கவிகள்**
அந்தவகையிலே அரசவைக் கவிகளின் பாடுபுலம் நாட்டின் கோனுயரப் பணி செய்தன. மக்களோடு பாக்கள்ஊடாடிநற்கருத்தூட்டம் செய்தன. அதுகுறித்துகருத்து வேறுபாடுகள் இருந்துவிட முடியாது. இருப்பினும் வஞ்சப்புகழ்ச்சியிலும், சுயபெருமிதத்திலும் திழைத்திருந்த புலவர்கள் இடைவிலகலாக ஆர்ப்பரித்து தமிழ் கூறும் கருத்தாழங்களைப் பேசியிருந்தன. இவ்வகையினருள் கவிதை பாடித் தாமும் மன்னனிடம் பரிசு பெற வேண்டுமென்ற பேராசையின் எண்ண மேலீடு கொண்ட, 'தருமி' போன்ற முயற்சியின் கூறுகளும் வரலாற்றுப் படிமங்களிடை எமைக் கடந்து சென்றுள்ளன.

**நாலுகோடி பாடல்களைப் பாட மன்னன் ஆணையிடல்**
ஆக, புலவர்என்றநாமக்களிப்போடு, பேராசைகொண்டு உலவித்திரிந்த, பொருள் ஈட்டத்தில் நாட்டமுடைய தனிமங்களுக்கு சரியான பாடத்தை கற்பிக்க வேண்டுமென மன்னன் மனதளவில் தீர்மானம் கொண்டிருந்தான். இந்தச் சந்தர்ப்பத்திலே முருகன் கோயிலின் மடப்பள்ளியில் தஞ்சமடைந்திருந்த சிலர், புலவர்களோடு சேர்ந்து தாமும்புலவர்களுள்ஒருவராகிவிட வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தனர்.
இவர்களின்திட்டம்பற்றியும்மன்னன் அறிந்துகொண்டிருந்தான். இவர்கள் கொண்டுள்ள புலமையை அறிந்துகொள்ளஎண்ணி, அப்புலவர்குழுவிலிருந்துஒருவரைத் தன்னைக் காண வரும்படி அழைப்பு விடுத்தான். தன்னைக்காண வருகை தந்த புலவனை விழித்த மன்னன், "நீங்கள் எல்லோரும் ஒருமித்தோ அல்லது தனித்தோ ஓரிரவினுள் நாலுகோடி பாடல்களைப் பாட வேண்டும்." என ஆணையிட்டான்.



**புலவர் குழாம் கதிகலங்கி நிற்றல்**
மன்னனைக் காண வந்த புலவரோ செய்தி கேட்டுக் கதி கலங்கிப் போய் நின்றார். செய்வதறியாது சிந்தனைக் கலக்கம் கொண்டார். உண்மையில் மன்னன், நாலு கோடி பாடல்களை அங்கு குழுமியிருந்த புலவர்கள் அனைவரும்இணைந்துபாடவேண்டுமென்றகருத்தின் மருவலோடுகூறினாலும், ஒரேஇரவில்நாலுகோடிபாடல்களைப் பாடுவதென்பது இயலாத காரியம். வகையாக மாட்டிக்கொண்டோமே, என்ன செய்வது...? என குழப்பம் அடைந்தனர்.

**அவ்வையின் வருகை**
இந்தச் சந்தர்ப்பத்திலே அரண்மனையின் அருகாக அமைந்திருந்தகோவில்வீதியால்அவ்வைப்பிராட்டியார் வருகை தந்துகொண்டிருந்தார். பொழுது சாய்ந்து விட்டதே என்ற எண்ணக் கிளர்வில் தன் இல்லம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். புலவர்கள் கூடியிருந்து கதையாடுவதைகண்ணுற்றார். புலவர்களின்முகத்தில்வழக்கமான மகிழ்ச்சிப் பிரவாகம் களையிழந்திருப்பதையும், பெருங் கவலை குடி கொண்டிருப்பதையும் தன் மதி நுட்பம்கொண்டுபுரிந்தும்அறிந்தும்கொண்டார். 'ஆ..'. என்ற குரல் அசைவின் தொனிப்போடு அவர்கள் கொண்டிருந்த சிந்தனைப் புலத்தின் திசையை தன் வசம் ஈர்த்துக்கொண்டார். "என்ன புலவர்காள், பெருங் கவலையோடு போராடிக் கொண்டிருப்பது போலத் தெரிகிறதே.....!" என்று சிலேடையாகக் கூறி, வார்த்தை விசை கொண்டு அவர்கள் மனதில் கல்லெறிந்து விட்டார்.

**புலவர் குழாம் அவ்வையிடம் நடந்தவைகள் கூறல்**
அவ்வையைக் கண்டதும் புலவர் குழாம் மகிழ்வு கொண்டது. அவரை வரவேற்றுஉபசாரம்செய்தது. "முருகா..!நீதான்அவ்வை இவ்விடம் வருகையுற கருணைபுரிந்தனையோ?" எனஅமைதிகொண்டனர். அவ்வையே....! என அவர் உதவியின் முக மலர்வை வேண்டி நின்றனர். "மன்னர்பிரான்எமை அழைத்து, ஒரு பெரும் ஆணையைப் பிறப்பித்து விட்டார். அது குறித்து கவலை கொண்டுள்ளோம். எமக்குவேறென்ன கவலை இருந்துவிட முடியும்...?" என்று கூறி ஒருவர்முகத்தைஒருவர்பார்த்துக்கொண்டனர்.

அவ்வையும் புலவர்கள் கூறியதை செவி சாய்த்தபடி, "அதற்கென்னபுலவர்களே...!நான்உங்களுள்ஒருவர் தானே...? அப்படி என்ன விசித்திரமான ஆணையை மன்னன்உங்களிடத்தாய்தந்துவிட்டான். நான்தெரிந்து கொள்ள வேண்டும் என நீங்கள் விரும்பின், அது பற்றிக் கூறுங்கள். இல்லையென்றால்நான்என்பாட்டில்சென்று விடுகிறேன்." என்றார். அவ்விடம் நீங்கி அவ்வையார் புறப்படத்தயாரான போது, புலவர் குழாமில் இருந்த ஒருவர் அவ்வையை அழைத்து, "ஓரிரவினுள் புலவர்கள் எல்லோருமாகச்சேர்ந்துநாலுகோடிபாடல்கள்எழுதிவர வேண்டுமென மன்னன் ஆணையிட்டுள்ளான்." - என்றார். பின்பு, "நீங்களும் புலவர்தானே..! எப்படி ஓரிரவுக்குள் நாலுகோடி பாடல்களை எழுதுவது" என்று அவ்வையை விழித்தனர்.

**அவ்வை 'கோடி வெண்பா' பாடுதல்**
அவ்வையார் குறுநகை புரிந்தார். "உங்களால் முடியவில்லை என்றால் என்ன. நான் நான்கு கோடி பாடல்களையும் சொல்கிறேன். நீங்கள் குறித்துக் கொள்ளுங்கள்." என்று கூறினார். புலவர்கள் மகிழ்ச்சிப் பெருங்கடலில் மூழ்கினர். எழுத்தாணியையும் ஓலை ஒறுக்குக்க'ளையும்தங்கள்கைகளில்ஏந்தியவாறு, அவ்வைகூறும் பாடல்களை எழுதிவிடத் தயாராகினர்.
அவ்வையார் தன்னிலையில் ஆசுவாசமானார். தான் கூறவந்தபாடல்களைவெளிப்படுத்தினார். அவை'கோடி வெண்பா' என்ற சிறப்போடு பின்வருமாறு அமைவு பெற்றிருந்தன.

*மதியாதார் முற்றம்*
*மதித்தொருகாற் சென்று*
*மிதியாமை கோடி பெறும்.*
*உண்ணீருண் ணீரென்று உபசரியார்*
*தன்மனையில்*
*உண்ணாமை கோடி பெறும்.*
*கோடி கொடுத்தும் குடிப்பிறந்தார்*
*தம்மோடு*
*கூடுதல் கோடி பெறும்.*
*கோடான கோடி கொடுப்பினும்*
*தன்னுடைநாக்*
*கோடாமை கோடி பெறும்.*

**மன்னனைக் காண வந்த புலவரோ செய்தி கேட்டுக் கதி கலங்கிப் போய் நின்றார். செய்வதறியாது சிந்தனைக் கலக்கம் கொண்டார். உண்மையில் மன்னன், நாலு கோடி பாடல்களை அங்கு குழுமியிருந்த புலவர்கள் அனைவரும் இணைந்து பாட வேண்டுமென்ற எண்ணத்தில் கூறினாலும், ஒரே இரவில் நாலு கோடி பாடல்களைப் பாடுவதென்பது இயலாத காரியம்.**



*"அப்பன் இரந்து உண்ணி, ஆத்தாள் மலை நீலி
ஒப்பரிய மாமன் உறி திருடி - சப்பைக்கால்
அண்ணன் பெரு வயிறன் ஆறுமுகத்தானுக்கு
இங்கு எண்ணும் பெருமை இவை."*

என்று வசை மொழிந்து இகழ்வது போலப் புகழும் தமிழால் நிந்தனைத் துதி பாடி, கைகளைத் தட்டி தலையில் குட்டிக் குந்தி எழுந்து சென்ற போது புலவர்கள் எல்லோரும் பிரமிப்புற்றனார்.

இங்கு, "முருகனின் தந்தை பிச்சை எடுத்து உண்பவன் (சிவன் இரத்தல் தொழில் செய்தது புராணக் கதை), தாயாரோ மலையில் பிறந்த கோபக்காரி, ஒப்பற்ற மாமன் திருமாலோ கண்ணனாக வெண்ணெய் திருடி உண்டவன். அண்ணனோ சப்பைக் கால்களையும் பெரு வயிற்றினையும் உடையவன். இவர்கள் அனைவரும் ஆறுமுகத்தானுக்கு பெருமை மிக்க உறவினர்கள்" எனப் பாடினார்.

பாடல் வரிகள் கேலி செய்வது போல ஒரு புறம் தோன்றினாலும், ஆழமாககருத்தூன்றிப்படிக்கும் போது உண்மைத் தன்மை வெளிப்படும். அதாவது, "பக்தர்களிடம் உள்ள தீய குணங்களை சிவன் தன் திருவோட்டில் பிச்சையாக ஏற்கிறார். தீமையை எதிர்க்கும் போது பார்வதி கொடிய நீலியாக கோபம் கொள்கிறாள். வெண்ணெய் திருடுவது போல நல்லவர் உள்ளத்தை கொள்ளைகொள்பவராகதிருமால்இருக்கிறார். அண்டங்களை வயிற்றில் தாங்கி நிற்பதால் விநாயகர் பெருவயிறு கொண்டவராகவிளங்குகிறார்." எனஉண்மையை அப்படியே அற்புதப் பொருள்பட மொழிந்தார் காளமேகப் புலவர்.

**அண்டங்களை வயிற்றில் தாங்கி நிற்பதால் விநாயகர் பெருவயிறு கொண்டவராக விளங்குகிறார்." என உண்மையை அப்படியே அற்புதப் பொருள்பட மொழிந்தார் காளமேகப் புலவர்.**

இவ்வாறு நாலு கோடிவெண்பாவை பாடிமுடித்த அவ்வை, "என்னபுலவர்களேநான்குகோடிகளும்சரிதானே" என்று வினவினார். பின்பு தன் வீடு நோக்கிய பயணத்தைத் தொடர்ந்தார்.

**முருகன் அருளை எண்ணி புலவர் குழாம் துதித்தல்**

முகமெல்லாம் பல்லாகச் சிரித்துச் செழித்த முகங்களாக எல்லாப்புலவர்களுமே மகிழ்ந்தனர். போற்றி...! போற்றி...! என்று தமிழ் கடவுளர் முருகனைத் துதித்துப் பாடிக் கூத்தாடிக் களித்தனர்.

முருகா, நீ சுட்டபழங் கொடுத்து ஆட்கொண்ட அவ்வையின் வாய்மொழி தந்த பாக்கள் கண்டுகொண்டு நாம் பிழைத்தோம் என்று ஆனந்தப் பூரிப்படைந்தனர்.

இதனிடையே குழப்ப விழம்பியாக, "என்ன குதூகலம் புலவர்களே...! நீங்கள் துதிக்கும் முருகனுக்கு என்ன பெருமை இருக்கிறது..? அவரை ஏன் கொண்டாடுகிறீர்கள்...?" என்றகேள்வியைமொழிந்தபடிஓடும்மேகமாக ஒரு காளமேகம் அப்படியே அங்கு வந்து வார்த்தை மழைபொழிந்தது.

**காளமேகனார் கொண்ட நிந்தனை**

எல்லாப் புலவர்களும் கலக்க முற்றனர். பய உணர்வு தொற்றிக்கொள்ள, வசைபாடிக் களித்துக் கூத்தாடிஎமையும்தான் புரியும்நிந்தனையுள்மாட்டிவிடப்போகும்காளமேகப்புலவரின்செயலைப் பார்த்திருந்தனர். "புலவர்களே, உங்கள் முருகனின் பெருமையை சொல்வேன் கேளுங்கள். அதையும் எழுதிக் கொள்ளுங்கள்" என்று காளமேகனார் கூற இன்னமும்; கலக்கமடைந்தனர்புலவர்கள். எங்கேதாம்அவ்வையாரிடம் கவிதை சொல்லக் கேட்டு கடன்பட்டு விட்டதை காளமேகனார்கண்டுவிட்டாரோஎனஅங்கலாய்த்துக்கொண்டனர்.

**வசை மொழி புனைந்து முருகனைப் பாடிச் சிறத்தல்**

முருகனின் பெருமையை கூறுவேன் கேளுங்கள் என்றுமீண்டும்வார்த்தைகளால்இடித்துரைத்தகாளமேகனார் பாடத் தொடங்கினார்.

**இலக்கிய நயங்களை என்றும் சுவைப்போம்**

இதனை எண்ணிக் களித்த புலவர்கள் தமக்குள்ளே பேசி மகிழ்ந்தவாறு, அவ்வையார் உவந்த நான்கு கோடிப் பாடல்களைச் சுமந்தவாறு மன்னனை நாடிச் சென்றனர். இவ்வாறு, வரலாற்றின் போக்கிடை தனிச்சிறப்புடைய தமிழ் ஆளுமையின் பே(கூ)றுகள் இலக்கிய நயம் காணலில் மேன்மையுற்றிருப்பதை காணமுடிகிறது.



# சித்திரவேம்பு

## நிழலும் அழகும் ஒருசேர அமைந்தது




கி.சுதர்சினி

தமிழ்ப்பெயர் - நிங்கல் மரம்
பொதுப்பெயர் - சித்திர வேம்பு
ஆங்கில பெயர் - Fern tree
தாவரவியல் பெயர் - Filicium decipiens

சித்திர வேம்பு மரமானது இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் முதன் முதலில் தோன்றிய தாக நம்பப்படுகின்றது. அடர்ந்த குடை வடிவமான இந்த மரம் சராசரியாக 15 மீற்றர் உயரம் வரை வளரக்கூடியது. 68 சோடி சமச்சீரான சிற்றிலைகள், கூட்டிலைகளாகக் காணப்படுகின்றன. இலை நடு நரம்புகள் சற்று உயர்ந்து தெளிவாகக் காணப்படும். ஒரே கிளையின் நுனியில் ஆண், பெண் பூக்கள் தனித்தனி பூந்துணர்களில் அமைந்திருக்கும்.

தை, மாசி மாதங்களில் பூக்கும் இயல்பு கொண்டது. மினுமினுப்பான சிவப்பு கலந்த ஊதா நிற, நீள் வட்டமான நுனி கூரான பழங்களைக் கொண்டது. பழங்கள் விலங்குகள் மூலம் பரம்பலடைகின்றன. முதிர்ச்சியடைந்த பழங்களைச் சேகரித்து பொதி நாற்றுகளில் இடுவதன் மூலம் நாற்றுக்களைப் பெற்றுக்கொள்ளலாம். பழங்கள் உடனடியாக நடுகை செய்யாது விடின் முளைதிறன் குறைவடையும். தண்டுத் துண்டங்கள் மூலமும் இனப் பெருக்கம் மேற்கொள்ள முடியும்.



### வறண்ட பகுதிகளில் அதிகம் வளர்கிறது

வறட்சியை தாங்கி வளரக்கூடியமையால் அழகுக்காகவும், குளிர்ச்சியை பெற்றுக்கொள்ளவும் வறண்ட பகுதிகளில் அதிகம் விரும்பி வளர்க்கப்படுகின்றது. பொதுவாக நிழல் நோக்கத்திற்காக சாலையோரங்களில் 5 மீற்றர் இடைவெளியில் தனி வரிசைகளில் நடப்படுகின்றது. இலைகள் முதிர்ச்சியடைவதற்கு நீண்ட காலம் எடுப்பதனால் என்றும் பசுமையாகக் காணப்படும். அத்துடன் ஒரே அளவான விதான அமைப்பு கொண்டதால் தோட்டங்களில் நில அலங்காரங்களிற்கும் திறந்த வெளிகளை பசுமையாக்குவதற்கும் விரும்பப்படுகின்றது. ஐந்தூரியம் போன்ற நிழல் விரும்பும் தாவரங்களை சித்திர வேம்பின் கீழ் வளர்க்கலாம். வேர்த்தொகுதி பரவலாக காணப்படுவதால் 35 வருடங்களில் உரிய வளர்ச்சியை அடைந்து பயன் தரக்கூடியது.

### தளபாட உற்பத்திக்கு உகந்தது

உறுதியான மற்றும் பாரமான தண்டு தளபாட உற்பத்திக்கும், செங்கபில நிறமான தண்டு கைவினைப் பொருள்கள் உற்பத்திக்கும் பயன்படுகின்றது. தண்டு விரைவில் உக்கலடையாத தன்மை கொண்டமையால் சிறந்த எரிபொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது. இம் மரத்தினது பட்டை ஆயுள்வேத மருத்துவத்தில் என்பு முறிவுச் சிகிச்சையில் பயன்படுத்தப்படுகின்றது. மற்றும் சவர்க்கார உற்பத்தியில் தொற்று நீக்கியாகவும் பயன்படுத்தப்படுகின்றது.

சாகுமுன் உன் பாட்டன்
நட்ட பழமரங்களைக் கேட்டுப்பார்
உனது பரம்பரையின் கனவுகளை
இன்றும் அது வைத்திருக்குகூடும்




## சமாதான நீதவானாகப் பதவி



சமாதான நீதவானாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் உப அதிபர் சுப்பிரமணியம் பரமேஸ்வரன் பொறுப்பேற்றுள்ளார்.
நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் கடந்த 6ஆம் திகதி அவர் பதவியேற்றார். இவர் சிறுப்பிட்டி இ.த.க. பாடசாலையின் முன்னாள் அதிபரும், கல்வியல் சமூக சேவா சங்கம், டேனிஜா மழலைகள் பூங்கா ஆகியவற்றின் நிர்வாகத் தலைவரும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

★ ★ ★



ஊர்காவற்றுறை கிழக்கை சேர்ந்த கிருஸ்ணன் புவி, நீதிபதி ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் அண்மையில் இலங்கை சமாதான நீதவானாகப் பதவியேற்றார்.
இவர் தற்போது வட பிராந்திய இலங்கை போக்குவரத்து சபையின் திடீர் பரிசோதனைக் குழு உத்தியோகத்தரும், வடமாகாண ஜனநாயக போக்குவரத்து ஊழியர் சபைத்தலைவரும், எக்காளத்தொணி பூரண சுவிசேச சபை தேவ ஊழியரும், ஞானவொளி விளையாட்டுக் கழக போசகரும், ஞான வைரவர் சன சமூக நிலைய தலைவராகவும் செயற்படுகின்றார். இவர் முன்னாள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினரும் ஆவார். (325)

நெஞ்சம் விட்டகலாத
# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
04 . 09 . 1930



மறைவு
27 . 10 . 2016

## திருமதி தவமணி இராமலிங்கம்


திதி:- துவாதசி 15.11.2017



காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை நாகம்மா தம்பதியர்
தவமிருந்து பெற்றெடுத்த தவப்புதல்வியே!
தவமணியே எங்கள் அருமைத் தாயே!
பருவங்கள் மாறலாம், உருவங்கள் மாறலாம்
காலங்கள் கடந்து போகலாம்
பாசம் மட்டும் மாறாது எங்கள் உயிர்த்தாயே!
தாங்கிக் கொள்ள எத்தனை சொந்தம் இருந்தாலும்
அம்மா என்ற ஜீவனுக்கு இணையாக ஒரு சொந்தமும்
இல்லை இந்த உலகினில்
அம்மா நீங்கள் மறைந்து ஆண்டொன்று ஆனாலும்
அகிலத்தில் எம் வாழ்வு உள்ளவரை உமை மறவோம்
தெய்வத்துள் நீங்கள் நிறைந்து விட்டாலும்
வையத்துள் வாழும் நாங்கள் நித்தமும் உமை நினைந்தே வாழ்வோம்

நீங்கா நினைவுடன்,
குடும்பத்தினர்.

"தவவாசம்" 14/1, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.











## பதுவையார் சனசமூக நிலையத்தின்

# ஆண்டு விழாவும் கலை நிகழ்வும்

பாசையூர் மகேந்திரபுரம் பதுவையார் சனசமூக நிலையத்தின் 35ஆவது ஆண்டு விழாவும் கலை நிகழ்வும் அண்மையில் இடம் பெற்றது.

பாசையூர் மகேந்திரபுரம் பதுவையார் சனசமூக நியைலத்தின் தலைவர் அ.பிராங்ளின் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வுகளின் ஒருபகுதியாக கலைஞர்கள் மதிப்புறுத்தப்படும் நிகழ்வும் நடைபெற்றது. இதில் மறைந்த கலைஞர்களான பி.எஸ்.சின்னத்துரை. மாணிக்கமுத்து அந்தோனிப்பிள்ளை, பாக்கியன் அமிர்தநாதன், ஜேர்ஜ் அந்தோனி, கிறகோரி துரை, சின்னப்பு சிறில், லோறன்ஸ், ஜோன்பிள்ளை தேவராசா, ஜோன்பிள்ளை செபஸ்ரியாம்பிள்ளை, செல்லக்குமாரன் சின்னக்குமாரன், ஜெனிலா கீதராஜன், ஆகியோருக்கு 'கலை மகுடம்' என்னும் விருது வழங்கி மதிப்புறுத்தப்பட்டது. கலைஞர்களின் உறவினர்கள் விருதுகளைப் பெற்றுக்கொண்டனர். நே.தவராஜ், கி.டேமியன், யே.மிக்கோர்சிங்கம், எம்.மரியநாயகம், அ.றொபின்சன், செ.டினேஸ், பி.அருள்ராஜ், அ.அனுசியஸ், அ.பொன்ராசா, எ.யேன்புளோறிடா, பி.மதிவதனா, இ.டொன்பொஸ்கோ, எஸ்.பாலையா ஆகியோர் 'கலைத் தென்றல்' என்றும் விருது வழங்கி மதிப்புறுத்தப்பட்டனர்.

மு.சிங்கராயர், யூல்ஸ் கொலின், ஆகிய இருவம் 'முத்தமிழ் கலா வித்தகர்' என்னும் விருது வழங்கி மதிப்புறுத்தப்பட்டனர். விருதுகளை விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்த வடக்கு மாகாணசபை உறுப்பினர் இ.ஆனல்ட் மற்றும் திருமறைக் கலாமன்றத்தின் பிரதி இயக்குனர் ஜோன்சன் ராஜ்குமார் வழங்கி வைத்தனர்.










# கனக செந்திநாதனின் நூற்றாண்டு நிகழ்வு

குரும்பசிட்டியில் அமரர் இரசிகமணி கனக செந்திநாதனின் நூற்றாண்டு நிகழ்வு அண்மையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.


1934ஆம் ஆண்டு நிறுவப்பட்ட குரும்பசிட்டி சன்மார்க்கசபையானது குரும்பசிட்டி மீள்குடியமர்வின் பின்னர் தனது முதல் நிகழ்வாக ஈழத்து இலக்கிய பிதாமகர்களில் ஒருவரான அமரர் இரசிகமணி கனக செந்திநாதனின் நூற்றாண்டு நிகழ்வினை முன்னெடுத்தது. குரும்பசிட்டி கலாசார மண்டபத்தில் கடந்த ஐந்தாம் திகதி இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் தலைவரும் சட்டத்தரணியுமான சு.சிவபாதம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அதிதிகளாக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு.திருமுருகன், தெல்லிப்பழை பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த் துறைத்தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா, சைவப்புலவர் சு.செல்லத்துரை மற்றும் சாந்திகத்தின் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடத்திய பரிசளிப்பும், கலைநிகழ்ச்சியும் கிழவன்காடு கலாமன்ற ம்மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றன.



# பலமும் பலவீனமும்



கே.எஸ்.சிவஞானராஜா


யாழ்ப்பாணம் ஒரு காலத்தில் ஆஸ்திக பலத்தினால் எதையும் சாதிக்கும் வல்லமை பெற்றிருந்தது. நாஸ்திகம் என்று அறவே இல்லாமல் நிம்மதியாய் நீடு வாழ்ந்தது என்று துணிந்து கூறலாம். உலகம் வேகமாகவும், நாகரீகமாகவும் பயணிப்பதனால் பலமும் பலவீனமும் போட்டா போட்டியுடன் ஒன்றையொன்று வெல்லப்பார்க்கிற பாங்கில், யாழ்ப்பாணம் தனது இருப்பிடத்தை ஆன்மிகப் பாதையில் செப்பனிடுவதற்காகத் தன்னால் இயன்றவரை போராடிக்கொண்டு இருக்கிறது.

**யாழ்ப்பாணம் என்றால் நல்லூர்**

யாழ்ப்பாணம் என்னும்போது முதலில் நினைவுக்கு வருவது. நல்லூரே தான். இதுதான் தமிழ் மொழியினதும், தமிழ் மண்ணினதும் ஊற்றுமாகும். மேலும், சைவசமயத்தின் ஆணிவேராகவும் நல்லூர் விளங்குகின்றது. இவை அனைத்துக்கும் மூலகாரணமாக அமைவதுதான் நல்லூர் கந்தசுவாமி ஆலயமாகும். சைவத்தையும், கலை கலாசார பண்பாட்டையும், பொன்னான நேரத்தையும், கந்தபுராண பாரம்பரியத்தையும் கோபுரமாக வளர்ப்பதில் நல்லூர் கந்தசுவாமி ஆலயம் விளம்பரமின்றிச் செயற்படுகிறது. இவையனைத்தும் அறப்பணிகளேயாகும். எனவே நல்லூர் ஒரு அறநிலையம். பல ஆலயங்கள் அறம்சார்ந்த பலகருமங்களைச் சொல்லாமல் கொள்ளாமல் ஆற்றிவருகின்றன.

**அழிவில்லாதது சைவம்**

சைவசமயமானது எந்தவிதத்திலும் தனது நிலையிலிருந்து கீழ்நோக்கியோ, அல்லது குறைந்துபோகவோ அல்லது தடுமாறவோ அல்லது தத்தளிக்கவோ இல்லை. ஆனால் அதன் இருப்பிடங்களை கொள்ளையடிக்கின்றனர். சைவ சமயம் போராலோ, பணத்தாலோ, திட்டமிட்டோ, எதேச்ச அதிகாரத்தினாலோ, இயற்கை அனர்த்தத்தாலோ அழிக்கப்பட முடியாதது. சைவசமயம் கற்பனைக்கும் காலத்திற்கும் முற்பட்டது. சட்டத்தில் இல்லாவிட்டாலும், வேதமாய், மந்திரமாய், கீதமாய், நாதமாய், ஓசையாய், சிற்பமாய், தோத்திரமாய், சாத்திரமாய், திருமுறையாய், கோபுரமாய், காப்பியமாய், திருமந்திரமாய், தேன்தமிழாய் இருக்கும்போது அதனை எவராலும் அழிக்கவே முடியாது. எனவே சைவசமயத்தை சூரிய சந்திரர் இருக்கும்வரையும், அதற்கப்பாலும் எவராலும் எதுவும் செய்துவிட முடியாது. பன்னிரு திருமுறைகளும் உயிரோடு இருக்கும் போது யாது பயம்? பலம் அல்லவா! கந்தபுராணமும், பெரியபுராணமும் பாதைவகுத்துப் பவுத்திரம் செய்யும் போது வள்ளுவம் வாழவைக்கும் அல்லவா? எனவே எமது சமயம் என்றும் பலமோடு நலமாக வாழுமே!



**பலவீனம்**

'ஹைஏஸில்' மாடுகள் கடத்திய மூவர் சிறப்பு அதிரடிப்படையினரிடம் சிக்கிய சம்பவம்! அடேயப்பா! ஓகஸ்ட் 26ஆம் திகதிய செய்தியாக ஆறுமாடுகள் கால்கள் கட்டப்பட்ட நிலையில் கடத்தப்படுவதற்கும், 37 மாடுகள் இறைச்சியாக வெட்டப்பட்டு கடத்தப்படுவதற்கும், நாள்தோறும் அமோகமாக இறைச்சிக்காக வாய்விடாத ஆடு, மாடு, கோழிகள் வெட்டப்படுவதற்கும் இந்த மண்ணில் உள்ளோர் காரணமாகி விட்டார்களே என்பது முதல் பலவீனம். மற்றும் முறையற்ற பாலியல் துர்நடத்தை. உறவு நிலைகளுக்கு அப்பால் பாலியல் நாட்டம்! மகள், குழந்தை என்று கூடப்பார்க்க முடியாத அகோரம்! ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாடு வலுவிழந்து போகும் அபாயநிலை.! இதைவிட பிறர்மனை நோக்கும் நிலை. மேலும், போட்டோ போட்டியாகவும், கோடி கோடியாகவும் விலைபோகும், எமது விதியோடு விளையாடும் வாகனங்கள், இணையதள அலைபேசிகள், இலத்திரனியல் உபகரணங்கள், நவநாகரீக உடை நடை பாவனை, கடல் விளையாட்டு, போதைப்.பொருள்பாவனை, அடாவடிகள் அனைத்துமே இந்த மண்ணில் தோன்றும் பலவீனங்களே! கலியுகத்தின் வலி இப்படித்தான் இருக்கும்! பலவீனங்களை இல்லாதொழித்து பலத்தை மட்டுமே சுற்றிலும் கட்டமைப்போம்.

> விதியோடு விளையாடும் வாகனங்கள், இணையதள அலைபேசிகள், இலத்திரனியல் உபகரணங்கள், நவநாகரீக உடை நடை பாவனை, கடல் விளையாட்டு, போதைப்பொருள் பாவனை, அடாவடிகள் அனைத்துமே இந்த மண்ணில் தோன்றும் பல வீனங்களே! கலியுகத்தின் வலி இப்படித் தான் இருக்கும்! பலவீனங்களை இல்லாதொழித்து பலத்தை மட்டுமே சுற்றிலும் கட்டமைப்போம்.

# உடுவில் மகளிரின் 'பரதரிதா' நடன சங்கமம்

## ரசிகர்களைக் கட்டிப்போட்ட ஆடல் அரங்கேற்றம்



பழனித்துரை தர்மகுமாரன்

உடுவில் மகளிர் கல்லூரி தனது '200ஆவது ஆண்டை நோக்கிய பயணம்' என்னும் தொனிப்பொருளில் ஒரு நடன சங்கமத்தை கல்லூரி மங்கையர்களின் திறன்களை வெளிப்படுத்தும் வகையில் கல்லூரியின் உள்ளக அரங்கில் அண்மையில் அரங்கேற்றியது. நடனத்துக்கு மங்கையர்களா? மங்கையர்களுக்கு நடனமா? என்று வியக்கும் அளவுக்கு இருக்கையின் நுனி வரை ரசிகர்களை கொண்டுசென்ற அந்த நடன நிகழ்வானது பெண்களின் தனித்துவத்தையும் உடுவில் மகளிர் கல்லூரியின் பாரம்பரியத்தையும் மீண்டுமொரு முறை பறைசாற்றும்படியாக அமைந்தது.

**பரதம் + ரிதம்**
**'பரதரிதா'**


அதிபர் பற்றிசியா சுனித்தா ஜெபரட்ணம் இந்த நடன சங்கமத்தைத் திட்டமிட்டு ஒழுங்குபடுத்திக் கட்டுப்படுத்தியதுடன், பாடசாலையின் மனிதவளங்களையும், பௌதீகவளங்களையும் முழுமையாக தன் ஆளுகைக்கு உட்படுத்தி அரங்கை அழகுபடுத்தி பார்வையாளர்களைப் பூரிப்படைய வைத்தார். "பரதரிதா" என்னும் நடனசங்கமம் பரதத்தையும் ரிதத்தையும் ஒன்றுசேர அழகுற செம்மைப்படுத்தியிருந்தது. பாலுடன் கலந்த தேன் தீன்சுவையை ஏற்படுத்துவது போல, பெண்களது பரதம், அவர்களது ஐம்புலன்களின் சுறுசுறுப்பு, படபடப்பு, துடிதுடிப்பு என்பவை பட்டாசுக் கோர்வையின் வெடிச் சத்தத்துக்கு ஒப்பாக அரங்கை அதிர வைத்தன.

**மெய்மறக்க வைத்தது**
**உடுவில் மகளிரின் நடனம்**

கலைகளின் கொந்தளிப்பில் ஒன்றே நடனக் கலை. இது பரத முனிவரால் மிகைப்படுத்தப்பட்டாலும், நடராஜரின் உருவச்சிலை மூலம் நடனக்கலை புதையுண்டு கிடந்ததாக அறியப்படுகின்றது. நடனம் என்பது சாதாரண விடயம் அல்ல. ஏனெனில், உடல் உறுப்புக்களும் உடல் தொகுதிகளும், ஒருங்கே செயலாற்ற அதில் இருந்து ஊற்றெடுத்து பிறப்பெடுக்கும் அபிநயங்கள் பார்ப்பவர்களை பரவசப்பட வைக்கும். அதாவது கோபம், பயம், மகிழ்ச்சி, அச்சம், வெட்கம், என்பவற்றை முகத்தில் வரவழைத்து கால்களின் காத்திரமான கடகடப்பும் கைகளின் சாத்திரமான சலசலப்பும் நடன மங்கையர்களை அரங்கில் மந்திரவாதிகள் போல மாற்றிவிடுகின்றன. இதுவே நடனக் கலை. உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற பரதரிதா நடன சங்கமமும் நான்கு மணிநேரம் நடைபெற்றது. நேரம் ஓடிமறைவது தெரியாமல் ஓடிமறைந்தது. அந்த அளவுக்கு ரசிகர்களைக் கட்டிப்போட்டது மாணவிகளின் நடனம். இந்த நிகழ்வில் பாம்பு, மயில் நடனம், வர்ணம், இசை நாடகம் (சீதா சுயம்வரம்) கலைஞனின் கனவு, தில்லானா, பாங்கிரா நடனம், தனிநடனம் என்பவை பல நிகழ்வுகளாக பார்வையாளர்கள் மத்தியில் அரங்கேறின.









# காண்தகு கவின்பெறு தமிழ் வளர் பள்ளியே மன்னார் கௌரியம்பாள்

கே.எஸ்.சிவஞானராஜா

பாலாவியின்கரையில்சைவத் தமிழ்ப்பண்பாடுமணக்கும் ஒரு பாடசாலையே மன்னார்கௌரியம்பாள் அ.த.க. பாடசாலையாகும். பாடல்பெற்ற திருத்தலமாகவும் புண்ணிய பூமியாகவும் வரந்தரும் பரம்பெருள் பண்ணோடு மண்ணுள் விளைந்தி ருப்பதனாலும் கௌரியம்பாள் பாடசாலை இலங்கையில் ஒரு செய்தியைச் சொல்லத்தொடங்கியுள்ளது. அதுயாதெனில்அங்குஉயர்தரத்தில்கல்வி பயிலும்மாணவர்கள்பல்கலைக்கழகங்களை அலங்கரிக்கத்தொடங்கிவிட்டார்கள். எப்படியென்றால்திருக்கேதீஸ்வரப்பெருமானை கௌரியம்பாள் குழுமம் நாள்தோறும் போற்றுகின்ற காரணத்தாலேயன்றி வேறொன்றுமில.

**நிர்வாகம்**

தரமானஒருஅதிபர்ஒருபாடசாலைக்குவாய்க்குமாகஇருந்தால்அந்தப் பாடசாலை ஆலயமாகவே திகழும். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, அர்ப்பணிப்பு, தியாகம், பொதுநலம், ஆன்மிகம், பராமரிப்பு, பண்பாடு, ஆரோக்கியம், தனியாள்ஆளுமை, கூட்டுப்பொறுப்பு, சமூகப்பொறுப்பு, நாட்டுப்பொறுப்பு ஆகியன சிவன் சொத்து என அதிபரும் ஆசிரியர் குழாமும்பாடசாலைச்சமூகமும்நலன் விரும்பிகளும் அதிகாரிகளும் கருத்தில் கொள்வார்களானால் பாடசாலையில் இறைவன் வந்து கொலுவிருப்பான்.

மன்னாரில் வசதிகள் குறைந்த ஒரு கிராமச் சுவாத்தியத்தில் ஒரு பாடசாலையானது தலைநிமிர்ந்து நிற்கிறதென்றால் அது நிர்வாகத்தின் அர்ப்பணிப்பேயாகும். இந்தப் பாடசாலையின் அதிபராக தமிழில் நன்கு புலமையுள்ள கா.சசிதரன் என்பவர் மிகவும் அர்ப்பணிப்புடன் கடமையாற்றுகின்றார். ஆசிரியகுழாமும்அவருக்குபூரணஒத்துழைப்புநல்குவதை உணர முடிந்தது. பாடசாலை பற்றிய சகல தரவுகளையும் அதிபரானவர்தனதுமூளையில்பதிவிறக்கம்செய்துவைத்திருக்கவேண்டும். இந்த அதிபர் இந்த விடயத்தில் பலே திறமைசாலியே

**ஆசிகள்**

திருக்கேதீஸ்வரம் ஆலயத் தலைமைக் குருவான சிவசிறி தி.கருணானந்தக் குருக்களும் மன்னார் வலயக்கல்வி பணிப்பாளர் செ.சு.செபஸ்ரியனும், கோட்டக்கல்விப்பணிப்பாளர்து.கிறிஸ்ரிராஜாவும்மனிதநேய மாமணி அ.கைலாயப்பிள்ளையும் மற்றும் அம்மை அப்பர்மட பரிபாலகரும் நிறுவுனரும் மன்னார் சமூகமும் இந்தப் பாடசாலையின் கண் அதீதஅக்கறையும்மனம்கொண்டஆசியும்நிறைந்ததினால்கௌரியம்பாள் பாடசாலையிலிருந்து பல்கலைக் கழக வாசல் இலகுவாகவும் எளிமையாகவும் தெரிந்தது, தெரிகிறது, தெரியும்.

**பெறுபேறு**

இந்தப்பாடசாலையில்இருந்து2015ஆம்ஆண்டுஉயர்தரப்பரீட்சையில் 10மாணவர்களில்07மாணவர்கள்பல்கலைக்கழகம்சென்றுபெருஞ் சாதனை படைத்தனர். 2016 புலமைப்பரீட்சையில் ஒருவர் சித்தி பெற்றுள்ளார். நடப்புவருடத்துக்கானவடமாகாணத்தடகளத்தொடரில்இந்தப் பாடசாலை மாணவி ஒருவர் பதக்கம் வென்றிருந்தார்.

**சாதனை**

16ஆசிரியகுழாமின்தன்னலமற்ற சேவையால் கௌரியம்பாள் அ.த.க. பாடசாலை மன்னாரில் மட்டுமல்லதேசியமட்டத்திலும்சாதனை புரியும் எனத்திடமாக நம்பலாம். சகல துறைகளிலும் வெல்வதாக.

> தரமான ஒரு அதிபர் ஒரு பாடசாலைக்கு வாய்க்குமாக இருந்தால் அந்தப் பாடசாலை ஆலயமாகவே திகழும். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, அர்ப்பணிப்பு, தியாகம், பொதுநலம், ஆன்மிகம், பராமரிப்பு, பண்பாடு, ஆரோக்கியம், தனியாள் ஆளுமை, கூட்டுப்பொறுப்பு, சமூகப்பொறுப்பு ஆகியன சிவன் சொத்து என அதிபரும் ஆசிரியர் குழாமும் பாடசாலைச் சமூகமும் நலன் விரும்பிகளும் அதிகாரிகளும் கருத்தில் கொள்வார்களானால் பாடசாலையில் இறைவன் வந்து கொலுவிருப்பான்.

## நூல் வெளியீட்டு விழா





சட்டத்தரணி இப்ராஹிம் எழுதிய 'இப்ராஹிமின் இலட்சியக் கனவுகள்' எனும் நூல் வெளியீட்டு விழா கிண்ணியா முன்னோடிகள் கலை இலக்கிய வட்டத்தின் ஏற்பாட்டில் கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

# தமிழ் பழமொழிகளும் விளக்கமும்

*பல நல்ல தமிழ் பழமொழிகளுக்கு நாம் தவறான அர்த்தம் கொண்டுள்ளோம். நாம் பிழைகளை திருத்தி கொண்டு மற்றவர்களுக்கும் தமிழ் பழமொழிகளின் பெருமையை உணர்த்துவோம்.*

**"கல்லைக் கண்டால் நாயைக் காணோம்! நாயைக் கண்டால் கல்லைக் காணோம்!"**

**அறிந்தது:** நாயை பார்த்தால் கையில் கல் இல்லை. அதே கையில் கல் இருந்தால் நாயைக் காணோம்!

**அறியாதது:** "கல்லைக் கண்டால் நாயகனைக் காணோம், நாயகனைக் கண்டால் கல்லைக்காணோம்". என்பது தான் உண்மையான பழமொழி. இங்கு நாயகன் என்பது கடவுள். இதன் பொருள் கல்லால் ஆன ஒரு இறைவன் சிலையை பார்க்கும் போது, அதை கல்லாகப் பார்த்தால் அங்கே கடவுள் இல்லை, கடவுளாக பார்த்தால் கல் இல்லை.

**"வர வர மாமியார் கழுதை போல் ஆனாள்!"**

**அறிந்தது:**
வர வர மாமியார் கழுதை போல ஆனார்.

**அறியாதது:** இந்த பழமொழியில் கயிதை என்பது காலப்போக்கில் மாறி கழுதை என்று ஆகி விட்டது. கயிதை என்றால் ஊமத்தம் பூச்செடியில் உள்ள காய்.(ஊமத்தங்காய்). இதில் ஊமத்தம்பூ பூத்து நாளடைவில் விஷத் தன்மை கொண்டதாக அதாவது ஊமத்தங்காய் ஆக மாறுவதையே அப்படி சொல்கிறோம்.

**"களவும் கற்று மற"**

**அறிந்தது:** திருடுவதை கற்று கொண்டு பின்னர் மறந்து விட வேண்டும்.

**அறியாதது:** இந்த பழமொழியில் "கற்று" என்பது "கத்து" என்று வர வேண்டும். கத்து என்றால் பொய் என்று அர்த்தம். களவு என்றால் திருட்டு. திருட்டையும் பொய்யையும் மறக்க வேண்டும்.

**"ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம் செய்யலாம்"**

**அறிந்தது:** ஒரு கல்யாணத்தை நடத்த ஆயிரம் பொய்களை சொல்லலாம்.

**அறியாதது:** திருமணத்தின் போது ஆயிரம் முறையாவது போய் (சென்று) சொல்லி புரிய வைத்து திருமணத்தை நடத்த வேண்டும். 'போய்' என்பது பேச்சு வழக்கில் 'பொய்' என்று மாறி விட்டது.

**அடி உதவுவது போல அண்ணன் தம்பி உதவ மாட்டார்கள்.**

**அறிந்தது:** அடித்தால்தான் காரியம் நடக்கும்.

**அறியாதது:** இதில் அடி என்பது இறைவனின் அடி ஆகும். இறைவனின் அடி எமக்கு உதவுவது போல வேறு யாரும் உதவ மாட்டார்கள்.


**பந்திக்கு முந்து..படைக்கு பிந்து...**

**அறிந்தது :** விருந்தில் பந்திக்கு முதலில் செல்ல வேண்டும். சண்டை என்றால் பின் வாங்க வேண்டும்.

**அறியாதது:** உண்ணும் பொழுது கை முன் செல்கிறது. அதே போரில் சண்டையிடும் போது முதுகில் உள்ள ஆயுதங்களை எடுக்க கை பின்னால் செல்கிறது. இதுவே அர்த்தம்.



அறிவார்ந்த சமுதாயத்தை கட்டமைப்பதற்கான சிந்தனைச் சுவாத்தியம்



# இலக்கியங்களை இலட்சியமாய் நேசிப்போம்

அன்ரனி பீற்றர்

இலக்கியம் குறித்து பலவகையான கருத்துக்களை மேலைத்தேய தமிழ் ஆய்வு அறிஞர்கள் முன்வைத்துள்ளனர். அவற்றின் ஒட்டுமொத்த சாராம்சத்தையும் எடுத்து நோக்கின், ஒரு இனம் சார்ந்து கட்டமைவு பெறுகின்ற மொழி, பண்பாடு, கலை, கலாசாரம், தொழில்கள், வாழ்க்கை முறை என்பன அவ்வினம் தனித்துவமாகச் சேமித்துக் கொள்கின்ற கட்டுறுதிகள். என்றும் நீங்காத பற்றுறுதிகள். அந்தவகையிலே இவை பற்றியதான வரலாற்றுப் பார்வையை பிரதிபலிக்கும் காலத்தின் கண்ணாடியாக இலக்கியங்கள் முதன் நிலை பெறுகின்றன. இந்த இலக்கியங்கள் ஆரம்பகாலத்தில் வாய்மொழி மூலமாக மரபுவழிச் சந்ததிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டு வந்தன. இலக்கியம் என்ற வரையறை அறியப்படாமல், கதை கூறுதல்கள் ஊடாக இவை அனைத்தும் பரிமாறப்பட்டு வந்துள்ளதை நாம் அறியலாம். பிற்பட்ட காலங்களில் உள்வாங்கப்பட்ட மாற்றங்களால் இவை எழுத்துருவாகி நூலுருப் பெற்றன. இலக்கியம் என்ற வரையறைக்குள் இயல்பாகவே உள்ளீர்க்கப்பட்டன என்பதை இந்த நூல்கள் மூலமாகவே நாம் அறிந்துகொள்ள முடிகிறது.

**தமிழ் மொழி கொண்ட இலக்கியச் சிறப்பு**

ஆக, எம் தாய் மொழியாம் தமிழ் மொழியில் தனித்துவம் கொள்ளப்படும் இலக்கியங்கள் அத்தனையும், எம் இனம் சார்ந்த வரலாற்று அடிப்படையான வாழ்வியல் செயற்பாடுகளை திறம்பட வெளிப்படுத்தியுள்ளன. குறிப்பாக, காதல், வீர, அகப்புற இலக்கியங்களாக அவற்றை தொன்மைப்புலமைசார் கவிஞர்களும், புலவர்களும் தந்துள்ளனர். இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இதுபற்றி தேவநேய பாவாணர் கூறும்போது, "இலக்கியச்செம்மை, இலக்கணவரம்பு, பழமைமற்றும்நிறைந்த அழிந்திடாத சொல்வளம்மிகுந்து என்றும் கன்னியாக விளங்குவது தமிழ் மொழியே" என்று சுட்டுகிறார். இக் கருத்து தமிழ் மொழியின் சிறப்பையும், அதன் உயர்வையும் எடுத்துக் காட்டுகிறது. இலக்கியத்தை நேசிக்கும் சமுதாயம் ஆரம்பகாலத்தில் குறைவாக இருந்த போதிலும், இலக்கியங்கள் ஊடாகச் சமுதாயத்தை நேசித்தவர்கள் பலர் இருந்திருக்கிறார்கள். அவர்கள் இயற்றிஎழுதி ஆக்கியநூல்களே இதற்குச்சான்றுபகர்கின்றன.

**இலக்கியம் சார்ந்த அறிவு விருத்தி**

இலக்கியத்தை நேசிக்கும் சமுதாயத்தை முன்னிலைப்படுத்த வேண்டும்என நாம்சிந்திக்கின்ற போது, அறிவார்ந்தசமுதாயம் முன்னிலை பெற வேண்டும். அதன் மூலம் எமதான சமுதாயம் கீழ்நிலை நின்று உய்வு கொண்டு நிமிர்வு பெற வேண்டும்.



அறிவிலும், அபிவிருத்தியிலும், பண்பிலும், மேன்மையிலும் சிறப்புற்று விளங்கிட இடைவிடாது முயற்சிக்கவும், உழைக்கவும் வேண்டும். செங்கோல்தரித்த மன்னன், மக்களுக்காய் மக்களை ஆட்சி செய்வது போல, எழுதுகோல் எடுக்கும் எழுத்தாளன் மக்களுக்காக தன் அறிவு எனும் ஆட்சியை நூல்களாய் பிரசவித்து நற்சிந்தனை அதிகாரம் செய்து மனநிறைவில் முழுமை காண்கிறான்.

உண்மையில் சொல்லும் பொருளும் சுகமானால், அச்சொல் மற்றவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு உலகத்தையும் வெல்லும் என்பது யதார்த்தமானது. நவீன தொழில்நுட்பவளர்ச்சியின் தாரக மந்திரமாக அறிவியல் தேடல்களும் அதனால் ஏற்பட்ட வளர்ச்சியும் முன்னிலைபெற்று நிற்கின்றன. பொருளாதார அதிகாரம் கொண்டு முதன்மை இடத்தினைப் பெற்றிட வளர்ச்சி பெற்ற நாடுகளுக்கு உதவி புரிந்துள்ளன. மொழியறிவின் இலக்கியம்சார் வளர்ச்சியே இந்த நாடுகளை முன்னிலைப் படுத்தியுள்ளது எனலாம்.

எமைக்கடந்துபோன ஐந்து அல்லது ஆறு தசாப்தகாலங்களுக்கு முன்பாக கல்வி அறிவிலும், உயர் மட்ட நிர்வாக ஆளுமைத் திறனிலும் தமிழ்சமூகம் முதன்மை பெற்று விளங்கியது. ஆனாலும் போருக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் நவீன தொழில்நுட்ப சாதனங்களின் வருகை அதிகரித்துவிட்ட காரண காரியம் கொண்டு, இலக்கியம் சார் அறிவு விருத்தியில் நாம் பின் தள்ளப்பட்டுள்ளோம். இது குறித்து எவரும் மாற்றுக் கருத்துகளை கூறிவிட முடியாது. மாணவர்களிடமும் இளையவர்களிடமும் அறிவு சார் தேடல்கள் அருமைத் தன்மையை அடைந்துள்ளன. வாசிப்பு, மொழியறிவு வளர்ச்சி என்பன கணிசமான அளவுக்கு குறைவடைந்துள்ளது. பல்வேறுபட்ட சமூகப் பிறழ்வுகளை தமிழ் சமுதாயம் கண்டிருக்கக் காரணம் இதுவே.

**அறிவு விருத்தியில் நூல் பெறும் க(உ)ரு**

"ஒரு புத்தகம் ஒரு பாடசாலைக்கு சமமானது. அறிவூட்டும் ஆசிரியருக்கு இணையானது. விரிவுரைகள், பட்டிமன்றங்கள், விவாத அரங்குகள், சொற்பொழிவுகள் போன்றவற்றில் கலந்துகொண்டு கேண்மையை விருத்தி செய்வதன் ஊடே பயனடைந்தாலும், நல்ல புத்தகங்கள் தரும் அறிவு அளப்பரியது. குறிப்பாக வாசிக்கும்போது ஆழ்ந்த, பரந்த, பயனுடைய கருத்துக்களை மேலும் விபரமாக அறியவும், அவை பசுமரத்தாணி போல் மனதில் பதிந்திடவும் புத்தகங்கள் பெரிதும் எமக்குத் துணை புரிகின்றன" என சாமுவேல் ஜோன்சன் என்ற ஆங்கில அறிஞன் கருத்துரைக்கிறான். இக் கருத்தின் மூலம் அறிவுசார் புலமையை மக்களுக்குக் கொடுப்பதில் நூல்கள் எத்தகைய பங்காற்றுகின்றன என்பதை நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது. நூல் வாசிப்பால் வாசிப்பவரும், அவரால் இன்னும் பலரும் அறிவின் கருக் கொண்டு நல் உயிர்ப்பினைப் பெறுகின்றனர்.

இலக்கியம் என்னும் போது, அது கடந்த காலத்தை விளக்குவதாகவும், நிகழ்காலத்தைப் பிரதிபலிப்பதாகவும், எதிர்காலத்தை உருவகித்து உருவாக்குவதாகவும் அமைய வேண்டும். அவ்வகை இலக்கியங்களையே மக்கள் விரும்பிப் படிப்பர்.

"கதை சொல்லிகள் இல்லாமல் போயிருந்தால் கடந்துபோன காலங்களின் வரலாறு எமக்குத் தெரியாமலேயே போயிருக்கும். புத்தகங்கள் இல்லையென்றால், நிகழ்காலங்கள் கூட இறந்தகாலங்கள் ஆகிவிடும்" – என்று அங்கிலக் கவிஞன் ஜோன் மில்ரன் கூறுகிறார்.

இயந்திரத்தனமான கால ஓட்டத்தில் இலக்கியத்தை அறிந்துகொள்ள விரும்பாத, அறிவின் சுமூகமற்ற சமூகமாக மாற்றமுறும் நுகர்வுச் சமுதாயத்திலே, இலக்கியத்தை நேசிக்கும் சமுதாயத்தை முன்னிலைப்படுத்த வேண்டியது, அறிவு கொண்ட ஆளுமைகள் ஒவ்வொருவரினதும் கடமையாகும். இதனை புரிந்து கொள்ள வேண்டும். அதன் வழி கடமையாற்ற வேண்டும்.

**எழுத்தாளர்களின் பங்கு**

இலக்கியத்தை நேசிக்கும் சமுதாயத்தை முன்னிலைப்படுத்துவோம் என்பது, வாசித்துவிட்டு வாழா விருக்கும் சமுதாயத்தைக் குறிப்பதானதல்ல. அறிவுத்தேடலாலும், நல்லபடைப்புகளாலும் சாதனை படைப்போரை வாழும் சமுதாயமும், வரவிருக்கும் சமுதாயமும் அறிந்து கொண்டு புது வரலாறு படைக்க பணிசெய்திட அனைவரும் முன்வர வேண்டும். எழுத்தாளர்கள், இலக்கியகர்த்தாக்கள், வெளியீட்டாளர்கள் என அத்தனைபேரும் விழிப்புணர்வு பெற்றுசெயலாற்ற வேண்டும். முற்காலத்திலே போரிலே வெற்றி கொண்டு வந்தவனை சான்றோன் எனக் கேட்டதாய் பெருமை கொண்டது போல, அறிவுடைய சான்றோர்களை உருவாக்கி பெற்றோர்கள் பெருமை கொள்ள வேண்டும்.

எழுதும் கைகள் இருக்கும் வரை இலக்கியங்கள் சாவதில்லை. இலக்கியங்கள் இருக்கும் வரை இனத்தின் அழிவு நடப்பதில்லை.

சமுதாயத்தை நேசிக்க, சாதனைகளை நூல்களாக்குவோம். அறிவுத் தேடலாலும், அறிவார்ந்த படைப்புகளாலும் சமுதாயத்தை எழுச்சி பெறச் செய்வோம். இலக்கியங்கள் மூலம் பெற்றுக்கொள்ளும் அறிவினால் எதிர்காலத்தின் சவால்களை எதிர்கொள்வோம். மன உறுதியுடன் முன்னேற்றப் பாதைகளில் எழில்நடை பயில நல்ல செயற்றிட்டங்களை முன்னெடுப்போம். சாதனைகளால் வேதனைகளை வென்று தமிழ் சமூக எழுச்சியாய் முன்னிலை பெறுவோம். இடைவிடாது முயற்சியைத் தொடர்வோம்.

## செந்தமிழ் எங்கள் உயிர் மொழி



அன்போடு அறம் காத்த அருந்தமிழ்
அறிவோடு மொழிகாத்த பெருந்தமிழ்
அச்சமென்பதில்லை என ஓங்கி ஒலித்திடும்
அந்நியரும் விரும்பிக்கற்றிட்ட
அருமைத் தமிழ்

கம்பரும் கண்ணதாசனும்
கவி மழை பொழிந்த கவின் தமிழ்
பாரதியும் பாரதிதாசனும்
புரட்சிசெய்த புதுமைத் தமிழ்
அந்நியர் அழிக்க நினைத்த பைந்தமிழ்
ஆறுமுக நாவலர் புத்துயிர் கொடுத்த அழியாத் தமிழ்

விபுலானந்தரையும் முத்தமிழ்
வித்தகராக்கிய செந்தமிழ்
பண்டுதொட்டு இன்று வரை
பண்புகள் மாறிடாத பழந்தமிழ்
கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து
முன்தோன்றிய மூத்த தமிழ்
மூவேந்தரும் முடிசூடி ஆண்ட முத்தமிழ்

இன்று வெள்ளைக்காரன் நாட்டிலே
எம்மவர் எல்லாம் பேசவெட்கும் தமிழ்
தாய் மொழியாம் தமிழ் மொழியை வெட்குவது ஏன்
தமிழ் எங்கள் மூச்சு அதுவே எங்கள் பேச்சு

கே. கரன்சிகா
கிளி இராமநாதபுரம் ம.வி.



# வினைகள் தீர்க்கும் சூரியபகவான்

நவக்கிரங்களில் முதலாவது கிரகம் சூரியன். மனித உடலில் மூளைக்கும் எலும்புக்கும் அதிபதியாக விளங்கும் தன்மையுள்ள கிரகம் சூரியன் . சூரிய கிரகத்தின் ஆதிக்கத்துக்கு உட்பட்டவர்களிடம் தைரியம், வீரியம், ஆத்ம பலம், விசுவாசம் ஆகிய குணங்களைப் பார்க்கலாம். அதே நேரம் பித்தம் தொடர்பான வியாதிகளையும், உஷ்ணம் சம்பந்தமான வியாதிகளையும் ஏற்படுத்துகிறார் சூரிய பகவான்.

**சூரிய பகவானின் புராண பின்னணி**

சூரிய பகவான் ஓம் என்ற ஓசையில் இருந்து தோன்றினார் என்கிறது மார்க்கண்டேய புராணம்.

காசியப்பருக்கும் அதிதிக்கும் பிறந்த விசுவவான் முதலிய பன்னிரண்டு புத்திரர்களே பன்னிரு சூரியர்கள் ஆனார்கள் என்கிறது பாரதம்.

சூரிய பகவான் பயன்படுத்தும் தேர் ஒரே ஒரு சக்கரம் கொண்டது. இந்தத் தேரை ஏழு குதிரைகள் இழுக்கின்றன. இந்த ஏழு குதிரைகளும் ஏழு நிறங்களில் அமைந்துள்ளன. சூரியனின் தேரை ஓட்டும் சாரதிக்கு அருணன் என்று பெயர். மாற்றுத் திறனாளியான அருணனுக்கு கால் ஊனம். சூரியனின் தேர் மேற்கு முகமாக ஓடி மேருமலையை வலமாகச் சுற்றுகிறது. சூரியனுக்கு உஷாதேவி, பிரத்யுஷாதேவி என்று இரு மனைவிகள். எமன், சனி, அசுவினித் தேவர், சுக்கிரீவன், கர்ணன் என்போர் மகன்கள். யமுனை, பத்திரை இவர்கள் இருவரும் சூரியனின் மகள்கள்.

பாபக் கிரகமான சூரியன் ஒவ்வொரு ராசியிலும் சுற்றி வர ஒரு மாத காலம் ஆகிறது. இப்படி சூரியன் பன்னிரண்டு ராசிகளில் பன்னிரண்டு மாதங்கள் சுற்றி வருகிறார்.

சித்திரை மாதத்தில் மேட ராசியில் உச்சம் பெறும் சூரியன்,வைகாசி மாதத்தில் இடப ராசியில் பகை பெறுகிறார். ஆனி மா்தத்தில் மிதுன ராசியில் சம பலம் பெறுகிறார். ஆடி மாதத்தில் கடக ராசியில் நட்பு பெறுகிறார். ஆவணி மாதத்தில் சிம்ம ராசியில் ஆட்சி பெறுகிறார். புரட்டாசி மாதத்தில் கன்னி ராசியில் சம பலம் பெறுகிறார். அவர்



ஐப்பசி மாதத்தில் துலாம் ராசியில் நீசமடைகிறார்.கார்த்திகை மாதத்தில் விருச்சிக ராசியில் நட்புப் பெறுகிறார். மார்கழி மாதத்தில் தனுசு ராசியில் நட்புப் பெறுகிறார். தை மாதத்தில் மகர ராசியில் பகை பெறுகிறார். மாசி மாதத்தில் கும்ப ராசியில் பகை பெறுகிறார். பங்குனி மாதத்தில் மீன ராசியில் நட்புப் பெறுகிறார். சூரிய பகவான் நவநாயகர்களிலே தலைவர், சுபக்கிரகர். மூவகை நாடிகளிலே பிங்கலை நாடியாகவும், மூவகைக் குணங்களிலே சாத்வீக குணமாகவும், இருப்பவர்.

சிவனது முக்கண்களிலே வலக் கண்ணாக இருக்கும் சூரியன், ஒருவருக்கு புகழ், மங்களம், உடல் நலம், ஆட்சித்திறம், சொல்வாக்கு என பல நன்மைகளை வழங்குகிறார்.

சிவப்பு மலர்களால் அர்ச்சிப்பதாலும், சிவப்பு வஸ்திரம் உடுத்திக் கொள்வதாலும், மாணிக்க மணியை அணிந்து கொள்வதாலும், ஞாயிற்றுக்கிழமை விரதம் இருப்பதாலும், கோதுமை தானியத்தைத் தானம் செய்வ தாலும், சூரிய நமஸ்காரம் செய்து வருவதாலும் சூரியனால் ஏற்படும் கிரக தோஷங்கள் நீங்குகிறது.

சூரிய பகவானை ஞாயிற்றுகிழமை உதய காலத்தில், கோதுமை பலகாரம், காரம் கலந்த சாதம் ஆகியவற்றை செந்தாமரை இலையில் படைத்து வழிபடுதல் சிறப்பு.






கிழக்கு மாகாண ஆளுனர் ரோகித போகல்லா கமவின் வேண்டுகோளுக்கு இணங்க சீனக் கலாசார மத்திய நிலையத்தால் பல் இசைக்கருவிகளின் சங்கமம் திருகோணமலைவிவேகானந்தாக்கல்லூரியின் கேட்போர் கூடத்தில் கடந்த வாரம் இடம்பெற்றது. இலங்கை மற்றும் சீனாவின் நட்புறவை மையமாகக் கொண்டு ஆண்டு தோறும் கொழும்பில் நடாத்தப்படும் இந்த இசை நிகழ்ச்சி இம்முறை கிழக்கு மாகாணத்தில் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## வரலாற்றில் இன்றைய தினம் 15.11.2017

1791 - அமெரிக்காவின் முதலாவது கத்தோலிக்கப் பல்கலைக்கழகம் திறந்து வைக்கப்பட்டது.

1922 - ஈக்குவேடரில் பொது வேலை நிறுத்தத்தின்போது ஆயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

1933 - தாய்லாந்தில் முதற் தடவையாகத் தேர்தல் நடைபெற்றது.

1988 - பலஸ்தீனிய தேசிய சபையால் பலஸ்தீனம் சுதந்திரம் பெற்றது என அறிவிக்கப்பட்டது.

1996 - ஆயுதத்தைக் கைவிட்டு விடுதலைப் புலிகளைப் பேச்சுக்கு அழைக்குமாறு பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா கோரிக்கை

1996 - வடக்கு, கிழக்கு இணைப்பு சிறந்த தீர்வாக அமையும் என அமைச்சர் இந்திக குணவர்த்தன தெரிவிப்பு.

2000 - இந்தியாவில் ஜார்க்கண்ட் மாநிலம் உருவானது.

2006 - அல் ஜசீரா ஊடகம் ஆங்கில சேவையை ஆரம்பித்தது

2016 - 2 ஆயிரத்து 500 ஆண்டுகள் பழமையான மம்மி எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்டது.



**2007 -** பங்களாதேஷைத் தாக்கிய புயலால் சுமார் 5 ஆயிரம் பேர் வரை உயிரிழந்தனர்.

## நாளை

**16.11.2017**

வியாழக்கிழமை

**ஐப்பசி 30**

திதி: திரயோதசி பி.ப.03.21 வரை
நட்சத்திரம்: சித்திரை பி.ப. 04.49 வரை
சுபநேரம்: 07.37–09.07 வரை
ராகுகாலம்: 01.37–03.07 வரை



# நுண்ணுணர் திறன்

## பறவைகள் கொண்டுள்ள தனித்துவம்



இயற்கைப்பேரழிவுகள்இடம்பெறப்போவதை முன்கூட்டியே விலங்குகள் உணர்ந்து கொள்கின்றன என்ற தகவலை அமெரிக்க ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

தொலைதூரம் பறந்துசெல்லும் பறவைகள் குறித்து ஆய்வினை மேற்கொண்டிருந்த அமெரிக்க ஆய்வாளர்கள், இந்த முடிவை அறிவித்திருக்கிறார்கள். 'கரண்ட் பயாலஜி' என்கின்ற விஞ்ஞானச் சஞ்சிகையில் இந்த ஆய்வு முடிவுகள் வெளியாகியுள்ளன.

"கடந்த 2014ஆம் ஆண்டு ஏப்ரல்மாத காலப் பகுதியில் தென்னஸ்ஸி பிரதேசத்தில் தாங்கள் முட்டையிட்டு குஞ்சுபொரிக்கும் கூடுகளில் இருந்து ஒரே சமயத்தில் வெளிப்பட்ட சின்னஞ்சிறிய பாடும் பறவையினங்களில் ஒன்றான 'பொன்னிறப் பறவைகள்' அந்த பகுதியை விட்டு அண்ணளவாக 700 கிலோமீற்றர் தூரம் பறந்து சென்று மெக்ஸிகோவை அடைந்தன. அவை அங்கிருந்து புறப்பட்ட சில நாள்களில் தென்னஸி பிரதேசத்தை மோசமான சூறாவளி தாக்கியது. அங்கு அனைத்து விடயங்களும்சுமூகமானதும் இந்தப் பறவைகள் மீண்டும் தங்களின் இருப்பிடம் நோக்கி வந்தன.

தவிர, இந்தப் பறவைகள் அனைத்தும் கொலம்பியாவில் இருந்து அண்ணளவாக 5 ஆயிரம் கிலோமீற்றர் பறந்து வந்து, சூறாவளி வீசுவதற்கு முன்பான நாளில் தான் தென்னஸி பிரதேசத்தில்முட்டையிடுவதற்கான கூடு கட்டும் பணியை ஆரம்பித்திருந்தன. ஆனாலும் மிகத் தெலைவானதூரம் பறந்து வந்திருந்தகளைப்பையும் மீறி, வரவிருக்கும் ஆபத்தை

(27ஆம் பக்கம் பார்க்க)

**மேற்பார்வையாளர் தேவை**

புங்குடுதீவு அரியநாயகன்புலம் வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கு நிரந்தரமேற்பார்வையாளர் தேவை. விரும்பியோர் தொடர்பு கொள்ளவும்.
(சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்)
**076 803 5067**
தலைவர்.

**கிழக்கு கோண்டாவில் ஐயப்பன் தேவஸ்தானத்தில் மாலையணிந்த சாமிமார்கள் 60 நாளும் தங்குவதற்கு இடவசதியுண்டு பஜனைகள் நடைபெறும்**

சுன்னாகம் கிழக்கு 54/4 என்ற இலக்கமுடைய மாலையணிந்த சாமி வீட்டில் குளியலறை, மலசலகூடங்களுடன் சொந்த வீட்டில் 60 நாளும் தங்குவதற்கு இடவசதி செய்யப்பட்டுள்ளது.
சகல மாவட்ட சாமிமார் மட்டும்.

**வயது 17 தொடக்கம் 25 வயது வரையான சாமிமார் ஆண்கள் மட்டும்.**

**ஜெட்மோட்டஸ்,**
**மயிலணி பாடசாலை வீதி, சுன்னாகம்.**
**021 561 3336**

**ஒரு எண்ணெய்! ஆரோக்கியமான பல நன்மைகள்!!!**

- ✓ முடி உதிர்வு, பொடுகுத் தொல்லையா?
- ✓ கருமையான நீண்ட கூந்தல் வேண்டுமா?
- ✓ முகத்தில் கரும்புள்ளி, கருவளையமா?
- ✓ முகப்பருவா?
- ✓ தோல் சுருக்கமா?
- ✓ உதடு, குதிக்கால் வெடிப்பா?
- ✓ உடற்பருமன், Cholesterol Blood Sugar இதய நோய் பிரச்சினையா?

இன்றே பாவியுங்கள்!!!

**"றோயல் ஓர்கானிக் வேர்ஜின் தேங்காய் எண்ணெய்"**

- 100% Natural
- Cold Pressed
- No Refining
- No Bleaching

Re- Packed By: Royal Industry Colombo - 13

சந்தைப்படுத்துவோர்
**சிவா நறுமணப் பூங்கா**
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
021 222 2567

**Jaffna Casa**
Ac, Non Ac Rooms
Hotel & Restaurant



உங்கள் விடுமுறை நாட்களை இனிமையாகக் கழித்திட சண்டிலிப்பாயில் புதியதோர் உதயம் Jafna Casa விருந்தினர் விடுதி உங்களை வரவேற்கிறது.

Seerani Junction (front D.S. Office) Sandilipay,
T.P : 021 225 5140 , 077 160 4059 , 078 303 5408

**அவசர சேவை**

T.O ஒருவர் தங்கி இருப்பதற்கு நகரத்தில் இருந்து 2km இற்குள் றூம் அல்லது அனெக்ஸ் சிறிய வீடு தேவை.
**077 639 9034**

**தேவை**

பாவித்த நல்ல நிலையில் உள்ள யூஸ் பொதியிடும் இயந்திரம் தேவை.
**077 334 7025**

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**






அதிபர் திரு.த.அருமைநாயகம் (SLPS - I)
ஆசிரியர் திரு.ப.பிரதீபன்
ஆசிரியர் திருமதி சு.ஜெயகரன்
ஆசிரியர் செல்வி சௌ.சங்கீதா

வடமாகாண கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட **"குரு பிரதீபா பிரபா"** விருதைப் பெற்ற எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:- **ஆசிரியர் நலன்புரி சங்கம்**
**மு/ பாண்டியன்குளம் மகாவித்தியாலயம்.**

**வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம்**

எமது நண்பன்
**திரு. பஞ்சாட்சரம் கணேசன்**
[ B.Com(Spl), PGDE(Distinction), PGD.in.Pub.Admn, M.Edu, PGDEM (Merit), SLPS ]



அவர்கள் மீப்பே கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ நிறுவனத்தின் பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா (PGDEM) பரீட்சையில் அதிதகைமைபேண் சித்தி (MERIT PASS)பெற்றமையையிட்டு அவரை வாழ்த்துவதில் பெருமையடைகின்றோம். தங்கள் வாழ்வும் வளமும் சிறக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**நண்பர்கள்.**

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



மு/ கோட்டைகட்டியகுளம் அ.த.க. பாடசாலையின் ஆசிரியையான
**திருமதி சுரேகலா விஜயதீபன்**
அவர்கள் 2017ஆம் ஆண்டு நல்லாசிரியருக்கான **"குரு பிரதீபா பிரபா"** விருதினை **23.10.2017** அன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மண்டபத்தில் பெற்றமையையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் அவர் மேலும் பல பட்டங்களைப் பெறவும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:-**
**அதிபர், ஆசிரியர்கள்**
**மு/கோட்டைகட்டிய குளம் அ.த.க.பாடசாலை**

**PEOPLE'S BANK**

**தங்க நகை ஏலவிற்பனை அறிவித்தல்**

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 15.10.2016 வரையும் அடகு வைத்து மீட்கப்படாத நகைகள், - 09.12.2017 (சனிக்கிழமை), 10.12.2017 (ஞாயிற்றுக் கிழமை) ஆகிய தினங்களில் காலை 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதி கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | நகை மீளெடுப்பதற்கான இறுதி திகதி | ஏல விற்பனை நடைபெறும் இடமும் திகதியும் |
|---|---|---|---|
| யாழ் ஸ்ரான்லி வீதி | கொக்குவில் (நாவலர் வீதி) | 08.12.2017 | 09.12.2017 (சனிக்கிழமை) 10.12.2017 (ஞாயிற்றுக்கிழமை) யாழ். ஸ்ரான்லி வீதி, கிளை |
| | மானிப்பாய் | | |
| காங்கேசன்துறை | மல்லாகம் | | |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் | | |
| ஊர்காவற்றுறை | --- | | |
| நெல்லியடி | --- | | |
| அச்சுவேலி | புத்தூர் | | |
| சங்கானை | பண்டத்தரிப்பு | | |
| சுன்னாகம் | கோப்பாய் | | |
| | அளவெட்டி | | |
| சாவகச்சேரி | கைதடி | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | | |
| | கல்வியங்காடு | | |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் | | |
| பருத்தித்துறை | புலோலி | | |
| கொடிகாமம் | --- | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத் தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி,**
**பிராந்திய தலைமையகம்,**
**கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**தொ.பே.இல : 021 222 2601 / 021 222 8602**
**தொலை நகல் : 021 222 2602**

முதியோரை இணைத்துக்கொள்ளல்
**தங்கம்மா முதியோர் இல்லம்**
**இல.01, புதுக்குளம் வீதி, கனகராயன்குளம்**

மேற்படி புதிதாகத் தொடங்கப்பட்ட முதியோர் இல்லத்துக்கு முதியோர்களைச் சேர்த்துக் கொள்ளல் தொடர்பானது.

**தகுதி:-**
1. 65 வயதுக்கு மேற்பட்டவராக இருக்க வேண்டும்.
2. யாவராலும் கைவிடப்பட்டவராக இருக்க வேண்டும்.
3. உடல் ஊனமுற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. எந்தவித பொருளாதார வசதியும் அற்றவராக இருத்தல் வேண்டும்.
5. படுக்கையில் உள்ளவர்களைத் தற்போது அனுமதிக்க முடியாது.
6. ஆண்/ பெண் இருபாலாரும் இணைந்து கொள்ளலாம்.

**இலவச சேவைகள் :-** நவீன வசதிகள் கொண்ட வதிவிடம் வழங்கப்படும். சைவ உணவுகள் மட்டும் வழங்கப்படும்.

**தலைவர் :-** கலாநிதி மு.குணசிங்கம்

**தொடர்புகளுக்கு :-** 024 493 1455, 077 449 9619, 077 026 1141

ஓம் ஸ்ரீ சாய்ராம்

## 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
17 . 08 . 1949



உதிர்வு
15 . 11 . 2006

திருமதி
### நேசமலர் சின்னத்துரை

திதி : பூர்வபட்ச ஏகாதசி

மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டையை
பிறப்பிடமாகவும் கொழும்பு மட்டக்குளியை
வதிவிடமாகவும் கொண்டவர்

உயிரோடு உயிராகக் கலந்த எங்கள் பாசமிகு அம்மாவே
அன்பும் பண்பும் அறிவும் அனுபவமும் ஒருங்கே அமையப் பெற்ற
வாழ்வில் வழிகாட்டிய அம்மாவே உயர்ந்த சிந்தனை சிரிப்பு புன்முறுவல்
போன்றவற்றால் அனைவரின் உள்ளங்களையும் ஈர்த்தவரே
எத்தனை உறவுகள் எமக்கு இருந்தாலும்
உங்களின் இழப்பு என்றுமே ஈடு செய்ய முடியாது அம்மா.

உங்களின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல கரப்பிரான்
ஆதிவிநாயகர் பெருமானையும்.
ஸ்ரீ வீரம்மா பிடாரி அம்மனையும் வேண்டுகின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளோடு
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்
பிள்ளைகள்
021 221 3058

## மரண அறிவித்தல்கள்

### அருளம்பலம் கலியுகவரதன் (நந்தன்)



மண்ணில் 07.06.1968 விண்ணில் 09.11.2017

யாழ்.மண்கும்பான் மேற்கைப் பிறப்பிட மாகவும், பிரான்ஸ் Courbevoie ஐ வதிவிடமாகவும் கொண்ட அருளம்பலம் கலியுகவரதன் 09.11.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மண்கும்பானைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - பூமணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - பார்வதம் தம்பதிகளின் அன்பு மருமகனும், மாலினி (சுதா) யின் அன்புக் கணவரும், கவின், பிரிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 15.11.2017 பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சங்கரப்பிள்ளை குடும்பத்தினர், மச்சான் - ஈசன் குடும்பத்தினர்.
687/6, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்.

### திருமதி ஏஞ்சல் மேரி புனிதராக்கினி டொன்பொஸ்கோ



சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஏஞ்சல் மேரி புனிதராக்கினி டொன்பொஸ்கோ 12.11.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கிறிஸ்ரோப்பர் - மேரி மார்க்கிரட் தம்பதிகளின் அன்பு மகளும் டொன்பொஸ்கோவின் (ஓய்வு பெற்ற நூலகர் யாழ் மாநகரசபை) அன்புத் துணைவியும் காலஞ்சென்ற பசில் சுரேந்திரன் மற்றும் பமிலா லோஜினி(சித்த மருத்துவர்), ஹில்ரன் நரேந்திரன் (என்புமுறிவு சத்திர சிகிச்சை நிபுணர்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற வில்லியம்ராஜா மற்றும் பேரின்பம், திலகம், றஞ்சிதம் (தாதிய உத்தியோகத்தர் யாழ் போதனா வைத்தியசாலை), அருட்சகோதரி மேரி நிரோஷா (அதிபர் புனித மரியாள் கல்லூரி திருகோணமலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தயாளினி(ஆசிரியை சென் பெனடிக்ற் பாடசாலை, நல்லூர்), அருள்நேசதாசன், ஹரீனா ஆகியோரின் மாமியாரும் அன்றியாவின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி நாளை (16.11.2017) வியாழக்கிழமை மாலை 3மணிக்கு சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுக்கப்பட்டு நல்லடக்கத்திற்காக சில்லாலை புனித கதிரை மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


பமிலா பவனம்,
சில்லாலை.

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

021 2051615

# மனிதப் பரிணாமம்

## மரபணுக்களில் இருந்தான வளர்ச்சியின் சங்கதி



பிரித்தானியாவில் நடந்த ஆராய்ச்சியில் தாவரங்களின் மரபணுக்களை பெற்று மனிதர்கள் பரிணாமம் அடைந்திருக்க வாய்ப்புகள் இருப்பதாக முடிவுகள் வெளியாகியுள்ளன. பிரித்தானியாவில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகம் (Cambridge University) கடந்த 2001ஆம் ஆண்டு முதல் மனித இனத்தின் பரிணாம வளர்ச்சிக்கு முக்கிய காரணமான மரபணு குறித்து பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இதில் மனிதர்கள் மரபணுக்களை தனது இனத்திடமிருந்து மட்டும் பரிமாற்றம் செய்துக்கொண்டனரா அல்லது வேறு இனத்திலிருந்தும் மரபணு பரிமாற்றம் நடந்துள்ளதா என தீவிர ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தது.

இந்த ஆராய்ச்சியின் முடிவில் மனித இனமானது தாவரங்கள், நுண்ணிய தாவரங்கள் மற்றும் பூஞ்சைகளின் மரபணுக்களையும் பரிமாற்றம் செய்துகொண்டு பரிணாமம் அடைந்திருக்க வாய்ப்புள்ளதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அண்மையில் வெளியான இந்த ஆராய்ச்சி முடிவுக்கு எதிராக பல விமர்சனங்கள் எழுந்தன. ஆனால் தற்போது 'Horizontal Genetic transfer (HGT)' எனப்படும் கிடைமட்ட மரபணு பரிமாற்றம் என்ற முறையில் தாவரங்களிலிருந்து ஒரு குறிப்பிட்ட பக்டீரியா மூலம் மனித இனத்துக்கு மரபணுப் பரிமாற்றம் நடந்திருக்க வாய்ப்பு இருப்பதாக சில விஞ்ஞானிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர். அதாவது ஏனைய இனங்களைப் போல நேரடியான இனப்பெருக்கம் மூலம் வம்சாவளியை உருவாக்குவது மட்டுமல்லாது, 'HGT' முறையில் தன்னைச் சுற்றி வாழும் தாவரங்கள் உள்ளிட்ட உயிரினங்களின் மரபணுக்களைப் பெற்று மனித இனம் இனப்பெருக்கத்தில் ஈடுபட்டிருக்க வாய்ப்புள்ளதாக ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிக்கின்றன.

மனிதர்களின் மரபணு பரிமாற்றம் குறித்து ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் மருத்துவர் 'அலிஸ்ரெயர் கிறிஸ்ப்' (Dr.Alistair Crisp) கூறுகையில், மரபணு பரிமாற்றத்தின் ஆரம்பக்கட்டம் குறித்து முதன் முதலாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் இந்த ஆராய்ச்சியில் 'HGT' மூலம் விலங்குகள், தாவரங்கள்

(27ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியை
திருமதி ம.வேதநாயகம் அவர்களின் மாமனார்
அமரர்
### மைக்கல் செபஸ்ரியாம்பிள்ளை

12.11.2017 அன்று காலமானார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,
ஆசிரியர் வட்டம்.

## மரண அறிவித்தல்

### திருமதி நீற்றம்மா இம்மானுவல் (ராசாத்தி)



யாழ்ப்பாணம், மாட்டீன் ஒழுங்கையை பிறப்பிடமாகவும், 842, ஆஸ்பத்திரி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நீற்றம்மா இம்மானுவல் 13.11.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜோசப் - மரியம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கனியூட் இம்மானுவலின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தோமஸ் - பொன்றோஸ் தம்பதிகளின் மருமகளும், குயின்ரஸ் ஜீவன் (Nothern Office Automation உரிமையாளர்), சந்திரிக்கா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், மோகனா (ஆசிரியர் - யா/ புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயம்), சத்தியேந்திரன் (லண்டன்) ஆகியோரின் மாமியாரும், திரேசம்மா அமரசிங்கம், மேரி மாக்கிரட் கனகசபை ஆகியோரின் சகோதரியும், வயலற் இம்மானுவலின் மைத்துனியும், வதனி, ராஜன், பபி, லதா, துஸ்யந்தன் (U.S.Hotel உரிமையாளர்), ஜெயாலினி, ரஜனி, ஜெயபவானி, ஜெயமாலினி ஆகியோரின் சிறிய தாயாரும், பிறையன், ரிறோன், கெவின், அறோன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (15.11.2017) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு யாழ்.புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Nothern Office Automation,
Hospital Road, Jaffna.

தகவல்:
குடும்பத்தினர்.

## 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
27 . 05 . 1933



விண்ணில்
15 . 11 . 2004

அமரர்
### அந்தோனிப்பிள்ளை இராயப்பு

"தீங்கு அனைத்திலிருந்தும் அவர் என்னை விடுவித்து
தம் விண்ணரசில் சேர்த்து எனக்கு மீட்பளிப்பார் "
(2 திமொத்தேயு 4: 18)

எம் இல்லத்தின் ஒளிவிளக்காய்
எமக்கெல்லாம் நல்வழிகாட்டியாய்
எம் வாழ்வின் எல்லாச் சூழ்நிலைகளிலும்
எம்மோடு வழிநடந்த நீங்கள்
ஏன் ? நாம் எதிர்பாராத நேரத்தில்
எம்மை விட்டு பிரிந்தீர் தெய்வமே !

இவரின் ஆன்மா இளைப்பாற்றிற்காக இன்று (15.11.2017) புதன்கிழமை காலை 6.00 மணிக்கு மிருசுவில் யோசப் ஆச்சிரமத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரிகள்.

தவசிக்குளம்,
மிருசுவில்.
077 445 0429

## நல்லடக்க வழிபாடும் நன்றி நவிலல் வழிபாடும்



செல்வி சாந்தசீலி (சாந்தி)
### வல்லிபுரம் (நுணாவில்)

(முன்னாள் எழுதுவினைஞர் - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மற்றும் நிர்வாக சபை உறுப்பினர் - நுணாவில் சி.ஏ.சி.எம் திருச்சபை)

கர்த்தருக்குள் நித்திரையடைந்த செல்வி.சாந்தசீலி வல்லிபுரம் (சாந்தி) அவர்களது நல்லடக்க வழிபாடு இன்று (15.11.2017) புதன்கிழமை இந்தியாவில் நடை பெறவுள்ளது. அத்துடன் அன்னாரது விசுவாச வாழ்வுக்கும். இறைபணிக்கும் இறைவனுக்கு நன்றி வழிபாடு இன்று மாலை 4.00 மணிக்கு அன்னார் நீண்ட காலமாக நிர்வாகசபை அங்கத்தவராகவும் முன்னாள் பொருளாளராகவும் அங்கத்துவம் வகித்த நுணாவிலிலுள்ள அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையில் நடைபெறவுள்ளது என்பதையும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

(அன்னாரது குடும்ப விவரங்களுக்கு 13.11.2017 உதயன் பத்திரிகையின் மரண அறிவித்தலைப் பார்க்கவும்.)

தகவல்: குடும்பத்தினர்.
076 863 3517

## நுண்ணுணர் திறன்

உணர்ந்து கொண்டு உடனடியாகவே வேறு இடத்துக்கு இடம்பெயர்ந்தன. மனிதக் காதுகளால் கேட்கமுடியாத ஒலி அலைகளின் சத்தத்தை கேட்டே இந்தப் பறவைகள் அங்கிருந்து வெளியேறின." என்று இந்த ஆய்வறிக்கை கூறுகிறது. ஒன்பது கிராம் நிறையுடைய இந்தச் சின்னஞ்சிறிய பாடும்பறவை கொண்டுள்ள 'நுண்ணுணர் திறன்' பற்றி விஞ்ஞானிகள் ஏற்கனவே அறிந்து கொண்டிருந்தாலும்,இந்தக் குறிப்பிட்ட பரிசோதனையின் மூலம் 'நுண்ணுணர்' திறனின் முழுமையும் உறுதி செய்யப்பட்டிருப்பதாக இந்த ஆய்வை மேற்கொண்ட விஞ்ஞானிகள் தெரிவித்திருக் கிறார்கள்.

## மனிதப் பரிணாமம்

மற்றும் மனிதர்களிடமிருந்து ஆயிரக்கணக்கான மரபணுக்கள் பரிமாற்றம் நடந்துள்ளதை காட்டுவதாக அவர் தெரிவித்துள்ளார். மேலும் அரிதாக நிகழ்ந்திருக்கும் இந்த மரபணுப் பரிமாற்றமானது தற்போதும் அனைத்து விதமான விலங்கினங்களிலும் (மனிதர்கள் உட்பட) செயற்பட்டு வருவதாக தெரிவித்த அவர் மனித இன பரிணாமம் குறித்து எமக்கு இருக்கும் கருத்தை வேறு கோணத்தில் சிந்திப்பது அவசியம் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

### தேவை

கொழும்பில் இயங்கும் பிரபல தனியார் நிறுவனம் ஒன்றிற்கு சுத்திகரிப்பாளர் தேவை. தங்குமிட வசதி உண்டு.

தொடர்பு :- 070 222 2080

### வேலை ஆள்கள் தேவை

கொழும்பில் இயங்கிவரும் டிஷ் ஆன்டெனா விற்பனை மற்றும் பொருத்துதல் REPAIRING செய்யும் நிறுவனத்துக்கு அனுபவமுள்ள / அனுபவமற்ற பயிற்சி வேலையாள்கள் தேவை. அனுபவமுள்ளவர்களுக்கு (டிஸ் ஆன்டெனா பொருத்தல் / ரீசீவர் REPAIR / விற்பனையாளர் விற்பனை உதவியாளர்) Rs 40000/= வரையும் அனுபவமற்றவர்களுக்கு பயிற்சியின் போது தங்குமிடம் உணவு இலவசமாக வழங்குவதோடு மாதாந்தம் வேதனமாக 15000/= கிடைக்கும். (A/L அல்லது O/L படித்த எலக்ட்ரானிக்ஸ் துறையில் ஆர்வமுள்ள 22 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் மட்டும்) 3மாத பயிற்சியின் பின் நிரந்தரமாக்கப்படும். ஆள்களுக்கு திறமைக்கு ஏற்ப சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

CONTACT KUMAR - 077 771 0785
SATS - TECH ENGINEERS.
51/102 WOLFENDAL STREET, COLOMBO

## மரண அறிவித்தல்கள்



பிறப்பு 25 . 04 . 1951

இறப்பு 13 . 11 . 2017

### மாணிக்கவாசகர் பாலசுப்பிரமணியம்

மீசாலையைப் பிறப்பிடமாகவும், இல.845 ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கவாசகர் பாலசுப்பிரமணியம் 13.11.2017 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் - பராசக்தி தம்பதிகளின் அன்பு மகனும், தில்லையம்பலம் - மங்கையற்கரசி தம்பதிகளின் அன்பு மருமகனும், தில்லைநாயகி யின் பாசமிகு கணவரும், வினோயா (கனடா), பகீரதி (கனடா), கிருஷ்ண குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பார்த்தீபனின்(கனடா) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.11.2017) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மம்மில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

076 919 7122

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ



### வேலுப்பிள்ளை நாகராசா (பெரியாம்பி)

யாழ்ப்பாணம், சரவணையைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சி, தொண்டமான் நகரினை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை நாகராசா (பெரியாம்பி) 14.11.2017 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற சதாசிவம் விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மருமகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் குமுதினி, பத்மினி(பிரான்ஸ்), பாமினி(பிரான்ஸ்), பிரபாகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் தங்கேஸ்வரி, கனகரத்தினம், தங்கலட்சுமி, பரஞ்சோதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசேந்திரம், விக்கினேஸ்வரன்(பிரான்ஸ்), அகிலன் (பிரான்ஸ்), வசந்தா ஆகியோரின் அன்பு மாமனாரும் விஷ்ணு, அக் ஷயா, அக் ஷயன், பிரணவன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் திருநகர் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

077 478 8629/ 0033 60 574 5421/
0033 751 374 533

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 27.10.2017 வெள்ளிக்கிழமையன்று
அமரத்துவம் அடைந்த எங்கள் அன்னை

### அமரர் கணேசம்மா சிவப்பிரகாசம்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (16.11.2017) வியாழக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 18.11.2017 சனிக்கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து வீட்டில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் இல 106. பிரதான வீதியில் அமைந்துள்ள பிருந்தாவனம் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல 54/5, உவர்மலை, மத்திய வீதி,
திருகோணமலை.
பாலகிருஷ்ணன் (சிறி) - 077 703 2622

குடும்பத்தினர்.

## நெஞ்சம் நிறைந்த அன்புத் தந்தையினதும் தாயினதும் 25 ஆம் வருட, 9 ஆம் வருட நீங்காத நிலைத்த நினைவலைகள்

25 ஆம் ஆண்டு



மலர்வு 04.12.1914

உதிர்வு 15.11.1992

பண்டிதர் கந்தையா அருள்பிரகாசம்
(இளைப்பாறிய அதிபர்)

9 ஆம் ஆண்டு



மலர்வு 10.02.1924

உதிர்வு 10.11.2008

திருமதி பொன்னம்மா மேரி அக்னஸ் அருள்பிரகாசம்

அமரத்துவம் அடைந்த எங்கள் அன்புத் தந்தை கந்தையா அருள்பிரகாசம் தாயார் பொன்னம்மா மேரி அக்னஸ் அருள்பிரகாசம் அவர்களின் நினைவலைகள்

979/7, வளன்புரம்.
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## வழங்குனர்களை பதிவுசெய்தல்- 2018

**வலிகாமம் தெற்கு பிரதேச சபையானது 2018 ஆம் ஆண்டுக் கான கீழ் குறிப்பிடப் பட்ட பொருள்கள், வேலைகள், சேவைகளை வழங்குவதற்கு தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குனர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.**

| தொகுதி A | பொருள்கள் |
|---|---|
| A - 01 | காகிதாதிகள் எழுதுபொருள்கள் உபகரணங்கள் |
| A - 02 | தளபாடங்களும், அலுவலக உபகரணங்களும் |
| A - 03 | கணனி, இலத்திரனியல் பொருள்கள், நிழல்பிரதியாக்கல் இயந்திரம், தொலைநகல் இயந்திரம் இவற்றுடன் தொடர்புடைய பொருள்கள் |
| A - 04 | திரைச்சிலைகள், சீருடை மற்றும் துணிவகைகள் |
| A - 05 | குளியலறை பொருத்திகள் மாபிள்கல் வகைகள், நீர் வழங்கலுக்கான பொருள்கள் மற்றும் அதனோடிணைந்த பொருள்கள் |
| A - 06 | கட்டட, இரும்புப்பொருள்கள், பெயின்ட் வாணிஸ் மற்றும் அதனோடிணைந்த பொருள்கள் |
| A - 07 | மின்சாரப் பொருள்கள் அதன் உதிரிப்பாகங்கள், மின்னிணைப்புக்கான பொருள்கள் |
| A - 08 | தும்புத்தடி, விளக்குமாறு, கால்துடைப்பம், மொப்பர் மற்றும் ஏனைய பொருள்கள் |
| A - 09 | சுத்திகரிப்புப்பொருள்கள் மற்றும் கிருமிநாசினிகள் |
| A - 10 | வாகன உதிரிப்பாங்கள், துணைப் பொருள்கள், |
| A - 11 | எரிபொருள்கள், உராய்வு நீக்கிகள் |
| A - 12 | நூலகங்களுக்கான நூல்கள் |
| A – 13 | கற்கள், மண் வகைகள் |
| A - 14 | தீராந்திகள், பலகைகள் |
| A - 15 | அலங்காரப் பொருள்கள் |

| தொகுதி B | சேவைகள் |
|---|---|
| B- 01 | உருக்கு, மரத்தளபாடங்கள் திருத்தம் |
| B - 02 | கணனி, பிரதியாக்கல் இயந்திரம், அதனுடன் இணைந்த பொருள்கள் திருத்தமும், பராமரிப்பு செய்தலும் |
| B - 03 | காற்றுகுளிராக்கி, மின்மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரம், திருத்துதலும், மீளமுறுக்குதலும், |
| B - 04 | அச்சிடுதல், புத்தககங்கள் கட்டுதல் |
| B - 05 | உள்ளக தொலைபேசி இணைப்பும் உள்ளக இணைய இணைப்பும், பராமரிப்பும் |
| B- 06 | இலத்திரனியல் சாதனங்கள் திருத்தல் |
| B- 07 | இறப்பர் முத்திரை தயாரித்தல் |
| B- 08 | சுத்திகரிப்பு சேவையும் பாதுகாப்பு சேவையும் |
| B- 09 | ஏற்றியிறக்கும் சேவை (தார், முதலான வீதி மூலப்பொருள்கள் மூற்றும் கட்டட மூலப் பொருள்கள்) |
| B- 10 | சகலவிதமான வாகனத் திருத்ததம் |
| B- 11 | சகல விதமான வாகன சுத்திகரிப்பு |
| B- 12 | வாகனங்களுக்குரிய ரீயூப் ஒட்டுதல், உலோக வேலைகள் |

| தொகுதி C | ஒப்பந்த வேலைகள் (ICTAD) பதிவு உள்ளவர்கள் மட்டும்) |
|---|---|
| C - 01 | கட்டட நிர்மாணமும், திருத்தமும் |
| C - 02 | வீதி நிர்மாணமும் திருத்தமும் |
| C - 03 | கிணறு அமைத்தல் |

1. வழங்கல்கள் 2018ம் ஆண்டிற்கு மட்டும் செல்லுபடியானதாகும்.
2. ஒவ்வொரு தொகுதியினதும் தொடர் இலக்கம் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி விண்ணப்படிவங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்
3. விண்ணப்பப்படிவங்களை ஒவ்வொரு விண்ணப்பதிற்கும் எமது தலைமையலுவலகத்தில் பதிவுக் கட்டணம் ரூ. 1000.00 (VAT, NBT நீங்கலாக) செலுத்தி தலைமையலுவலத்தில் பெற்றுக் கொள்ளலாம்
4. விண்ணப்பபடிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் -2018 எனக் குறிப்பிட்டு **"செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேசசபை, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்"** எனும் முகவரிக்கு 15.12.2017ஆம் திகதிக்கு முன்னர் பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
5. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**தி.சுதர்சன்**
**செயலாளர், வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்.**

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** செயலில் உற்சாகம் அதிகரிக்கும். அதிக உழைப்பினால் தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி பெறுவீர்கள். குடும்பத்தேவை குறையின்றி நிறைவேறும்.

**இடபம்:** பணியில் கூடுதல் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். சராசரி பணவரவு இருக்கும். உறவினர் வழியில் செலவு ஏற்படலாம்.

**மிதுனம்:** தன்னம்பிக்கையுடன் செயல்படுவது அவசியம். தொழிலில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். கடன் விஷயத்தில் கூடுதல் கவனம் தேவை.

**கடகம்:** சமயோசிதமாக செயல்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். இலாபம் அதிகரிக்கும். உறவினர்களிடம் நெருக்கம் அதிகரிக்கும்.

**சிங்கம்:** நண்பரின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழி வகுக்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பெண்கள் சிக்கனம் மூலம் சேமிக்க முயல்வர்.

**கன்னி:** சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழிலில் உற்பத்தி விற்பனை செழிக்கும். உபரி வருமானம் கிடைக்கும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேறும்.

**துலாம்:** குடும்பத்தில் இருந்த குழப்பம் தீரும். தொடர்பில்லாத பணியை ஏற்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் மிதமாக இருக்கும்.

**விருச்சிகம்:** பெற்றோரின் வழிகாட்டுதலை மதித்து செயல்படுவீர்கள். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வளர்ச்சி உண்டாகும். பணவரவு திருப்திகரமாகும்.

**தனுசு:** சமூகத்தில் அந்தஸ்து அதிகரிக்கும். தொழில், வியாபாரம் வளர்ச்சிக்கு கூடுதல் உழைப்பு அவசியம். சுப நிகழ்வில் குடும்பத்துடன் கலந்து கொள்வீர்கள்.

**மகரம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில் வியாபாரம் சார்ந்த குறையை சரிசெய்வது நல்லது. பெண்களுக்கு சேமிப்பு பணம் செலவுக்குப் பயன்படும்.

**கும்பம்:** திட்டமிட்ட பணியில் திடீர் மாற்றம் செய்வீர்கள். தொழில் வியாபாரம் சார்ந்த குறையை பிறரிடம் சொல்ல வேண்டாம். பெண்கள் வீண் செலவைத் தவிர்ப்பது நல்லது.

**மீனம்:** அனைவரிடமும் அன்பு காட்டுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இலக்கு பூர்த்தியாகும். பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும்.

# 'தானா சேர்ந்த கூட்டம்'

## முடிந்தது படப்பிடிப்பு

சினிமா



விக்னேஷ் சிவன் இயக்கத்தில் சூர்யா நடித்து வரும் 'தானா சேர்ந்த கூட்டம்' படத்தின் படப்பிடிப்பு முடிந்துவிட்ட நிலையில், படத்தின் அடுத்தகட்டப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன.

விக்னேஷ் சிவன் இயக்கத்தில் சூர்யா . கீர்த்தி சுரேஷ் நடிப்பில் உருவாகிக் கொண்டிருக்கிறது 'தானா சேர்ந்த கூட்டம்'. இந்தப் படத்தின் படப்பிடிப் புப் பணிகள் அனைத்தும் முடிவடைந்துள்ளன என்று விக்னேஸ் அறிவித்துள்ளார். அனிருத் இசையமைப்பில் இரண்டு பாடல்கள் வெளியாகி வரவேற்பை பெற்றிருக்கும் நிலையில், படத்தின் இசை வெளியீட்டு விழா அடுத்து மாதம் நடைபெற வுள்ளது. 'டப்பிங் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன' என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

twitter.com/Kozhiyaar



தவறான நபரிடம் காட்டப்படும் பாசமும், தவறான நபரிடம் எதிர்ப்பார்க்கும் நேசமுமே அனைத்து பிரச்சினைக்கும் அச்சாணி...

twitter.com/abuthahir707



பிடித்தவர்களிடத்தில் காட்டப்படும் அன்பு - தொந்தரவாகவும், கோபம் - பாரமாகவும் இருந்தால் விலகி நிற்பதே வலியில் சிறந்தது!

## சுடோக்கு
எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 8 | | 5 | | | | | |
| 1 | 4 | 2 | | | | | | |
| 6 | | 3 | | 8 | | | 1 | |
| | | 4 | | 2 | | | | 8 |
| 8 | | | 7 | | 9 | | | 6 |
| 3 | | | | 6 | | | | |
| | 1 | | | 5 | | 8 | | 4 |
| | | | | | | 1 | 5 | 2 |
| | | | | | 2 | | 6 | |

நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2 | 1 | 6 | 3 | 7 | 9 | 8 | 4 |
| 3 | 8 | 7 | 1 | 9 | 4 | 5 | 6 | 2 |
| 6 | 9 | 4 | 2 | 5 | 8 | 7 | 1 | 3 |
| 9 | 6 | 3 | 7 | 8 | 2 | 1 | 4 | 5 |
| 2 | 4 | 8 | 5 | 1 | 9 | 6 | 3 | 7 |
| 1 | 7 | 5 | 3 | 4 | 6 | 2 | 9 | 8 |
| 7 | 5 | 9 | 8 | 6 | 3 | 4 | 2 | 1 |
| 8 | 1 | 6 | 4 | 2 | 5 | 3 | 7 | 9 |
| 4 | 3 | 2 | 9 | 7 | 1 | 8 | 5 | 6 |

**உருவத்தை வைத்து யாரையும் எடைபோடக் கூடாதென அனுபவப்பூர்வமாக உணர்ந்த நாள் இன்று...**



**பெரிய வெங்காயம் 40 ரூபா**
**சின்ன வெங்காயம் 200 ரூபா**

**கிடைத்ததெல்லாம் 'லக்'**




**கிடைக்காததெல்லாம் 'இலக்கு'**

**தாய் தன் மகனிடம்:** அழகான பொண்ணுங்களை எப்படி நினைக்கனும் தெரியுமாடா...
**மகன்:** உன் சித்தியா நினைக்கனும்னு அப்பா சொல்லி இருக்காருமா..



**கணவன்:** வைச்சிட்டாண்டா ஆப்பு... பூரிக்கட்டை பறக்கிறதுக்குள்ள ஓடிடு முருகேசா... உடம்பு தாங்காது....

## சிரி.... சிரி....

மனைவி: கணவனிடம் கேட்டாள் நான் ஒரு நாலு நாள் உங்க கண்ணில படாம இருந்தா நீங்க எப்படி பீல் பண்ணுவீங்க...?
அப்பாவிக் கணவன் (சந்தோஷசத்தில் அவசரப்பட்டு): ரொம்ப சந்தோசமா பீல் பண்ணுவேன்....
அப்புறம் என்ன?
திங்கட்கிழமை அவனுக்கு பொண்டாட்டி கண்ணுக்குப் படல....
செவ்வாய்க்கிழமையும் கண்ணில படல...
புதன்கிழமையும் பொண்டாட்டி கண்ணில படல..
வியாழக்கிழமையும் பொண்டாட்டி கண்ணில படல...

வெள்ளிக்கிழமை சாயங்காலமா கண்ணில வீக்கம் குறைஞ்சு லேசா தெரிய ஆரம்பிச்சா....



தொடர் ஏமாற்றங்களினால்
கோபம் கடவுள் மீதோ!
மனிதன் மீதோ! அல்ல,
அடிபட்டும் திருந்தாத
மனதின் மீதே!

## தனது...

நடத்த அரசு உத்தேசித்திருப்பதாகவும் இது பொது வாக்கெடுப்புக்கு முன்னர் தமிழ் மக்களின் மனோ நிலையைக் கைபிடித்துப் பார்க்கும் ஒரு கைங்கரியம் என்றும் சிலரால் கூறப்படுகின்றதே. உங்கள் கருத்தென்ன?

**கருத்துக் கணிப்பு**

பதில்: இது ஒரு யூகந்தான். ஆனால் இந்தக் கூற்றில் உண்மையிருக்கவும் கூடும். தமிழ் மக்களின் கருத்தை அறியும் தேர்தலாக உள்ளூராட்சித் தேர்தல் அமையலாம். பௌத்தத்துக்கு முதலிடம், கூட்டாட்சி தேவையில்லை, ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பரவலாக்கம் என்ற கொள்கையை உடைய தற்போதைய தமிழ்த் தலைமைத்துவத்தின் கருத்தை தமிழ் மக்கள் வரவேற்பார்களானால் சிங்கள மக்களுக்கு அதை எடுத்துக் காட்டிப் புதிய அரசமைப்பை தாம் நினைக்கும் வகையில் நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளச் செய்யலாம் என்று அவர்கள் எதிர்பார்க்கக்கூடும்.

தற்போதைய தமிழ்த் தலைமைகளின் கருத்துக்களைத் தமிழ் மக்கள் உள்ளூராட்சித் தேர்தல்களில் ஏற்றுக்கொண்டு பெருவாரியாக அந்தக் கருத்துக்களை ஆதரிப்பார்களானால் மிகக் குறைவான தீர்வை நாம் விரைவாகப் பெற இடமிருக்கின்றது. எதிர்காலத்தில் தமிழ் மக்களுக்கு என்ன ஆகும் என்பதைத் தமிழ்த் தலைமைகளும் தமிழ் மக்களும் ஆய்ந்துணரவேண்டும். கிழக்கைப் போல் வடக்கை ஆக்குவதற்கு அரசுக்குப் பல வருடங்கள் அப்பொழுது தேவைப்படாது.

**புலிகள் முன்னெடுத்தது கிளர்ச்சியே**

ஆயுதமேந்தியோர் கொழும்பு அரசைப் பிடிக்க எத்தனிக்கவில்லை. தாம் வாழ்ந்த இடங்களில் அரசை நிறுவவே முயன்றனர்.

போர் நடந்த காலத்தில் கொழும்பு அரச அதிகாரம் தொடர்ந்து வடக்குக் கிழக்கில் கோலோச்சியமை யாவர்க்கும் நினைவிருக்கலாம்.

போர் என்று கூறியது இரு இனங்களுக்கிடையேயான போர் அல்ல. அது அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்ற ஒன்று. ஜே.வி.பி காலத்திலும் அப்படித்தான். அரசுக்கும் ஜே.வி.பி க்கும் இடையிலேயே போர் நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் வன்முறையும் ஜே.வி.பியின் வன்முறையும் நாட்டில் நடந்த இரு கிளர்ச்சிகளே தவிர போர் அல்ல. அரசின் அதிகாரம் தொடர்ந்து வடக்கிலும் தெற்கிலும் அந்தந்தக் காலத்தில் நீடித்து இருந்ததால் கிளர்ச்சிகளை போர் என்று அடையாளப்படுத்த முடியாது.

கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வந்ததும் இராணுவம் தமது முகாம்களுக்குச் சென்றுவிடவேண்டும். அவர்கள் கையேற்ற காணிகள் உரியவர்களிடம் சேர்க்கப்பட்டிருக்கவேண்டும். அதுவும் அவர்களால் அன்றி சிவில் அதிகாரிகள் மூலமாகக் சேர்ப்பிக்கப்பட்டிருக்கவேண்டும். அதுதான் சட்டத்தின் எதிர்பார்ப்பு.

இராணுவத்தினர் போரில் வென்றார்கள், எமக்கு எமது சட்ட ரீதியான நியாயமான கோரிக்கைகளை அதன் பொருட்டு அரசிடம் முன்வைக்க எந்தவித உரித்தும் இல்லை என்று எம்மவர் நினைத்தால் அது முற்றிலும் தவறான சிந்தனையாகும். தமிழ் மக்கள் போரில் தோல்வி அடையவில்லை. அவர்கள் அன்றும் இன்றும் இந்த நாட்டின் ஒரு அங்கமே. அவர்களின் சட்டரீதியான உரிமைகளைத் திருப்பிக் கேட்க எத்தருணத்திலும் அவர்களுக்கு உரித்துண்டு.

**தோற்றுப்போன மனோபாவத்தில் தமிழ்த் தலைமை**

இன்றைய தமிழ்த் தலைமைத்துவம் தோற்றுவிட்டோம் என்ற மனப்பாங்கில் பௌத்தத்துக்கு முதலிடம், ஒற்றையாட்சியின் கீழ் சிங்களப் பேரினவாதத்துக்கு தொடர்ந்து இடம் கொடுக்க, வட-கிழக்கை இணைக்காதுவிட நாம் தயார். தன்னாட்சி, தாயகம் போன்ற கோரிக்கைகளைக் கைவிடத் தயார். கூட்டாட்சி முறைசாத்தியம் இல்லை என்று கூறி ஒரு சில சலுகைகளை மட்டும் பெறும் வகையில் நடந்து கொள்வதால் தான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் பிளவு ஏற்படப் பார்க்கின்றது. நாமாகவே வலிந்து தயாரித்த தேர்தல் அறிக்கையின் உள்ளடக்கத்தை தான்தோன்றித்தனமாகக் கைவிட எமது தலைமைகள் முன்வந்தமையே பிளவு ஏற்பட ஏதுவாக இருக்கின்றது.

பெரும்பான்மையான தமிழ்க் கட்சிகள் யாவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அறிக்கையை ஒட்டிய கருத்தையே கொண்டுள்ளன. அந்தக் கொள்கைகளில் மாற்றமேதும் இல்லை என்று தமிழ்த் தலைமைத்துவத்தால் உறுதியுடனும் நேர்மையுடனும் கூறமுடிந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்ந்தும் வலுவான ஓர் அரசியல் கட்சியாக முன்னேற முடியும். அவ்வாறில்லாமல் குறைந்ததைப் பெறுவதே உசிதம் என்று எமது தொடர் அடிப்படைக் கருத்துக்களை உதாசீனம் செய்தால் பிளவுகள் ஏற்படுவதைத் தடுக்க முடியாது என்றுள்ளது. (உ-5)

## விஜயதாசவின்...

எம்.ஏ.சுமந்திரன். அரசமைப்புச் சபை (நாடாளுமன்றம்) உருவாக்கமானது சட்டத்துக்கு முரணானது. உபகுழுக்களின் அறிக்கைகள் மற்றும் வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கை என்பனவும் சட்டத்துக்குப் புறம்பானவை என்று தெரிவித்து முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச நாடாளுமன்றச் சபாநாயகர் கரு ஜயசூரியவுக்குக் கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதம் தொடர்பில் எம்.ஏ.சுமந்திரன் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றம் அரசமைப்புச் சபையாக 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் திகதி மாற்றுவதற்கு முன்வைக்கப்பட்ட தீர்மான வரைவைத் தயாரித்தவர் விஜயதாச ராஜபக்ச. அதனைச் சபையில் முன்மொழிந்த ஆறுபேரில் ஒருவர் விஜயதாச ராஜபக்ச.

அதுமட்டுமல்லாது வழிநடத்தல் குழுவில் விஜயதாச ராஜபக்சவும் ஓர் உறுப்பினராக இருந்தார். நடந்த 73 வழிநடத்தல் கூட்டங்களில் குறைந்தது 50 வழிநடத்தல் கூட்டங்களிலாவது அவர் பங்குபற்றியிருப்பார். வழிநடத்தல் குழுவின் இடைக்கால அறிக்கையின் சில முக்கிய பகுதிகளைத் தயாரிக்கும் பொறுப்பு அவரிடமே ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவர் அதனைத் தயாரித்தும் ஒப்படைத்திருந்தார். வெளிவந்துள்ள இடைக்கால அறிக்கையிலும் அது உள்ளது.

இவை எவையையும் முன்னெடுக்கும்போது, சட்டத்துறையில் கலாநிதிப் பட்டங்கள் இரண்டைப்பெற்ற, அரச தலைவர் சட்டத்தரணியுமான விஜயதாசவுக்கு எதுவும் தெரிந்திருக்கவில்லையா? பதவி பறிக்கப்பட்ட பின்னரா அவருக்கு ஞானம் வருகின்றதுஎன்று கேள்வி எழுப்பியுள்ளார் சுமந்திரன் (உ-5)

## குடாநாட்டு...

யாழ்ப்பாணத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளை எப்படி முகாமைத்துவம் செய்வது என்பது தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.

இவ்வாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றில், வரவு செலவுத் திட்டம் மீதான நான்காம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுத்தே வரவு செலவுத் திட்டங்கள் முன்வைக்கப்படுகின்றன. கடந்த அரசு பெற்றுக்கொண்டிருந்த கடன்கள் குறித்து அறிந்து கொள்ளவே ஒரு வருடம் சென்றது.

கடந்த ஆண்டு 95 பிரதேச செயலர் பிரிவுகள் வெள்ள இடருக்கு முகம்கொடுத்திருந்தன. 117 பிரதேச செயலர் பிரிவுகள் வறட்சிக்கு முகம் கொடுத்திருந்தன. இந்தப் பாதிப்புகளில் இருந்து மக்களை மீட்டெடுக்க அரசு 70 பில்லியன் ரூபாவை செலவிட்டுள்ளது.

போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு மாகாணத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

அரச துறைக்கு என்ன செய்துள்ளனர் எனக் கேள்வியெழுப்பியுள்ளனர்.

ஏற்கனவே நாம் அதிகரித்த சம்பள அதிகரிப்பின் ஊடாக அரச ஊழியர்களின் சம்பளம் பன்மடங்கு அதிகரிக்கும். நாட்டில் 15 லட்சம் அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை செலுத்த 12 பில்லியன் ரூபா தேவைப்படுகின்றது. சம்பள அதிகரிப்பின் பிரகாரம் நீதிபதி உயர் சம்பளத்தை பெறுவதுடன் சாதாரண அரச ஊழியரின் சம்பளமும் பன்மடங்காக அதிகரிக்கும். மேலதிக நேரக் கொடுப்பனவு அதிகரிக்கும். இவற்றுக்கான பணத்தை எப்படித் திரட்டுவது என்பது தொடர்பில் ஆராய்கின்றோம் - என்றார். (உ-5)

## ஒற்றையாட்சி...

தார். வடக்கு மாகாண முதலமைச்சர் விடுத்துள்ள கேள்வி பதில் அறிக்கை தொடர்பில் அவரிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இடைக்கால அறிக்கையை குறைந்தபட்சத் தீர்வு என்று முதலமைச்சர் கூறியதில் எந்தவொரு நியாயமும் இல்லை. எமது நாட்டுக்கு ஒற்றையாட்சி பொருத்தமில்லை என்று இடைக்கால அறிக்கையிலேயே சொல்லப்பட்டுள்ளது. கூட்டாட்சி (சமஷ்டி) பொருத்தமில்லை என்று இடைக்கால அறிக்கையில் எந்தவொரு இடத்திலும் சொல்லப்படவில்லை. கூட்டாட்சி இல்லாத தீர்வு என்று இடைக்கால அறிக்கையைச் சொல்லுவது தவறு.

நாங்கள் ஒருபோதும் மக்கள் ஆணையை மீறிச் செயற்படமாட்டோம். வெளிவந்துள்ள இடைக்கால அறிக்கையும் மக்கள் ஆணையை மீறியதாக இல்லை. மக்கள் ஆணையை அண்டியதாகவே இடைக்கால அறிக்கையும் இருக்கின்றது - என்றார். (உ-5)

## சிறுமியை...

டங்கள் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தது வவுனியா மேல்நீதிமன்று.

வவுனியா மறவன்குளம் பகுதியில் கடந்த 2003ஆம் ஆண்டு தனிமையிலிருந்த சிறுமியை சிறிய தந்தை (தாயின் இரண்டாவது கணவன்) இரண்டு தடவைகள் வன்புணர்ந்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது. சிறுமி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டார். வன்புணர்வு உறுதிப்படுத்தப்பட்டது.

சிறிய தந்தை கைது செய்யப்பட்டார் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அவர் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். கடந்த வருடம் ஒக்ரோபர் 24 ஆம் திகதி அன்று சட்டமா அதிபர் திணைக்களத்தால் குறித்த எதிரிக்கு எதிராகக் குற்றப்பகிர்வுப் பத்திரம் வவுனியா மேல்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டது.

நீதிபதி பாலேந்திரன் சசிமகேந்திரன் முன்னிலையில் இந்த வழக்கு விசாரிக்கப்பட்டுவந்தது. அவர் குற்றவாளியென நீதிமன்றினால் அடையாளங் காணப்பட்டார்.

வழக்கு நேற்றுத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. அவர் சிறுமியை முதல்தரம் வன்புணர்ந்த குற்றத்துக்காக 10 வருடங்கள் கடூழியச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட சிறுமிக்கு இழப்பீடாக இரண்டு இலட்சம் ரூபா செலுத்துமாறும் அதைச் செலுத்தத் தவறினால் இரண்டு வருடம் கடூழியச்சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும் எனவும் தண்டப் பணமாக 10ஆயிரம் ரூபா செலுத்துமாறும் அதைச் செலுத்தத்தவறினால் மேலும் ஒரு மாதம் சாதாரண சிறை அனுபவிக்க நேரிடும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது.

இரண்டாவது தடவை வன்புணர்ந்த குற்றத்துக்காகவும் 10 வருடங்கள் கடூழியச்சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. முன்னரைப் போன்றே சிறுமிக்கு இழப்பீடாக இரண்டு இலட்சம் ரூபா செலுத்துமாறும் அதைச் செலுத்தத் தவறினால் இரண்டு வருடம் கடூழியச்சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும் எனவும் தண்டப்பணமாக 10ஆயிரம் ரூபா செலுத்தமாறும் அதைச் செலுத்தத்தவறினால் மேலும் ஒரு மாதம் சாதாரண சிறை அனுபவிக்க நேரிடும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டது.

அதன்படி அவர் 4 லட்சம் ரூபாவை சிறுமிக்கு இழப்பீடாக வழங்க வேண்டும். எனினும் அவருக்கு விதிக்கப்பட்ட 20 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையை ஏககாலத்தில் அனுபவிக்க முடியும் என்று நீதிமன்று தெரிவித்தது. அதன்படி அவர் 10 வருடங்கள் கடூழியச் சிறைத் தண்டனையை அனுபவித்தால் போதும். (உ-4)

## மீண்டும்...

நேற்றிரவு மட்டும் நான்கு இடங்களில் வாள் வெட்டுக் குழுவினர் அட்டகாசம் புரிந்தனர். வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற இந்த வாள்வெட்டுச் சம்பவங்களில் அறுவர் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். கோண்டாவிலில் கடை ஒன்றும் அடித்து நொறுக்கப்பட்டது. கடை உரிமையாளர் கடந்த சனிக் கிழமை இரவு குருநகரில் வைத்து வாளால் வெட்டப்பட்டிருந்தார். கோண்டாவில், மானிப்பாய், ஆறுகால்மடம் பகுதிகளில் நேற்றைய வாள்வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றன.

கோண்டாவில் டிப்போச் சந்திக்கு அண்மையில் உள்ள உணவகம் ஒன்றுக்கு நேற்று இரவு 8.30 மணியளவில் வந்த வாள்வெட்டுக் குழுவினர் அந்தக் கடையை அடித்து உடைத்துச் சேதமாக்கினர். உணவு உண்பதற்கு கடைக்குச் சென்றவர்கள் அவர்களால் விரட்டியடிக்கப்பட்டனர். கைக் கோடரி, மற்றும் வாள்களுடன் கடையினுள் சென்ற கும்பல் அங்கு பணியில் இருந்த ஒருவரை வாளால் வெட்டிவிட்டுத் தப்பிச் சென்றது.

இதில் புத்தூரைச் சேர்ந்த செல்லத்துரை மணிவண்ணன் (வயது -36) என்பவர் படுகாயமடைந்தார். இதன் பின்னர் அங்கு பதற்ற நிலை ஏற்பட்டது. பொலிஸார் வரவழைக்கப்பட்டனர் விசாரணைகள் இடம்பெற்றன.

இந்தக் கடையின் உரிமையாளரான சுண்டுக்குழி, ஈச்சமோட்டையைச் சேர்ந்த அருளானந்தம் சுஜீவன் (வயது- 35) கடந்த சனிக்கிழமை இரவு இனந்தெரியாதவர்களால் வாளால் வெட்டப்பட்டார். அவரது வீட்டினுள் புகுந்த நபர்கள் அவரைத் துரத்தித் துரத்தி வெட்டினர் என்று உறவினர்கள் தெரிவித்தனர். வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த ஆட்டோவையும் அவர்கள் கொள்ளையடித்துச் சென்றனர். எனினும் கோயில் வீதியில் செல்லும்போது அது கவிழ்ந்ததை அடுத்து அதைக் கைவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று பொலிஸார் கூறினர்.

நேற்று அவரது கடை தாக்கப்பட்டு அங்கு பணியாற்றியவர் வெட்டப்பட்டார். சுஜீவனை வெளியேவிடு என்று கத்தியபடியே வந்தவர்கள் தாக்குதல் நடத்தினர் என்று நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

மானிப்பாய்ப் பகுதியில் நேற்று நடந்த மற்றொரு சம்பவத்தில் முச்சக்கர வண்டியில் சென்ற ஒருவரை துரத்தித்துரத்தி வாளால் வெட்டியுள்ளனர். அவர் அங்குள்ள வீடு ஒன்றில் அடைக்கலம் புகுந்துள்ளார். அந்த வீட்டினுள் புகுந்த வாள்வெட்டுக் கும்பல் அங்கிருந்தவர்களையும் வெட்டினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதில் சாரதியான ஆனந்தராசா ஜெனிஸ்கரன் (வயது 35), ராசதுரை ரவிசங்கர் (வயது -40) அவரது மகனான ரவிசங்கர் பகிரதன்( வயது -17) மற்றும் பாலசுப்பிரமணியம் சிவகுருநாதன் (வயது 54) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

இதேபோன்று ஆறுகால்மடம் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டில் குணசிங்கம் குணபிரதீபன் (வயது -35) என்வர் காயமடைந்தார். வீதியால் சென்றபோது அவரை வாளால் வெட்டினர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இரவு 9 மணியளவில் நல்லூர் முடமாவடியில் உள்ள வீடு ஒன்றினுள் புகுந்த வாள்வெட்டுக் குழுவினர் அங்கிருந்த பொருள்களை அடித்து நொறுக்கி வீட்டிலிருந்தவர்களை அச்சுறுத்திவிட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவங்களில் காயமடைந்த அறுவரும் நேற்று இரவு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சம்பவங்கள் தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த நான்கு நாள்களில் யாழ். குடாநாட்டில் இதுபோன்ற வாள்வெட்டுச் சம்பவங்கள் 8 நிகழ்ந்துள்ளன. சனிக்கிழமை இரவு ஈச்சமோட்டையிலும் ஞாயிற்றுக் கிழமை இரவு குருநகரிலும் திங்கட்கிழமை இரவு மானிப்பாய் மற்றும் கோப்பாயிலும் நேற்றிரவு மானிப்பாய், கோண்டாவில், ஆறுகால்மடம், முடமாவடி ஆகிய இடங்களிலும் வாள்வெட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

வாள் வெட்டுக் கும்பல்களின் அட்டகாசத்தைக் கட்டுப்படுத்தவெனப் பொலிஸாரின் சுற்றுக் காவல் பலப்படுத்தப்பட்டுள்ள நிலையிலும் அவர்களுக்குச் சவால்விடும் வகையில் இந்தத் தாக்குதல்கள் அடுத்தடுத்து நடத்தப்பட்டுள்ளதுடன், நேற்று ஒரே நாளில் 4 இடங்களிலும் நடத்தப்பட்டுள்ளன.

முடமாவடியில் தாக்குதல் நடத்திய அதே கும்பலே கோண்டாவிலிலும் தாக்குதலில் ஈடுபட்டுள்ளது என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர். மறைகாணொலியில் பதிவான ஈருருளி ஒன்றை வைத்தே அவர்கள் இதனைத் தெரிவித்தனர். (உ-21,8,ரி1-26)

## யாழ்...

ஆணையாளர் பொ.வாகீசன் நியமிக்கப்பட வுள்ளார். இந்த நியமனங்கள், வடக்கு மாகாண ஆளுநர் குரேயால் இன்று வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பருத்தித்துறைப் பிரதேச செயலராகக் கட[illegible] யாற்றிய த.ஜெயசீலன், வடக்கு மாகாண[illegible] சபைக்கு வருடாந்த இடமாற்றத்தில் மாற்ற[illegible]கியிருந்தார். யாழ்ப்பாண மாநகரசபையி[illegible] ஆணையாளராக அவருக்கு இன்று நியமன[illegible] வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் ஆணை[illegible]ளராக பணியாற்றிய பொ.வாகீசன், வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கான நியமனக் கடி[illegible]மும் இன்று வழங்கி வைக்கப்படவுள்ளதாக[illegible] தெரிவிக்கப்படுகின்றது. (5,10)

# வென்றது ஸ்பெய்ன்

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நட்பு ரீதியிலான ஆட்டமொன்றில் ஸ்பெய்ன் வெற்றிபெற்றது.

ஸ்பெய்னை எதிர்த்து கொஸ்டாறிக்கா அணி மோதியது. 5:0 என்ற கோல் கணக்கில் ஸ்பெய்ன் அபார வெற்றிபெற்றது. ஸ்பெய்னின் சார்பாக டேவிட் சில்வா இரண்டு கோல்களையும், ஜோர்டி அல்பா, அல்வரோ மொராட்டா, அன்றே இனியஸ்டா ஆகியோர் தலா ஒரு கோலையும் பதிவுசெய்தனர். (ம)

35 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
25.01.1976

மறைவு
12.10.2017

செல்வி ஜெயராணி முருகையா

மாதம் ஒன்று சென்றதுவோ - உன் மதிமுகம் மறைந்ததுவோ
திங்கள் முகம் தேய்ந்ததுவோ உன் வாழ்வு திசை மாறி போனதுவோ
ஆண்டுகள் பல கடந்தாலும்
உன் நினைவு எம்மை விட்டு என்றுமே மறையாது
உன் ஆத்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பன்னாலை,
தெல்லிப்பளை.

குடும்பத்தினர்.
077 8379 173

மரண அறிவித்தல்

தெய்வேந்திரம் ஞானயுகன்



பிறப்பு 03.01.1979
இறப்பு 12.11.2017

திருவையாறு மேற்கு இலக்கம் 195\2 ஐ வதிவிடமாக கொண்ட தெய்வேந்திரம் ஞானயுகன் 12.11.2017 அகாலமரணம் அடைந்தார்.

அன்னார் தெய்வேந்திரம் (ஆசிரியர்.லண்டன்) பாக்கியலீலா தம்பதியினரின் கனிஷ்ட புதல்வனும் தயாநிதியின் பாசமிகு கணவரும் தனுஸ்கா,கீர்த்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் உருத்திரபுரத்தை சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா (உப தபால் அதிபர்) நாகம்மா (மருத்துவ மாது).கரவெட்டி ராமு மற்றும் சின்னம்மா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான தியாகிகள் ஞானசபேசன்,ஞானரதன் மற்றும் ஞானசுரபி (பிரான்ஸ்)ஞானதாரினி(திருவையாறு)ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்,

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2017) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று இரணைமடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

மலர்வு
19 . 06 . 1952



மறைவு
14 . 11 . 2017

திருமதி ஞானதேவி சுப்பிரமணியம்

நுணாவில் கிழக்கு,கல்வயல் சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஞானதேவி சுப்பிரமணியம் நேற்று (14.11.2017) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா,இரத்தினம் தம்பதியினரின் அன்பு மகளும்காலஞ்சென்றவர்களான செல்லர் தெய்வானை தம்பதியினரின் அன்புமருமகளும்சுப்பிரமணியத்தின்அன்புமனைவியும்சுபீதா(ஜேர்மனி), சுபாங்கரன், சுபீகரன் (ஜேர்மனி), சுதாகரன் (சுதா பந்தல் சேவை), சுரேஸ்குமார் (ஜேர்மனி), உதயகுமார் ஆகியோரின் அன்புத் தாயாரும் தங்கராசா, செல்லமணி, விஜியகுமார், பராசக்தி காலஞ்சென்ற ஜெயக்குமார்,கனகலிங்கம் ஆகியோரின் சகோதரியும் சுமந்திரன் (ஜேர்மனி), சுதர்சனா, தாட்சாயினி (கனடா), சுமித்திரா (யா\ கோவிலாக்கண்டி மகாலஷ்மி வித்தியாலய, ஆசிரியை) ஆகியோரின் மாமியாரும் ரம்யா, தனுஷன் (ஜேர்மனி), சமிரா, ஹரிஷ்ரா, வினோஜா, வஷ்மிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.11.2017)வியாழக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சுதாகரன்
(மகன்,சுதாகரன் பந்தல் சேவை,சாவகச்சேரி)
077 276 7164

# சென்னை சுப்பர் கிங்ஸின் 3 வீரர்கள் விவரம் 'ரிலீஸ்'



ஐ.பி.எல். தொடரில் முக்கிய அணிகளில் ஒன்றான சென்னை சுப்பர் கிங்ஸ், அடுத்த வருடம் தக்கவைக்கவுள்ள மூன்று வீரர்களின் விவரம் வெளியானது.

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் நடத்தப்படும் ஐ.பி.எல். தொடர் மிகவும் பிரபலமானது. கடந்த 2015ஆம் ஆண்டு நடைபெற்ற தொடரின் போது முறைகேடுகளில் ஈடுபட்டதாகத் தெரிவித்து சென்னை மற்றும் ராஜஸ்தான் அணிகளுக்கு இரண்டு வருடங்கள் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடை இந்த வருடத்துடன் முடிவடைந்துள்ளது. அடுத்த வருடம் இந்த இரண்டு அணிகளும் மீண்டும் களமிறங்குகின்றன. இதையடுத்து ஒவ்வொரு அணிகளும் தலா மூன்று வீரர்களை மட்டுமே தக்கவைக்கலாம் என்று அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் சென்னை அணி தக்கவைக்கத் திட்டமிட்டுள்ள மூன்று வீரர்களின் விவரங்களும் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன. இதன்படி சென்னை அணியின் தலைவர் டோனி, சகலதுறை வீரர் அஸ்வின், தென்னாபிரிக்கத் துடுப்பாட்ட வீரர் பிளாசிஸ் ஆகியோரையே அவ்வாறு தக்கவைக்கச் சென்னை அணி திட்டமிட்டுள்ளது என்று அறியவருகிறது.

இவர்களைவிட தனது முன்னைய அணியை கட்டமைக்க சென்னை சுப்பர் கிங்ஸின் நிர்வாகம் முயல்கிறது. எனவே ஜடேயா, பிராவோ, ரெய்னா, மோர்கல் ஆகியோரை சென்னை அணி தனதாக்கக் கடும் போட்டியிடும் என்றும் அறியவருகிறது. (ம)



*வடமாகாண சபை உறுப்பினர் சித்தார்த்தனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியின் கீழ் இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகத்துக்கு ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்கள் நேற்று வழங்கப்பட்டன. கரவெட்டி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் உதவிப் பிரதேச செயலர் எஸ்.ரஜீவ் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.* *(ம-108)*


# வேகப்பந்து வீச்சாளருக்குச் சாதகமாக கொல்கத்தா ஈடன் கார்டன் ஆடுகளம்



கொல்கத்தா ஈடன் கார்டன் ஆடுகளத்தில் 6 மில்லிமீற்றர் அளவுக்குப் புற்கள் உள்ளதால், ஆடுகளம் பெரும்பாலும் வேகப்பந்துவீச்சுக்குச் சாதகமாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை - இந்தியா அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது ஆட்டம் கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் நாளை ஆரம்பமாகிறது. ஆடுகளம் குறித்த தகவல்கள் தற்போது வெளிவந்துள்ளன. இதன்படி கொல்கத்தா ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்கு அதிகம் சாதகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பொதுவாக கொல்கத்தா ஈடன் கார்டன் ஆடுகளம் துடுப்பாட்டத்துக்குச் சாதகமாக இருக்கும். ஆனால், இரண்டு வருடங்களுக்கு முன்னர் பெர்முடாவில் இருந்து கொண்டு வந்த மண் மூலம் ஆடுகளம் மறுசீரமைப்புச் செய்யப்பட்டது. அன்றுமுதல் ஆடுகளம் வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமாகச் செயற்பட்டு வருகிறது. புற்கள் காயாமல் இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு உயிர்ப்புடன் இருப்பதால் ஆட்டத்தின் மூன்று நாட்கள் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு கொண்டாட்டம்தான். அதிலும் தற்போது 6 மில்லிமீற்றர் அளவுக்கு புற்கள் உள்ளதால் நாளைய ஆட்டத்தில் வேகப்பந்துவீச்சு மிகையாக எடுபடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

# இலங்கை அணி மல்லுக்கட்டுமா?



இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நாளை ஆரம்பமாகிறது. கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் நாளைய ஆட்டம் நடைபெறவுள்ளது.

இந்திய அணி அண்மையில் இலங்கைக்குச் சுற்றுப் பயணம் செய்திருந்தது. டெஸ்ட், ஒருநாள், ரி-20 என்று மூன்று தொடர்களையும் சேர்த்து 9 ஆட்டங்கள் இடம்பெற்றிருந்தன. இலங்கை மண்ணில் வைத்து இலங்கைக்கு சிறு வாய்ப்பையேனும் வழங்காமல் 9:0 என்று கம்பீரமான வெற்றியுடன் நாடு திரும்பியது இந்தியா. இந்தத் தோல்வியின் பின்னர் இலங்கை அணி மீது மிகையான விமர்சனங்கள் வைக்கப்பட்டன. பின்னர் பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இலங்கை கைப்பற்றிய போதிலும் ஒரு நாள், ரி-20 தொடர்களை இழந்தது. இதையடுத்து தற்போது மீண்டும் இந்தியாவை இலங்கை எதிர்கொள்கிறது.

இந்தியாவை அதன் மண்ணில் வைத்து வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றுவது அவ்வளவு இலகுவான விடயமல்ல. ஒருமுறையேனும் இலங்கை அணியால் அவ்வாறான வெற்றியைப் பெறமுடியவில்லை. இந்த நிலையில் அண்மையில் கருத்துத் தெரிவித்த இலங்கை அணியின் சுழல் பந்து வீச்சாளர் கேரத், "இந்தியாவில் வைத்து கிண்ணம் வெல்வது எனது கனவு" என்று தெரிவித்திருந்தார். கேரத்துக்கு மட்டுமல்ல இலங்கை அணியின் ஏனைய வீரர்கள், ரசிகர்கள் என அனைவருக்கும் இந்தத் தொடர் கனவுதான். கனவு மெய்ப்படுமா அல்லது தொடர்ந்தும் கனவாகவே இருக்கப்போகிறதா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்புக்கள் எழுந்துள்ளன.

> மத்தியூஸ் அணிக்குத் திரும்பியமையும், பாண்டியாவுக்குக் கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டமையும் இலங்கைக்குச் சாதகமான விடயங்கள். ஏனெனில் பாண்டியா எந்த நேரத்திலும் ஆட்டத்தை மாற்றும் வல்லமை மிக்கவர்.

மத்தியூஸ் அணிக்குத் திரும்பியமையும், பாண்டியாவுக்குக் கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டமையும் இலங்கைக்குச் சாதகமான விடயங்கள். ஏனெனில் பாண்டியா எந்த நேரத்திலும் ஆட்டத்தை மாற்றும் வல்லமை மிக்கவர். இதைவிட இந்திய அணியில் பெரிய மாற்றங்கள் செய்யப்படவில்லை. குறிப்பாக அஸ்வின், ஜடேயா இருவரும் முழு உடற்தகுதியுடன் உள்ளனர். இவர்களே இலங்கையின் தலையெழுத்தைத் தீர்மானிக்க வல்லவர்களாக இருப்பார்கள். (ம)

# வெட்டல் முதலிடம்; ஹமில்டன் சம்பியன்

உலகக் கார்பந்தயத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பிரேசில் சுற்றில் ஜேர்மனிய வீரர் வெட்டல் முதலிடம் பிடித்தார். எனினும் ஒட்டுமொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் ஹமில்டன் சம்பியனாவது உறுதியானது.

உலக கார் பந்தயத் தொடர் 20 சுற்றுக்களாக உலகின் பல நாடுகளிலும் பரவலாக நடத்தப்பட்டு வருகிறது. இதன் 19ஆவது சுற்று பிரேசிலில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. பந்தயத் தூரமான 305 கிலோமீற்றர்களை ஒரு மணித்தியாலம் 31 நிமிடங்களில் கடந்து முதலிடம் பிடித்தார் வெட்டல். கடந்த ஜூலை மாதத்துக்குப் பிறகு வெட்டலுக்குக் கிடைத்த முதலாவது வெற்றி இதுவாகும்.

இதுவரை நடந்துள்ள 19 சுற்றுக்களின் முடிவில் இங்கிலாந்து வீரர் ஹமில்டன் 345 புள்ளிகளுடன் முதலிடத்தில் நீடிக்கிறார். ஜெர்மனி வீரர் செபஸ்டியன் வெட்டல் 302 புள்ளிகளுடன் 2ஆவது இடத்திலும், பின்லாந்து வீரர் போத்தாஸ் 280 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர். இந்தத் தொடரின் 20ஆவதும் இறுதியானதுமான சுற்று எதிர்வரும் 26ஆம் திகதி அபுதாபியில் நடைபெறவுள்ளது. ஹமில்டன் கிண்ணம் வெல்வது உறுதியாகியுள்ளதால் இந்தச் சுற்று சம்பிரதாயமான ஒன்றாகவே அமையும். (ம)




# கெய்ல் 'அவுட்'

பாகிஸ்தான் சூப்பர் லீக் தொடரில் அடுத்த வருடப் பருவ காலத்துக்கான ஆட்டங்களில் எந்த அணியாலும் கெய்ல் ஏலத்தில் எடுக்கப்படவில்லை.

ஐ.பி.எல். தொடரைப் போன்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபையும் 'பாகிஸ்தான் சுப்பர் லீக்' என்ற ஒன்றை நடத்தி வருகிறது. இதன் மூன்றாவது சீசன் அடுத்த வருடம் நடைபெறவுள்ளது. இதற்கான வீரர்கள் ஏலம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் 308 வெளிநாட்டு வீரர்கள் உள்பட 501 வீரர்கள் இடம்பிடித்திருந்தனர். இதில் கிறிஸ் கெய்லும் ஒருவர். ஆனால், எந்த அணியாலும் கெய்ல் ஏலத்தில் எடுக்கப்படவில்லை. 2019ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடருக்கு மேற்கிந்தியத் தீவுகள் அணி நேரடியாகத் தகுதிபெறவில்லை. இதனால் அடுத்த வருடம் தகுதிச் சுற்றில் விளையாட வேண்டியிருக்கிறது. அந்த நேரத்தில்தான் பாகிஸ்தான் சூப்பர் லீக் தொடர் நடைபெறவுள்ளது. எனவே உலகக்கிண்ணத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகளுக்காக விளையாடுவதற்கு கெய்ல் சென்றுவிட்டால் பாகிஸ்தான் சுப்பர் லீக்கில் களமிறங்க முடியாத நிலை ஏற்படும். இதைக் கருத்திற்கொண்டே அவரை எந்த அணியும் ஏலத்தில் எடுக்கவில்லை என்று தகவல்கள் வந்துள்ளன. ஊதிய ஒப்பந்த விவகாரத்தில் மேற்கிந்தியத் தீவுகளின் கிரிக்கெட் சபைக்கு எதிராகக் குரல் கொடுத்தமைக்காக அணியில் இருந்து நீக்கப்பட்டிருந்த அதிரடி வீரரான கெய்ல், கடந்த சில வாரங்களுக்கு முன்னரேயே மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)



# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்டில் மத்தியூஸ் பந்துவீச வாய்ப்பில்லை



இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில், இலங்கை அணியின் சார்பாக மத்தியூஸ் பந்து வீசமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் தலா மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட், ஒருநாள், ரி-20 தொடர்கள் நடைபெறவுள்ளன. டெஸ்ட் தொடர் நாளை ஆரம்பமாகிறது. இந்தத் தொடரில் மத்தியூஸ் பந்துவீச வாய்ப்பில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அணி அண்மையில் பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்த போது காயம் காரணமாக குறித்த தொடர்களை மத்தியூஸ் தவறவிட்டிருந்தார். பின்னர் உடற்தகுதியை நிரூபித்து இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் அணியில் மத்தியூஸ் இடம் பிடித்தார். எனினும் அவர் பந்துவீசுவாரா என்பது தொடர்பில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் மத்தியூஸ் பந்துவீச வாய்ப்பில்லை என்று தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை அணியின் பந்துவீச்சுப் பயிற்சியாளர் ரத்னாயக்க இந்தத் தகவலை உறுதிப்படுத்தினார்.

"மத்தியூஸின் உடற்தகுதியில் பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எனினும் அவர் டெஸ்ட் ஆட்டங்களில் தொடர்ச்சியாகப் பந்துவீசினால் காயம் மேலும் வலுப்பெற்று அடுத்தடுத்த தொடர்களில் மத்தியூஸ் விலக வேண்டி ஏற்படலாம். எனவே டெஸ்ட் தொடர் முழுவதும் மத்தியூஸின் பந்துவீச்சைத் தவிர்ப்பது நல்லது என்று முடிவெடுத்துள்ளோம். அனைத்தும் சரியாக அமைந்தால் ஒரு நாள் தொடரில் மத்தியூஸ் பந்துவீச வாய்ப்புள்ளது" என்று ரத்நாயக்க மேலும் தெரிவித்தார். (ம)

# VACANCY
## Assistant Accountant

We are the leading Business Company.
We have a Vacancy for the above position.
With the following Requirements

- ✔ Male or Female
- ✔ Intermediate Professional Accounting Qualification.
- ✔ Fluency in English
- ✔ Atleast 2 years Experience.
- ✔ Ability to Deal with Bank.
- ✔ Ability to Prepare monthly Accounts and Reports
- ✔ Ability to have Knowledge in Import.

Apply to:-
jaffnavacancy@gmail.com


## மரண அறிவித்தல்

### தம்பிஐயா நகுலேஸ்வரன்
**(காந்திமாஸ்ரர், இளைப்பாறிய ஆசிரியர்)**



இணுவில் மேற்கு, இணுவிலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஐயா நகுலேஸ்வரன் (காந்திமாஸ்ரர், இளைப்பாறிய ஆசிரியர்) நேற்று (14.11.2017) செவ வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தொல்புரத்தைச் சேர்ந்த தங்கேஸ்வரி (இளைப்பாறிய ஆசிரியை ) அவர்களின் அன்புக் கணவரும். சிவதீபன் (லண்டன்), நிரோசன் (ஆஸ்திரேலியா) லோகப்பிரதாப் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்..

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**"திருப்பதி"**
**இணுவில் மேற்கு, இணுவில்.**

தகவல்:
**குடும்பத்தினர்.**


**Win Repair**

சகல விதமான குளிரசாதனப் பெட்டிகளும், (A/C) களும் உங்கள் வீடுகளுக்கு வந்து பழுது பார்த்தலும் துரித கதியில் குறைந்த கட்டணத்தில் பூர்த்தி செய்யவும் அழையுங்கள். T. P: 077 9648 942

**VACANCY**

Photoshop Designer,
Type Setter, Video Editor
(வரவேற்பாளர்)
T. P : 077 158 7186, 071 7939 246

**விஷேட பல் வைத்திய சேவை**

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 934 7687(லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

**உதயன்** விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

**O/L 2017 கருத்தரங்கு**

- வணிகக்கல்வியும் கணக்கீடும்
26.11.2017, 8-2 p.m
MR. BALAKAJEN
- கணிதம்
யாழ். கொழும்பு நகரின் முன்னணி ஆசிரியர்
MR. C. K. B. தயாளன்
18/11 (சனி), 19/11 (ஞாயிறு) → 8 - 2 p.m.

Day Class மாணவர்கள், உயர்தரம் கற்றுக்கொண்டு கணித பாடம் எடுக்க வேண்டிய மாணவர்கள். கணித பாடத்தில் சித்தி தேவையான மாணவர்களும் பங்குபற்றலாம்.

இடம் : NEC யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவில் அருகில்)
உங்கள் அனுமதிகளுக்கு.
070 339 6696, 077 749 2794

**அமெரிக்க லொத்தர் இலவச விசா**
உடனடியாக பதிவு செய்யுங்கள்
யாரும் இலவசமாக அமெரிக்கா போகலாம்
ஓரிரு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
0768226243
**V2 TRAVELS**
யாழ்ப்பாணம் 0768226241
கிளிநொச்சி 0768226240
சாவகச்சேரி 0768226242
நெல்லியடி 0776699892
பருத்தித்துறை 0768226230
வல்வெட்டித்துறை 0776697960

**ராசி அதிர்ஷ்டம்**

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 14.11.2017 | 2211 | நீலம் |

சிம்மம்
வெற்றி இலக்கங்கள்: 05 35 44 47
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி: ரூ. 3,432,736/=

2017.11.17 ம் திகதி வெள்ளிக் கிழமை சிவப்பு நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**வெற்றி ஒரு கூரை**

எமது Everest நிலையத்திற்கு இளம் ஆண், பெண்களை அன்புடன் வரவேற்கின்றோம். எங்கள் புதிய பணி ஆரம்பமாகியுள்ளது. புதிய அணியினர் வேலை செய்வதற்கு யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் உள்ள கிளைகள் காத்திருக்கின்றன. எம்மிடம் 100 இற்கும் மேற்பட்ட வெற்றிடங்கள் உள்ளன.

மேலாளர்கள் :- 10 பேர்
உதவி மேலாளர்கள் :-15 பேர்
சந்தைப்படுத்துனர் :-50 பேர்
நிர்வாக பணியாளர் :-05 பேர்
மேற்பார்வையாளர் :-20 பேர்

- வெளிநாட்டு வேலை வாய்ப்பு
- குறுகிய கால பதவி உயர்வு

நேர்முகத்தேர்வுக்கு வருபவர்கள் உங்களுடைய சுயவிவரக் கோவையை கீழ் வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும். இல்லையேல் கீழ் வரும் தொடர்பு இலக்கத்திற்கு தொடர்பு கொள்ளவும்.

077 517 9034, 077 650 7442
077 332 5032
Everest02jaffna@gmail.com


# மரண அறிவித்தல்



## தாமோதரம்பிள்ளை தர்மகுலசிங்கம் (இந்துமதி)

நயினாதீவு 8ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மண்கும்பானில் வசித்து வந்தவரும் தற்போது நல்லூர் இருபாலையை வசிப்பிடமாகக் கொண்டவருமான தாமோதரம்பிள்ளை தர்மகுலசிங்கம் (இந்துமதி) 11.11.2017 சனிக்கிழமை அன்று நயினை நாகபூஷணி அம்மன் திருவடியை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை சின்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான சீவரெத்தினம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும் இந்துமதி(தேவி) யின் ஆருயிர்க் கணவரும் விஜி அரசி, றம்மியா, கஜேந்திரன்(London), காலஞ்சென்ற தினேஷ் மற்றும் வித்தியா (PRO, Northern Central Hospital) ஆகியோரின் அன்பிற்கினிய தந்தையும் சுந்தரலிங்கம், சசிகுமார் ஆகியோரின் பாசமிகு மாமாவும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, தேவராசா மற்றும் நித்தியலட்சுமி(Canada), ராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு அண்ணனும் சந்தான லட்சுமி(London), காலஞ்சென்ற சிவலோகநாதன் மற்றும் சந்திரமகுலேஷ்வரி(London), காலஞ்சென்ற விஸ்ணுமூர்த்தி ஆகியோரின் பாசத்திற்குரிய மைத்துனரும், லக்ஷியா, மதுஷியா, அக்ஷயா, அதிஷயா, அபிஷயா, அகாஷயா ஆகியோரின் அன்பிற்கினிய தாத்தாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15.11.2017) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி கட்டையாலடி இந்துமயானத்துக்கு கொண்டு செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இருபாலைச்சந்தி,**
**பேச்சியம்மன் கோயிலடி, கோப்பாய்.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**தொடர்பு : 077 548 8919**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.